# போதக கரிசனையும்

# ஆலோசனையும்

# Pastoral Care and Counselling

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முகவுரை | 3 |
| 2. | போதக கரிசனை, ஆலோசனைக்கு வேத ஆதாரம்: கடவுள் நம்மை பராமரிக்கிறவர் மற்றும் ஆலோசகர். | 3 |
| 3. | உளவியல் அடிப்படைகள்: தன்னை அறிதல், பிறரை அறிதல், பிறருக்கு உதவுதல். | 16 |
| 4. | போதகரும் சந்திப்பின் ஊழியமும். | 34 |
| 5. | சந்திக்கப்பட வேண்டியவர்கள்: வியாதியுள்ளவர்கள், பிரச்சினையுள்ளவர்கள், தனிமையிலுள்ளவர்கள், சோர்வுள்ளவர்கள், துக்கமுள்ளவர்கள். | 34 |
| 6. | சபைக்கு வராதவர்கள்: சிறைகைதிகள், மருத்துவநிலையத்தில் உள்ளவர்கள், அநாதைகள். | 36 |
| 7. | ஆலோசனைக்கு வருபவர்கள்: இரட்சிக்கப்படாதவர்கள், பின்மாறியவர்கள், சந்தேகமுள்ளவர்கள், குடும்ப பிரச்சினையுள்ளவர்கள், பிள்ளைகள் பிரச்சினை, குடும்பத் திட்டம். | 37 |
| 8. | ஆலோசனை ஊழியத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டியவைகள்: குடும்பப் பிரச்சினை, கடன் பிரச்சினை, பாகப்பிரிவினை, வாடகைப் பிரச்சினை, குழப்பம், கல்யாணம், மனத்தாங்கல். | 40 |
| 9. | ஆலோசகரின் தகுதிகள். | 43 |
| 10. | ஆலோசனைக் கூறுவதில் மனதில் இருக்க வேண்டியவைகள். | 44 |

முகவுரை:

சபைக்கு வருபவர்கள், ஆலயத்திற்கே வராதவர்களைக் குறித்த பாரமுள்ளவர்களுக்கு முக்கியமாக, போதகர்கள், பராமரிப்புக் குழுத்தலைவர்கள் போன்றோருக்கு, போதக கரிசனை மற்றும் போதக ஆலோசனை பாடம் மிகவும் பிரயோஜனமாயிருக்கும். இது அனுபவ ரீதியான பாடம். ஆத்துமாக்களைக் குறித்த பாரமுள்ளவர்களுக்கு அவசியமான ஒரு பாடமாகும்.

<u>இப்பாடத்தில் கீழ்காணும் காரியங்கள் இடம் பெறுகின்றன:</u>

- போதக கரிசனை மற்றும் ஆலோசனை இவைகளுக்கு வேத ஆதாரம்.
- உளவியல் (மனோதத்துவ) அடிப்படைகள்.
- ஆலோசகருக்குரிய தகுதிகள்.
- ஆலோசனை, கரிசனை போன்றவைகளைக் குறித்து கவனிக்க வேண்டியவைகள்.
- போதகரும் சந்திப்பின் ஊழியமும்.
- சந்திக்கப்பட வேண்டியவர்கள்.
- எப்படிப்பட்ட காரியங்களுக்காக ஆலோசனைக்கு வருவார்கள்.
- ஆலோசனை, கரிசனையில் முன்னுரிமை கொடுக்க வேண்டிய காரியங்கள்.

மேலுள்ள தலைப்புகள் வேதாகமத்தின் அடிப்படையில் ஜெபசிந்தையுடன், அனுபவத்துடன் எழுதப்பட்டவை. இது உங்கள் ஊழியத்தில் உபயோகமாக இருப்பதாக.

## போதக கரிசனை மற்றும் ஆலோசனைக்கு வேதாகம ஆதாரம்

ஆதியாகமம் 1:1-ல் "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் உண்டாக்கினார்" என பைபிள் கூறுகிறது. கடவுளுடைய படைப்பே ஆதாம், ஏவாள், பின் சந்தியார் மேல் தேவன் வைத்த கரிசனை, பராமரிப்பை வெளிப்படுத்துகிறது.

<u>கடவுளின் படைப்பை ஒழுங்கானது என்பதை அறிந்து கொள்ளமுடியும்:</u>

- வானம் பூமி…
- சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள்.
- பறவைகள், மீன்கள், மரங்கள், கனிவகைகள், பூக்கள்.
- மனிதன் (ஆதாம்), மனுஷி (ஏவாள்).

ஒருவர் தங்கி வாழ *இடம்* தேவை (பூமி); மூச்சுவிட *காற்று* தேவை (உயிர்வாழ) சாப்பிட *உணவு* தேவை (பராமரிப்பு); சரீரம் தெம்பாக இருக்க *வேலை* தேவை (தேகப்பியாசம்).

கடவுள் ஆதாமையும் ஏவாளையும் ஆசீர்வதித்து, எதை செய்ய வேண்டும், எதை செய்யக்கூடாது என்பதை கூறினார். ஆதாமும் ஏவாளும், தேவனின் கரிசனையையும் எச்சரிப்பையும் மறந்து, விலக்கப்பட்ட விருட்சத்தின் கனியை புசித்தனர். அன்புள்ள தேவன், அவர்களை

மன்னித்து, தோலுடைகளைத் தந்து, அவர்களை பராமரிக்க வாக்களித்தார். கீழ்க்காணும் (செய்திகள்) தலைப்புகள் கடவுளின் கரிசனையையும், பராமரிப்பையும், ஆலோசனையின் அவசியத்தையும் வெளிப்படுத்துகின்றன.

கடவுளின் கரிசனை, பராமரிப்பு மற்றும் வழிநடத்துதல்:

சங்.32:8 – "நான் உனக்குப் போதித்து, நீ நடக்க வேண்டிய வழியைக் காட்டுவேன். உன்மேல் என் கண்ணை வைத்து உனக்கு ஆலோசனை சொல்லுவேன்."

கடவுள் உங்களது ஆசிரியர், அனுதின வழிகாட்டி, ஆலோசகர். ஒரு போதகர் ஒருவருடைய வீட்டிற்குச் சந்திக்கச் சென்றார். அந்த வீட்டில் அநேக வாலிபப் பெண்கள் இருந்தனர். அங்கு வருகை தந்த போதகர்கள் கர்த்தர் நாமத்தில் தீர்க்கத்தரிசனம் உரைத்து, சீக்கிரம் இவர்கள் திருமணம் நடைபெறும் என சொல்லி, தகப்பன் கொடுத்த காணிக்கையுடன் திரும்பிச் சென்றனர். திருமணமே ஒருவருக்கும் நடக்காததால், இனி எந்த போதகராவது தீர்க்கதரிசனம் சொல்ல வந்தால், அவரை துடைப்பத்தால் அடிக்க ஒரு பெண் தயாராக இருந்தாளாம். என்ன பரிதாபம். ஆலோசனை சொல்லுகிற போதகர், தனது வீட்டிலும், பிறருடைய குடும்பங்களிலும் மூன்றுவிதமான பிரச்சினைகளை சந்திக்கலாம்:

1. இரட்சிக்கப்படாத குழந்தைகள் அல்லது ஆவிக்குரிய வாழ்க்கையில் விருப்பம் இல்லாதவர்கள்.
2. மனைவிக்கு, தனது மகன் அல்லது மகள் ஊழியத்திற்கு செல்வது விருப்பமில்லை. பொருளாதார நெருக்கடியே அதற்கு காரணம்.
3. "நான் வேதகல்லூரியில் பயிலாதவன்" அல்லது "மேல்படிப்பு படிக்கவில்லை" போன்றவை.

மனுக்குல வாழ்க்கையின் ஆரம்பத்தில், கடவுளுக்கு உண்மையாக வாழ்ந்தவர்கள் காணப்பட்டனர். வேதாகமத்தில் அநேக சாட்சிகள் உள்ளன. ஏனோக்கு கடவுளுடன் சஞ்சரித்தான். நோவா தேவனுக்காக நீதிமானாக வாழ்ந்தான். ஆபிரகாம் கடவுளின் நண்பனாக இருந்தான். ஈசாக்கு ஜெபவீரனாக இருந்தான். யோசேப்பு, தேவபிரசன்னத்தைக் குறித்த உணர்வுள்ளவனாய், பொல்லாப்பானதை வெறுத்தான். இதனால், யோசேப்பு, "கனிதரும் திராட்சசெடி" என அழைக்கப்பட்டான். "தாவீது தேவனுடைய இதயத்திற்கு ஏற்ற மனிதனாக இருந்தான்." அவன் இரண்டு காரியங்களில் தேவனுக்கு விரோதமாக பாவம் செய்தவன். தேவ இரக்கத்தைப் பெற்ற தாவீது அநேக சங்கீதங்களை எழுதினான். அவன் கடவுளின், இரக்கம், மன்னிப்பு, பாதுகாப்பு, ஆலோசனை போன்றவைகளை வெளிப்படுத்துகிறது.

- **கடவுள் நமது ஆசிரியர்:**

பெற்றோர்கள், வயோதிபர்கள் நம் வாழ்க்கையில் உதவினர். அநேக ஆசிரியர்கள் மூலம் பல பாடங்களை கற்றுக் கொண்டோம். இவ்வுலகிலுள்ள ஆசிரியர்கள் ஒரு சில பாடங்களை மட்டுமே போதிக்க முடியும். ஆரம்ப பள்ளி, உயர்நிலைப் பள்ளி, கல்லூரி, சர்வகலாசாலை போன்றவைகளில் அதற்கேற்ற ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் உள்ளனர். நமது ஆண்டவர்

சிறந்த ஆசிரியர். அவர் எல்லா மக்களுக்கும், எல்லா காலத்திலும் போதிக்க வல்லவர். ‘‘இருக்கிறவராக இருக்கிறேன்’’ என்று அறியப்பட்டவர் (நிகழ்காலம்). யாத்.6:2 ‘‘நான் ஆபிரகாமுக்கு முன் இருக்கிறேன்.’’ அவர் நம்மை மன்னிக்கிறவர் - வ.1-5. அவர் நமது பாதுகாவலர் - வ.7.

(a) *அவர் பிரயோஜனமானவைகளை போதிக்கிறவர்:* ஏசாயா 48:17

இயேசு மார்த்தாளை நோக்கி, ‘‘தேவையானது ஒன்றே’’ என்று கூறினார். அவர் வனத்தின் மூலமாக, பிரசங்கம் மூலமாக போதிக்கிறவர். எனது 42 வருட கால ஊழியத்தில் வேதாகமம் எனக்கு அதிகமாக உதவி செய்துள்ளது.

(b) *நாம் அவரிடம் கேட்க வேண்டும்:* சங்.143:10

‘‘உமக்குப் பிரியமானவைகளை செய்ய எனக்கு பொதித்தருளும்.’’ ‘‘நீ என்னை நோக்கிக் கூப்பிடு.’’ எரே.33:3.

(c) *நாம் தினமும் அவரிடம் கேட்க வேண்டும்:* சங்.90:12

‘‘எங்கள் நாட்களை எண்ணும் அறிவை போதித்தருளும்.’’ ஏசாயா 50:4 – ‘‘காலைதோறும் என்னை எழுப்புகிறார்.’’ யோவான் 14:26 – ‘‘சத்திய ஆவியாகிய… தேற்றரவாளனை தந்தருளுவார்.’’ அவர் நம்மை எழுப்புகிறவர், போதிக்கிறவர், கல்விமானாய் மாற்றுகிறவர். நாம் மாணவர்களாய் மாற வேண்டும், அவர் நமது ஆசிரியர் என்ற உறவில் அமர்ந்து, கற்றுக்கொள்ளுதல். இம்மனப்பான்மை நல்லது.

- **கடவுள் நமது அனுதின வழிகாட்டி:**

இமயமலை ஏறுபவர்கள், சுற்றுலா செல்பவர்கள் வழிகாட்டிகள் உதவியுடன் செல்வர். வாகன ஓட்டுனர்கள் சரியான பாதையில் வழிகாட்டக்கூடிய வரைபடத்துடன் (சுழயன ஆயி) செல்வர். டூரிஸ்டுகளுக்கு வழிகாட்டி புத்தகமும், கப்பல் ஓட்டுவர்களுக்கு திசைகாட்டியும் அவசியம். படைப்பின் காலம் முதல் அவருடைய மக்களை வழிநடத்தியுள்ளார். ‘‘ஆபிரகாம் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருந்தான்.’’ மலேசியாவிலுள்ள ஒரு குறிப்பிட்ட காட்டில், ஒருவர் உள்ளே சென்றால், அவர் திரும்பி வர முடியாது. சாரணர் (ளுஉழரவள) பயிற்சி பெறுபவர்கள், வழியை சுலபமாக அறிய, வெள்ளைத் துண்டுகணிகளை மரங்களில் கட்டுதல், சிறு செடிகளில் முடிச்சு போடுதல் போன்றவைகளை அறிந்திருப்பர்.

(a) *அவருக்குப் பயந்தவர்களுக்கு வழியைக் காட்டுகிறவர்:*

‘‘கர்த்தருக்குப் பயந்தவன் யார்? தாம் தெரிந்து கொண்டவர்களுக்கு அவர் தமது வழியை போதிப்பார்.’’ சங்.25:1.

(b) *அவரை, நாம் நமது வழிகளெல்லாம் நினைக்க வேண்டும்:*

“உன் வழிகளெல்லாம் அவரை நினைத்துக்கொள். ஆவா் உன் பாதைகளை செவ்வைப் பண்ணுவாா்.” நீதி.3:5-6. 1964-ல் நான் வேதகல்லூாயில் படிக்கையில் எனது முதல்வா், தனக்கு விருப்பமான வசனமாக போதித்தாா். யோவான் 16:13.

(c) *அவா் நம்மை பரிசுத்தாவியானவா் மூலம் வழிநடத்துவாா்:*

அவா் நம்முடன் தொடா்ந்து வருபவா். 1968-ம் ஆண்டு, ஒரு குறிப்பிட்ட ஆலயம் செல்ல ஒருவரிடம் வழிகேட்டேன். அவா் ஊமை என்பதை, அவரது செய்கைகள் மூலம் அறிந்தேன். அதன் விளைவு தவறான இடத்திற்கு சென்றேன். இன்று அநேகா் கள்ளத் தீா்க்கதரிகள் மூலம், வழிதவறுகின்றனா். நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். கடவுளிடமிருந்து வரும் தீா்க்கதரிசனம் வேத வசனத்தின் அடிப்படையில் வரும். அது உண்மையாக நிறைவேறும். “என்னுடைய வாா்த்யுள்ளவனோ என் வாா்த்தையை உண்மையாய்ச் செய்வானாக.” எரே.23:28.

இதில் பிரயாணி வழிகாட்டி உறவு தேவை. கேட்டல், பின்பற்றுதல், பாா்த்தல் கடைபிடித்தல் இதில் அவசியம்.

- **கடவுள் நமது ஆலோசகா்: நம்பிக்கைக்கு பாத்திரமானவா்:**

ஆண்டவா் மிகப் பெரிய ஆலோசகா். உளவியல் அறிஞா்கள் மனநிலை வைத்தியா்கள் போன்றோா் பாதிக்கப்பட்ட நபரிடம், பல கேள்விகள் மூலம், ஆலோசனை கூறுவா். ஒரு உளவியல் அறிஞா், தனது மனைவியை கொன்றுவிட்டு, தன்னிடம் ஆலோசனைக்கு வந்தவரை திருமணம் செய்தாராம். இயேசுவுக்கு, “*ஆலோசனை கா்த்தா்*” என்ற பெயரும் உண்டு. ஏசா.9:6. கண்கள் உடலுக்கு ஒளியைபோல இருக்கிறது. கடவுடைய “கண்கள்” “நான் உன்மேல் என் கண்ணை வைத்து” என்பது; அவா் நமக்கு அருகில் இருப்பதையும் அரவது கரிசனையையும் காட்டுகிறது. இராணுவத்தில், இருக்கும் போா் வீரன், யுத்த களத்தில் இருக்கையில் (ருயடமநை வயடமநை) கைதொலைபேசி மூலம், தனது இராணுவ தலைவரிடமிருந்து ஆலோசனைகளை பெறுவாா். கடவுள் தமது வாா்தை மூலம் ஒருவரை வழிநடத்துகிறாா்.

(a) *அவா் ஆலோசனையில் பெரியவா்:*

எரேமியா 32:19 – “யோசனையில் பெரியவா்.” சுரியான போதகரிடம் ஆலோசனைக்குச் செல்லவேண்டும். 1970 ஒருவருடைய தவறான ஆலோசனையினால், நான் மேற்படிப்புக்கு போகாதபடி நான் தடுக்கப்பட்டேன். அதுவும், பின்னா் நன்மைக்கு ஏதுவாயிற்று.

(b) *அவருடைய ஆலோசனை ஒருபொழுதும் தவறாது:*

கலா.1:16-17 – “நான் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் ஆலோசனை பண்ணாமல்” என பவுல் கூறுகின்றாா். அவா் அரபி தேசம் சென்று தேவ வழிநடத்துதலுக்காக ஜெபத்தில் காத்திருந்தாா்.

(c) *அவருடைய ஆலோசனை, நாம் இவ்வுலகை விட்டு பிரியும் வரை தேவை:*

"உமக்கு பிரியமானதைச் செய்யும்படி எனக்கு போதித்தருளும்… உமது நல்ல ஆவி என்னை செவ்வையான வழியில் நடத்துவாராக!" சங்.143:8, 10.

அகஸ்டின் என்பவர் தனது தாயின் ஜெபத்தினால் இரட்சிக்கப்பட்டார். அவர் ஆரம்ப வாழ்க்கையில், தத்துவ ஞானியாகவும், இச்சைக்குரியவராகவும் வாழ்நதார். அவர் இரட்சிக்கப்பட்ட பின்னர் புதிய மனிதனார். ஒருநாள் அவர் வீதியில் செல்கையில், அவருடைய காதலி, "அகஸ்டின், அகஸ்டின்" என கூப்பிட்டாள். தனது பழைய வாழ்க்கைக்குச் செல்ல விரும்பாத அகஸ்டின், திரும்பிப் பாராமல் சென்றார். அவரோ, "நான் அல்ல, நான் அல்ல" என்று கூறி தன்னை காத்துக்கொண்டார். சங்.32:8-ல் உள்ள வசனம், தான் சாகும்வரை, அவருக்கு விருப்பமான வசனமாக இருந்ததாம். அவர் தனது வாழ்க்கையை கர்த்தருக்கு முற்றிலும் அர்ப்பணித்ததால், அவரை கடவுள், வேதவார்த்தை, பரிசத்தாவியினால் வழிநடத்தினார்.

- **விசாரிக்கும் தேவன்:**

சங்.115:12-15 "கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார். அவர் நம்மை ஆசீர்வதிப்பார்."

நம் வாழ்கின்ற உலகத்தில் மக்களை எங்கும் காணலாம். உலகத்தின் வரலாறு ஆதாம் மூலம் ஆரம்பித்தது. பின்னர் அவனுக்கு ஒரு துணை கொடுக்கப்பட்டாள். அவர்களுக்கு இரு குமாரர்கள் பிறந்தனர். ஒரு சகோதரன் தனது ஒரே இளைய சகோதரனை கொன்றதால், தேவபிரசன்னத்தையும், பெற்றோர்களையும் விட்டு விலகிச் செல்ல நேரிட்டது.

மனுமக்கள் அதிகரிக்க ஆரம்பித்த பொழுது, அவர்களுக்கு வேலைக்காரர்கள் இருந்தனர். கோத்திரங்களாக, கிராமங்களிலும், ஊர்களிலும், பட்டணங்களிலும் வாழ ஆரம்பித்தனர். மக்கள் இன்று ஒன்றுகூடி வாழ விரும்புகின்றனர். "மனிதன் சுயாதீனனாக பிறந்தான். ஆனால் அவன் எங்கும் சங்கிலியினால் இணைக்கப்பட்டுள்ளான்" என்று பிரான்ஸ் தேச எழுத்தாளர் கூறியுள்ளார். ஒருவருக்கு பணம், புகழ், சுகம், சொத்து இருக்கும்வரை அவரிடம் சரிசனையாக இருப்பர். கடவுள் ஒருவர் மாத்திரம், ஒருவருக்கு ஒன்றுமே இல்லாத நிலையிலும் அவனிடம் வருகிறார்.

- **கடவுள் தமது உள்ளத்தின் ஆழத்திலிருந்து நினைவு கூறுகின்றார்: யாத்.2:24–25.**

யோசேப்பின் காலத்தில் இஸ்ரவேலர்கள் ஆசீர்வாதத்தை அனுபவித்தனர். காலப்போக்கில் இஸ்ரவேலர், பலுகி எண்ணிக்கையில் அதிகரித்தனர். "யோசேப்பை அறியாத ஒரு இராஜா தோன்றினான்" என யாத்.1:8-ல் கூறுகிறது. கடவுளையும், அவருடைய செயல்களையும் அறியாத ஒரு சந்ததியையும் நாம் சந்திக்கக் கூடும். "தேவனையும் அவருடைய செயல்களையும் அறியாத (மக்கள்) ஒரு சந்ததி தோன்றியது" நியா.2:10.

(a) *அடிமைத்தனம்* (Bondage):

இஸ்ரவேலர் இப்பொழுது அடிமைத்தனத்தில் தவித்தனர். அவர்களுக்கு சரிசனை காட்ட ஒருவரும் இல்லை. அவர்களுக்கு கொடுக்கப்பட்ட தண்டனையோ கொடூரமானது. மரணத்தை சந்தித்தனர். அவர்களுக்காக உதவி செய்ய நுகர்வோர் நிலையம், காவல் துறை, நீதிமன்றம் போன்றவைகளில் இருந்தவர்கள் எகிப்தியரே. எனவே இஸ்ரவேலருக்கு உதவி என்பது கிடைக்காத ஒன்றாயிற்று. குறைந்த சம்பளம். கடினமான வேலை. கடவுளை ஆராதிக்க பலவிதமான தடைகள் போன்றவை காணப்பட்டன. "பார்வோன்" என்பது சாத்தானடைய ஆட்சியை குறிக்கும். உங்களுடைய அடிமைத்தனம் எது? ஜெபிக்க முடியாத நிலையா? கடவுளின் சத்தத்தைக் கேட்க முடியாநிலையா? பழக்க வழக்கங்களால் பாதிப்பா? கடன் தொல்லையா?

(b) *மலட்டுத்தன்மை* (Barrenness) ஆதி.30:22 "கர்த்தர் ராகேலை நினைத்தருளினார்."

ராகேல் யாக்கோபால் அதிகமாக நேசிக்கப்பட்டவள். இருப்பினும் அவள் பிள்ளையில்லாத மலடியாக இருந்தாள். ஆண்டவருடைய பிள்ளைகள் அநேகர் ஆவிக்குரிய பிள்ளையில்லாத மலடிகளாக இருக்கின்றனர். நமது உறவினர்களுக்கு, கடவுளுடைய அன்பை அறிவிப்பதில் எவ்வளவு பெரிய ஆசீர்வாதம். உங்களுக்கு ஆவிக்குரிய பிள்ளைகள் உள்ளனரா?

- **கடவுள் பரலோகத்திலிருந்து நமக்கு பலனளிக்கிறவர்:**

இன்று 'ஆசீர்வாதம்' என்றவுடன் மக்கள் நினைப்பதெல்லாம் வீடு, வேலை, குடும்பம், பிள்ளைகள், ஆஸ்தி, அந்தஸ்து போன்றவைகள்தான். ஆவிக்குரிய ஆசீர்வாதங்களாகிய இரட்சிப்பு, மகிழ்ச்சி, பரிசுத்தாவியின் அபிஷேகம், ஐக்கியம், தேவபிரசன்னம் போன்றவைகளாகும். அதுமட்டுமல்ல பொருளாதார ஆசீர்வாதங்களையும் தருவார். நாமும் பிறருக்கு உதவி செய்பவர்களாய் இருக்க வேண்டும். கடவுள் ஆபிரகாமிடம், "நான் உன்னை ஆசீர்வதிப்பேன்" என்றார் (வருங்காலம்). "அவனை அவர் ஆசீர்வதித்தார்" (கடந்தகாலம்). ஆதி.24:1 "எனது எஜமானை கடவுள் ஆசீர்வதித்திருக்கிறார்" என்றான் ஆபிரகாமின் வேலைக்காரன் எலியேசர் (நிகழ்காலம்). ஆதி.24:35. ஆரோக்கியம், சுகம், மனச் சமாதானம், கடவுளைக் குறித்த அறிவு, செழிப்பு, நம்பிக்கை போன்றவைகளும் கடவுள் கொடுக்கிறார்.

(a) *வாக்குத்தத்தத்தின் பிள்ளைகள்*: (சங்.115:12)

மனதிலே விருத்தச்சேதனம் செய்யப்பட்டவர்கள் நாம். கடவுள் யாக்கோபை ஆசீர்வதித்தார், புதிய பெயரை சூட்டினார். புதிய சுபாவத்தை இது குறிக்கும்.

(b) *ஊழியக்காரரின் குடும்பம்*: சங்.115:12.

ஊழியத்தில் இருப்பவர்களை இது குறிக்கின்றது. நிபந்தனை: கடவுளுக்கு பயந்து, தீமையை விட்டு விலகு; அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு, பெற்றோரை கனம் பண்ணுங்கள்.

- **கடவுள் நம்மை கனம் பண்ணுகிறவர்:**

(ய) *பெரியவர்களை ஆசீர்வதிக்கின்றார்:* சங்.115:13 "பெரியோரை ஆசீர்வதிப்பார்."

வயோதிபர்களை முக்கியமாக முதிர்ச்சியடைந்தவர்களை ஆசீர்வதிக்கின்றார்.

(டி) *சிறியோரை ஆசீர்வதிக்கின்றார்:* "சிறியோரை ஆசீர்வதிப்பார்" சங்.115:14-15.

வளர்ந்துகொண்டிருக்கும் சிறியோரை பரலோகத்திலிருந்து ஆசீர்வதிக்கின்றார்.

2003-ம் ஆண்டு டிசம்பர் 20-ம் தேதி, மதுரையிலிருந்து கொடைக்கானல் சென்றேன். எங்கள் மகன் யோனத்தான், பெங்களுரிலிருந்து கிறிஸ்துமஸ்காக இங்கு வந்தான். எங்கள் மகள் எஸ்தர் ரெபேக்காள் வேலூரிலிருந்து அழைத்துவர, யோனத்தான் 25-ம் தேதி மாலை சென்னை சென்றான். 26-ம் தேதி இரவில் 9:30 மணிக்கு, யோனத்தான் அப்போலோ ஆஸ்பத்திரியில் இருப்பதாக, தொலைபேசி மூலம் தகவல் வந்தது. அது எனக்கு மிகவும் கடினமான சூழ்நிலையாக காணப்பட்டது. இரவு நேரத்தில் பஸ் வசதி இல்லை. ஒரு காரில் 11:30மி கொடைக்கானலிருந்து புறப்பட்டு 12:30 மணிக்கு வத்தலகுண்டு சென்று, அங்கிருந்து பஸ் மூலம் காலை 4:00 மணிக்கு திருச்சி சென்றேன். உள்ளத்திலே போராட்டத்தின் மத்தியிலே ஒருவருக்கு எனது சாட்சியை பகர்ந்தேன். அதற்கு உதவியாக, சென்னையிலிருந்து அப்போலோ செல்ல அந்த நபர் உதவினார்.

சர்வ வல்லமையுள்ள தேவனின் உதவியை நாடினவனாக அங்கு சென்றேன். நீரழிவு வியாதியினால் மகிவும் மோசமடைந்த எனது மகனை எனது மகள் நர்ஸ், எனவே அவளது உதவியுடன், ஒரு வாடகை காரில் எட்டு மணிநேரம் பிரயாணம் செய்து மதுரையிலுள்ள ஒரு தனியார் மருத்துவ நிலையத்தில் யோனத்தானை வைத்தோம். எனக்குள்ளே பல கேள்விகள் ஏன்? ஏன்? என எழும்பின. 28.12.2003 எங்களது கலியாண நாள். அது ஞாயிற்றுக் கிழமையும்கூட. அன்று ஆலய ஆராதனை நடத்தவும் செல்ல முடியவில்லை. 31.12.2003 அன்று "ஙயவஉா ைபாவ" புதுவருட இரவு ஆராதனை நடத்தவும் போகக்கூடாத நிலை.

நான், வெளியே நடந்து சென்றபொழுது தன்னார்வ ஊழியக்காரிகள் கைப்பிரதித்தாள்களை விநியோகம் செய்தனர். அவர்களுடன் பேசுகையில், தங்களது மகன் ஆஸ்பத்திரியில் படுத்தப்படுக்கையில் இருக்கையில், அவர்களது போதகர் ஆலயத்தில் ஜெபிக்கையில் அவன் எழுந்து நடந்தான் என சாட்சி பகர்ந்தனர். அது எனக்கு மிகுந்த நம்பிக்கையை கொடுத்தது. டிசம்பர் 31-ம் தேதி பகலில் மருத்துவர், எங்களை கொடைக்கானலுக்குப் போக அனுமதித்தார். கர்த்தர் எங்கள் மகனுக்கு சுகத்தைக் கொடுத்ததால், 31-ம் தேதி இரவில் பழையவருட, புதுவருட ஆராதனையை நடத்த உதவி செய்தான். 2004-ம் ஆண்டு ஜனவரி முதல் தேதி மாலை தொலைகாட்சியில் (T.V.) புதுவருட செய்தி கொடுக்க தேவன் கிருபை செய்தார். நமது வாழ்க்கையில் எல்லாமே இருளாக தோன்றும்பொழுது, கர்த்தர் நமது நெருக்கத்திலும் துயரத்திலும் சரியான நேரத்தில் உதவி செய்ய வருகின்றார்.

- **கடவுள் நம்மை கவனிக்கிறவர்:**

உபா.11:12; லேவி.26:9; "உன் தேவனாகிய கர்த்தர் விசாரிக்கிற தேசம்."

பிறந்தக் குழந்தையை, அதன் தாய் பராமரிக்கிறாா். தாய் இல்லாத நேரத்தில், ஆயா மூலம் அக்குழந்தை பராமரிக்கப்படுகின்றாள். பிள்ளை விழாமல் இருக்க, பூச்சி போன்றவைகளை சாப்பிடாமல் இருக்க ஆயா உதவியாயிருக்கிறாள்.

பள்ளிக்கூடத்தில், பிள்ளைகளை கவனிக்கின்றனா். வாலிப பருவத்தில் பெற்றோர்கள் ஒரு ஏற்றத்துணைவியை, மகனுக்கு, அல்லது மகளுக்கு வேண்டுமென விரும்புகின்றனா். "எனது மகளை, ஒருவருக்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டல், நான் நிம்மதியாய் இருப்பேன்" என ஒரு தகப்பன் கூறினாா். "எனது மகனுக்கு, ஒரு நல்ல மனைவியை மணம் செய்து கொடுத்தாள், மனைவி அவனை கவனிப்பாள், கெட்ட சுபாவத்தை மாற்றிவிடுவாள்" என்றாள் ஒரு தாய்.

பரிசுத்தாவியானவா் கூறுகிறது என்னவெனில், வருடத்தின் ஆரம்பமுதல், அவருடைய கண்கள் நம்மேல் இருக்கும் என்பதாகும்.

கா்த்தரின் கண்கள் கீழ்க்கண்டவைகளை போதிக்கின்றன:

கடவுளின் பிரசன்னம்: யாத்.33:14- "எனது பிரசன்னம் உன்னுடன் செல்லும்" அவா் தமது பிள்ளைகளை கவனித்து வருகின்றாா். வனாந்திர பிரயாணத்தில் கூட இருப்பேன் என தேவன் வாக்களித்தாா்.

*பாதுகாப்பு*:

"உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சா்வ வல்லவரின் நிழலில் தங்குவான்." சங்.91:1, 11. "ஆபத்துக் காலத்தில் என்னை நோக்கி கூப்பிடுவான். நான் அவனை தப்புவிப்பேன்" என்கிறாா் தேவன்.

பள்ளிக்கூடம் சென்ற ஒரு பையனை, இன்னொரு மாணவன் தினமும் தொல்லை கொடுத்துக் கொண்டே இருந்தான். பாதிக்கப்பட்ட மாணவன் அழுது கொண்டே சென்று தகப்பனிடம் முறையிட்டான். மறுநாள், மகன் பள்ளிக்கூடம் செல்கையில், அவனை பின் தொடா்ந்து சென்றாா் அவன் தகப்பன். வழக்கம்போல், அந்த மாணவனை தொல்லைக் கொடுக்க, குறும்புக்கார மாணவன் எத்தனிக்கையில், திடீரென, தகப்பனாா் கிட்டே நெருங்கிய பொழுது, அந்த பையன் ஓடிப்போய்விட்டான். இதைப் போன்றே நமது அருகே இருக்கும் தேவன், நம்மை கண்காணித்து வருகின்றாா்.

*பலம்*:

2 நாளா.16:9 "கா்த்தருடைய கண்கள் தமது வல்லமையை காண்பிக்கும் பொருட்டு பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கின்றன." உத்தமமாயிருக்கிறவா்களுக்கு கா்த்தா் தமது வல்லமையை விளங்கப்பண்ணுவாா்.

- **கடவுளின் பராமரிப்பு:**

லேவி.26:9; சங்.78:24-25 "வானத்தின் தானியத்தை அவா்களுக்குக் கொடுத்தாா்."

கடவுள் தமது தேவைகளை சந்திக்கிறவர். தமது மக்களை 40 ஆண்டுகள் போஷித்தார். அவர் கொடுத்த உணவு, “தூதர்களின் அப்பம் என அழைக்கப்பட்டது.” இன்றும்கூட தேவன் தமது மக்களுக்கு ஆவிக்குரிய, சரீர உணவுகளைத் தருகின்றார்.

(ய) *சரீர உணவு*: “அன்றன்றுள்ள ஆகாரத்தை எங்களுக்கு இன்று தாரும்.” மத்.6:11; சங்.33:19.

(டி) *ஆவிக்குரிய உணவு*: “மனிதன் அப்பத்தினால் மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து வரக்கூடிய ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்.” மத்.4:4

(உ) *சரீர சுகமாகிய உணவு*: “அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களை குணமாக்கினார்.” சங்.107:20. இது ஆரோக்கியத்தை விளக்குகின்றது.

♦ **கடவுளின் பூரண வழிநடத்துதல்:**

“நான் உங்களை கழுகளின் செட்டைகளில் சுமந்து கொண்டு வந்தேன்.” யாத்.19:4.

இது கடவுளின் கவனிப்பையும், கரிசனையையும் விளக்குகிறது. “உன் தேவனாகிய கர்த்தர் உனக்கு முன்பாக கடந்து போகின்றவர்.” உபா.2:7; 9:3.

1) மேகஸ்தம்பம் - “அவருடைய நிழல்”

2) அக்கினி ஸ்தம்பம் - “பரிசுத்தாவியானவர்”

3) மக்கள் (தலைவர்கள்) – “வழிநடத்த”

♦ **கடவுளின் எச்சரிப்பு:**

உபா.11:13 – “உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் அன்பு கூர்ந்து, முழு இதயத்தோடும் அவரை சேபிப்பாயாக.” “கடவுள் என்னை புறக்கணித்துவிட்டார்.” “அவர் எனக்கு உதவி செய்யவில்லை.” “அவர் என்னை கைவிட்டுவிட்டார்.” இவ்விதமாக மக்கள் கடவுளைக்குறித்து குறைகூறுவதை நாம் காணலாம். கடவுள் நம்மை கைவிடுவார் என்றால் இவ்வுலகில் நமக்கு வேறு வழியே கிடையாது. உபா.11:13. நாம் செய்ய வேண்டியவை.

*கடவுளிடம் அன்பு கூறுங்கள்*: “முழு இதயத்தோடும், முழு ஆத்துமாவோடும், முழு ஆவியோடும்.”

*கடவுளுக்கு செவிமடுங்கள்*: “அவருடைய சத்தத்திற்கு செவிமடுங்கள்.”

*கடவுளையே சார்ந்திருங்கள்*: அனுதினமும் அவரை பின்பற்றுங்கள். ஒரு ஜப்பானிய பெண்மணி, தனிமையிலே, அவல நிலைமையில் காணப்பட்டார். உதவியை நாடி ஒரு சிறு கோவிலுக்குச் சென்று, அங்கு கிடைத்த ஒரு பொட்டலத்தை திறந்தாள். “உனக்கு எந்த உதவியும் கிடையாது. உனது நிழலில் சாய்ந்து முன்னே செல்” என்று எழுதப்பட்டிருந்தது. இதினிமித்தம் மிகவும் மனமுடைந்தாள். எங்கேயாவது ஆறுதல் கிடைக்குமா என்று பகலில் சூரியனையும், இரவில் சந்திரனையும் உற்றுநோக்கினாள். ஒரு நாள், “உன்னை நேசிக்கிற ஒரு பரலோகப்பிதா இருக்கிறார். அவர் உன்னை கவனிக்கிறவர். உன்மேல் அன்புகூர்ந்து இயேசு கிறிஸ்துவை இவ்வுலகில் அனுப்பினார். அவரை நீ நம்பி, ஏற்றுக் கொண்டால், அவர் உனக்கு சமாதானத்தையும், மகிழ்ச்சியையும், நித்திய ஜீவனையும் அருளுவார்” என ஒரு நபர் அவளிடம் கூறினார்.

அவ்வார்த்தைகளை கேட்ட மாத்திரம், ஆனந்தக் களிப்புடன், ‘‘இறுதியாக நான் அவரை காண்டடைந்தேன்’’ என ஆர்ப்பரித்தார்.

## துக்கம் சந்தோஷமாய் மாறுதல்:

இவ்வுலகில் மக்கள், மகிழ்ச்சியாக, ஆரோக்கியமாக இருக்க விரும்புகின்றனர். திருமணம் நடைபெறும்பொழுது, அங்கே மகிழ்ச்சி காணப்படுகிறது. ‘‘எனது பிள்ளைக்கு திருமாகவில்லையே’’ என கலியாணத்திற்கு வந்துள்ள தாய் துக்கத்தோடு காணப்படலாம். சில வீடுகளில் ஆண்பிள்ளை பிறந்தால் மகிழ்ச்சி காணப்படும். பெண் குழந்தை பிறந்தாளோ துக்கம் தலைவிரித்தாடும். வாழ்க்கைப் பாதையில் இரண்டு காரியங்கள் மாறி மாறி வரும் என்பதை ஒருவர் உணரவேண்டும். இவ்வுலகில் வெளிச்சம் இருள், நன்மை தீமை, ஆசீர்வாதம் சாபம், ஜீவன் மரணம், மகிழ்ச்சி துக்கம், என மாறி மாறி வருகின்றன.

யோவான் 14-ம் அதிகாரத்தில், இயேசு இவ்வுலகை விட்டு கடந்து செல்வதை, சீஷர்களிடம் கூறினார். கலக்கமடைந்த அவர்களிடம், மனம் கலங்க வேண்டாம் எனக் கூறினார். தங்களிடம் எப்பொழுதும் இருக்கும் தேற்றரவாளனைக் குறித்து கூறினார். வெற்றிகரமான ஊழியத்தின் மத்தியில் சீஷர்கள், பாடுகள், துக்கங்கள், உபத்திரவங்கள், இரத்த சாட்சியாய் மரிப்பார்கள் என்பதை இயேசு கிறிஸ்து அறிந்திருந்தார். யோவான் 16-ம் அதிகாரத்தில், இவ்வுலகில் பரிசுத்தாவியானவரின் ஊழியத்தைக் குறித்து கூறினார். அவர்களின் பாடுகளைக் குறித்து முன்னறிவித்தார் (யோ.16:1-2).

## இன்று காணப்படுகின்ற துக்கங்களுக்கு காரணங்கள் உள்ளன:

அறியாமை, பொறுபற்றத் தன்மை, கசப்பான உணர்வுகள், எரிச்சல், ஒழுங்கற்ற காரியங்கள் நிமித்தம் துக்கங்கள் வரலாம்.

- பிணி துக்கத்தை கொண்டுவருகிது:

வியாதி ஒரு நோயாளியை துக்கப்படுத்துக்கிறது. பெற்றோரையும், பிள்ளைகளையும், உறவினர்களையும் துக்கத்தில் ஆழ்த்துகின்றது. வியாதிக்கு மருந்து உண்டு ஆனால் துக்கத்திற்க மருந்து இல்லை. யோபு என்ற பக்தன் மனதிலும் உடலிலும் வியாதிப்பட்டான். அவன் கடவுளுக்கு நன்றியறிதல் உள்ளவனாக இருந்தானே ஒழிய அவன் துக்கமடையவில்லை. அவனுடைய மனைவியும், நண்பர்களும் யோபுவை துக்கப்படுத்தினர். யோபு 2:7. சாத்தான் யோபுவை கொடிய பருக்களால் வாதித்தான். ‘‘எனக்கு சுகமுமில்லை, இளைப்பாறுதலுமில்லை, அமைதலுமில்லை; எனக்குத் தத்தளிப்பே நேரிட்டது’’ என்றான். யோபு 3:26. அவனுடைய வியாதி இரணமுள்ளதாகவும், நாற்றமுள்ளதாகவும் இருந்தது. யோபு 7:5; அவனுடைய சகோதரர்களும், உறவினர்களும் அவனை கைவிட்டனர். யோபு 19:13-15; அவனுடைய மனைவி அவனை வெறுத்தாள். யோபு 19:17.

சார்லஸ் ஸ்பர்ஜன் என்பவர் இங்கிலாந்தில் ஊழியம் செய்த தலைசிறந்த பிரசங்கியார். ஆவர் அரண்மனையை சேர்ந்த இராஜ குடும்பத்திற்கும் பிரசங்கியாக இருந்தவர். ஸ்பர்ஜன் மனைவியோ 25 வருடங்களாக வியாதிப் படுக்கையில் இருந்தார். “எனது துக்கத்திலே ஆண்டவரிடம், என் கர்த்தர், அவருடைய பிள்ளையுடன் ஏன் இவ்வாறு அனுமதிக்கின்றார்” என என் இதயத்தில் கேட்டேன் என்றார் ஸ்பர்ஜன்.

- பேராபத்து துக்கத்தை கொண்டு வருகின்றது:

அது உபத்திரவங்களாக இருக்கலாம். பிள்ளைகள், வாலிபர்கள், பெற்றோர்கள் மற்றும் பலர் ஆபத்திலே வாழ்ந்துள்ளனர். பிள்ளைகள் முன்னே பெற்றோர்கள் கொல்லப்பட்டதால், அது துக்கத்தை கொண்டு வந்துள்ளது. யோவன் 16:20. இரட்சிக்கப்பட்டவர்களால், குடும்பத்தினரிடையே துக்கம் ஏற்பட்டுள்ளது. பின்மாற்றக்காரரும் துக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். இரட்சிக்கப்படாதவர்கள், பின்மாற்றக்காரர்களுக்கு எவ்வித வருங்கால நம்பிக்கை இல்லாததால் துக்கம் ஏற்படுகின்றது.

> *“கடவுள் நமது துக்கத்தில் இருக்கின்றார். வறுமையின் துக்கத்தை உணருகிறீர்களா? இயேசுவுக்கோ தலை சாய்க்க இடமில்லை. உறவினர்களை இழந்ததால் துக்கமா? இயேசு கிறிஸ்து லாசருவின் கல்லறையில் அழுதார். நீதியினிமித்தம் குறைகூறப்பட்டு அது உங்கள் ஆவியை கலக்கியதா? “அவமானம் எனது இதயத்தை தொறுக்கியது” என வேதம் கூறுகிறது. நீங்கள் காட்டிக் கொடுக்கப்பட்டீர்களா? இயேசு கிறிஸ்துவும் தனது நெருங்கிய நண்பனால் முப்பது வெள்ளிக் காசுக்காக காட்டிக் கொடுக்கப்பட்டார்.”*

- பிரிவு (மரணம்) - துக்கத்தை கொண்டு வருகிறது:

யாக்கோபு மரித்தபொழுது யோசேப்பு துக்கத்தால் அழுதான். ஆதி.50:10-11. சூனேமியாள் என்ற பணக்கார பெண்மணி எலிஷா தீர்க்கதரிசியை கனம் பண்ணி, அவனுக்கு ஒரு மேல் அறையை தங்குவதற்கென கொடுத்தாள். (2 இராஜா.4:9). கர்த்தர் அவருக்கு தனது கணவன் மூலம் ஒரு மகனைத் தந்தார். தீர்க்கதரிசியின் வார்த்தையின்படி அவள் ஆசீர்வாதம் பெற்றாள். ஆனால் அவனோ, சிலகாலம் சென்ற பொழுது “தலைநோவுகிறது” என்று சொல்லி மரித்தான். இதை அறிந்த எலிஷா தனது வேலைக்காரனிடம், “அவளைத் தடுக்காதே. அவளுடைய ஆத்துமா துக்கத்தால் நிரம்பியிருக்கிறது” என்று கூறினான்.

“துக்கம் என்னும் மண்வெட்டியால் மகிழ்ச்சி என்னும் கிணறுகளை கடவுள் அடிக்கடி தோண்டுகிறார்” என்றார் ஒருவர்.

ஆதாமின் கீழ்ப்படியாமை மரணத்தை, இவ்வுலகில் கொண்டு வந்தது. ஜீவனின் அதிபதியாகிய இயேசு கிறிஸ்து மரணத்தை சிலுவையிலே ஜெயித்தார். ஒருவர் கிறிஸ்துவில் மரித்தால் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள். ஏனெனில் ஒரு நாளில் அவர்களை சந்திப்பீர்கள். உங்களை ஆவிக்குரிய மரணத்திலிருந்து எழுப்பியதால், கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்”.

அக்கிரமங்களினாலும், பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த உங்களை உயிர்ப்பித்தார்.’’ என வேதம் கூறுகிறது. எபே.2:1.

- பாவம், கடன் துக்கத்தை கொண்டு வருகிறது:

ஒரு மனிதன் தனது குற்றத்தினிமித்தம், தூக்குத் தண்டனை அடையப் போகிறான் என்றால், அது குடும்பத்திற்கு துக்கத்தை கொண்டுவரும். இயேசு நம் நிமித்தமாக துக்கமடைந்தார். ‘‘துக்கம் நிறைந்தவராய்’’ ஏசாயா 53:3. நமது பாவங்கள், பலவீனங்கள், பொல்லாப்பு, பகைமைதான் காரணம். ரோமர் 5:5, 8, 10. தேவகோபாக்கினை நம்மேல் இருந்தது. கடவுள் நம்மேல் வைத்த அன்பினால், கிறிஸ்து மூலம் நமது அக்கிரமங்களை நம்மை விட்டு அகற்றினார்.

கடன் தொல்லை மக்களை துக்கத்தில் ஆழ்த்துகிறது. கடன் மேல் வரும் வட்டி உயர்வு, தூக்கமில்லாத இரவுகள், மனதில் போராட்டம், குடும்ப பிரச்சினைகளை கொண்டு வருகிறது.

## துக்கங்களுக்கு மாற்று மருந்துகள்:

உடல் பாதிக்கப்பட்டால் மருத்துவர்கள் சுகம் பெற மருந்து கொடுப்பார்கள். மனது பாதிக்கப்பட்டால், மனோதத்துவ வைத்தியர்கள் ஆலோசனை கொடுப்பார்கள். வேதாகமம் முழு மனிதனுக்கும் ஆலோசனை கொடுக்கிறது.

- **கடவுள் மகிழ்ச்சியின் ஆசிரியர்:**

கடவுள் துக்கத்தின் ஆசிரியர் அல்ல. கடவுள் ஆதாமை உண்டாக்கி, அவனுக்கு அழகான துணைவியை கொடுத்தார். சுவாசிக்க காற்றையும், குடிக்க நீரையும், தங்குவதற்கு நல்ல இடத்தையும், சாப்பிடுவதற்கு பயிர், கனி வகைகளையும், நிலத்தை பண்படுத்தி, பூமியில், தண்ணீரில், ஆகாயத்தில் உள்ளவைகளை ஆண்டுகொள்ள தலைமைத்துவத்தையும் கொடுத்தார். இயேசு கிறிஸ்து மக்களை மகிழ்ச்சிப்படுத்த இவ்வுலகில் வந்தார். அவர் பின்னால் பிள்ளைகளும் சென்றனர். ஏழைகள், பணக்காரர், பிணியாளிகள், ஒடுக்கப்பட்டவர்கள், போன்றோருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தார்.

‘‘எனது சந்தோஷம் உங்களில் நிறைவாயிருக்கும்படி கூறினேன்’’ என்றார். இயேசு கிறிஸ்து. யோவான் 15:11. அதன் நிபந்தனை அன்பாயிருத்தல், கர்த்தரின் கற்பனைகளை கைக்கொள்வதாகும். 15:9-10. தாமஸ் போர் என்ற கடல் பிரயாணி, கிறிஸ்துவில் மூன்று விதமான மகிழ்ச்சிகள் உண்டென்று கூறினார்.

பாவமன்னிப்பின் சந்தோஷம் - ‘‘திடன்கொள். உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன.’’

உறவின் சந்தோஷம் - ‘‘நான்தான், திடன்கொள்ளுங்கள். பயப்படாதிருங்கள்.’’

வெற்றியின் சந்தோஷம் - ‘‘திடன்கொள்ளுங்கள். நான் உலகத்தை ஜெயித்தேன்.’’

- **கடவுள் உங்களை துதிக்கும்படி விரும்புகிறார்:** சங்.34:1

“கர்த்தரை நான் எக்காலத்திலும் ஸ்தோத்திரிப்பேன். அவர் துதி எப்பொழுதும் என் வாயிலிருக்கும்.”

நீங்கள் கடந்து செல்லுகின்ற சூழ்நிலை, சோர்வு, கஷ்டம், தோல்வி எதுவாயிருப்பினும், எப்படிப்பட்ட துயர வேளையிலும், உங்களுடைய நாவு அவரை துதிக்கட்டும்.
“அஸ்திபாரம் போடும்பொழுது எஸ்றா களிக்கூர்ந்தான்.” எஸ்றா 3:12.
“எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்.” 1 தெச.5:16-18.

- **கடவுள் உங்களை அவருக்குள் களிகூறும்படி விரும்புகிறார்:**

கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே உங்கள் பெலனாயிருக்கும்.” ஆபகூக் 3:17. வாழ்க்கையில் வறுமையான நிலையிலும் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். “அத்தி மரம் துளிர்விடாமல் போனாலும், திராட்சச் செடிகளில் பழம் உண்டாகமற் போனாலும், ஒலிவ மரத்தின் பலன் அற்றுப் போனாலும், வயல்கள் தானியத்தை விளைவியாமறபோனாலும், கிடையில் ஆட்டுமந்தைகள் முதலற்றுப் போனாலும் தொழுவத்திலே மாடு இல்லாமறபோனாலும்… களிகூறுவேன்.”
*அத்திமரம்*: நிழல், ஆறுதல், கனிகள், ஜீரணம், சுகம் கொடுக்கக்கூடியது. அதன் விதையிலுள்ள சாரம் ஈரலுக்கு நல்லது.
*வயல்கள்*: தானியம், அனுதின உணவு, தங்குமிடம், ஓய்வு, இவைகளை தரக்கூடியது. தானியம் சாப்பிடவும், விற்கவும் விதையாக விதைக்கவும் உதவுகிறது.
*மந்தை*: உணவு-பலத்தை தரும். பால் எல்லா வயதினருக்கும் சிறந்த உணவு, தோல் உடைக்கும், வியாபாரத்திற்கும் வாழ்க்கைக்கும் உரியது.

- **கடவுள் நாம் மகிழ்ச்சியாயிருப்பதற்கு வழிமுறைகளை வைத்துள்ளார்:**

ஏசா.61:1 “கர்த்தருடைய அவியானவர் என் மேல் இருக்கிறார்… துயரப்படுகிறவர்களுக்கு ஆறுதலை கொடுக்கவும் (அடிமைதனத்தில் இருப்பவர்களுக்கு). சாம்பலுக்கு பதிலாக அழகையும் - மனந்திரும்புதல், துக்கப்படுதல். துயரத்திற்கு பதிலாக ஆனந்த தைலம்… ஆறுதல் துதியின் ஆடை… இரட்சிப்பு.
*விளைவு*: தேவன் மகிமைப்படுகிறார். நீதியின் விருட்சங்களாக இருப்போம். கடவுள் நமது துக்கங்களை மகிழ்ச்சியாக மாற்றுவார். பிணி, பேராபத்து, பிரிவு, போராட்டத்தில் கறிகூறும்படி தேவன் விரும்புகிறார். கடவுள் மகிழ்ச்சிக்கு காரணர். அவரை துதிக்கும்படி விரும்புகிறார். அவரில் மகிழ்ந்திருங்கள். அவர் ஆனந்த தைலத்தை தருவார்.

## உளவியல்

உளவியலை படிப்பதின் நோக்கங்கள்:

1. தன்னை அறிந்து கொள்ளுதல் - To know oneself
2. பிறரை அறிந்து கொள்ளுதல் - To know others
3. பிறருக்கு உதவி செய்தல் - To help others

**உளவியல் அல்லது மனநிலை இயல்**
**மனோதத்துவ சாஸ்திரம்**

பொதுவான உளவியல் (General Psychology) அதனுடைய சுருக்கத்தைக் குறித்தும் உளவியல் விரிவுரைகளைக் குறித்தும், பாரம்பரியம் (Hereditary) சூழ்நிலை (Environment) ஆளத்துவம் (Personality) மக்களின் வெவ்வேறு மனநிலையைக் குறித்தும் அறிந்து கொள்கிறோம்.

ஒரு ஊழியர் மேற்கூறியவைகளை வேத வசனத்தின் ஆதாரத்தின்படி தன்னை அறிந்துகொள்ளவும், பிறரை அறிந்துகொள்ளவும், பிறருக்கு உதவி செய்யவும் அநேகக் காரியங்களை கற்றுக்கொள்ளவும் உதவுகின்றது.

## 1. தன்னை அறிந்து கொள்ளுதல்: To know oneself

தன்னை எப்படி அறிந்து கொள்ள முடியும்?

ஒருவன் தன்னை அறிந்துகொள்வதற்கு பல காரியங்கள் உதவுகின்றன:

1. தாய் தகப்பன் மூலம் அறிந்துகொள்ளுதல் (பெற்றோர்)
2. ஆசிரியர் மூலம் தன்னை அறிந்துகொள்ளுதல்
3. நண்பர்கள் மூலம்.
4. எதிரிகள் மூலம்.
5. மனைவி பிள்ளைகள் மூலம் (கணவன்).
6. பைபிள் மூலம். (பரிசுத்தாவியானவர்)
7. நம்மை நாமே அறிந்துகொள்ளுதல்.

ஒருவன் தனது கடந்த வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கும் போது அதன் மூலம் அநேகக் காரியங்களை கற்றுக்கொள்ள முடிகிறது.

உளவியலானது மனிதனுடைய உடலின் அமைப்பை வெவ்வேறு கோணங்களில் பகுத்து போதிக்கிறது. எனவே தனது சொந்த வாழ்க்கையில் நடந்த பல்வேறு சம்பவங்கள் விளைவுகளை அறிந்துகொள்ள இது உதவுகிறது. 1நாளா.4:9, 10. (யாபேஸ்).
“யாபேஸ் தன் சகோதரரைப்பார்க்கிலும் கனம்பெற்றவனாயிருந்தான். அவன் தாய்: நான் துக்கத்தோடே அவனைப் பெற்றேன் என்று சொல்லி அவனுக்கு யாபேஸ் என்று பேரிட்டாள்.
யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசீர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான், அவன் வேண்டிக்கொண்டதை தேவன் அருளினார்.”

கிறிஸ்துவுக்கு ஒருவன் தன்னை அர்ப்பணம் செய்யும்போது பரிசுத்த ஆவியானவர் அவனது வருங்கால வாழ்க்கையை ஆசீர்வதிக்கிறார். கடந்தகால வாழ்க்கையில் ஏற்பட்ட காரியங்களை சுகமாக்கி நிகழ்கால வாழ்க்கையில் சமாதானம் தருகிறார். ஒருவர் சொல்லும் போது…

*“Yesterday is dead forget it*

*Tomorrow doesn't exist don't worry*
*Today is here use it."*

"நேற்றைய தினம் மறைந்து விட்டது மறந்து விடு,
நாளைய தினம் உருவாகவில்லை கவலைப்படாதே.
இன்றைய தினம் இருக்கிறது உபயோகப்படுத்து".

ஒருவன் தன்னுடைய கடந்த கால வாழ்க்கையை ஆராய்ந்து பார்க்கும்போது கீழ்க்கண்ட காரியங்களை அறிய முடிகிறது.

1. குடும்பப் பிரச்சினைகள் ஒரு பிள்ளையின் வாழ்க்கையை பாதிக்கிறது.
   உதாரணம்: சொத்துப் பிரச்சினை, புருஷன் மனைவி, மாமனார், மாமியார் பிரச்சனை, வீட்டில் ஓயாத சண்டைகள் பெற்றோர் பிள்ளைகளுக்கு காட்டும் பாரபட்சம் கட்டுப்பாடற்ற வாழ்க்கை. (drinking, debt etc.)

2. சூழ்நிலை ஒருவரை தவறான பாதையில் நடத்தி அவனது வாழ்க்கையை பாழ்ப்படுத்துகிறது.
   உ.ம். தவறான நட்பு, கெட்டப் பழக்கவழக்கங்கள். (எண்.26:9).

3. பெற்றோரின் முன் மாதிரியான வாழ்க்கை.
   அ. ஒழுக்க நெறி.
   ஆ. அடக்கம், ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவை பிள்ளைகளுக்கு பெருதவியாக இருந்திருக்கிறது.

இளம் வயதில் உணராத பிள்ளைகள் முதிர்ச்சிப் பருவம் வரும்போது பெற்றோரின் நற்காரியங்களை புகழ்ந்து பின்பற்றுவார்கள் அல்லது பெற்றோரின் கெட்ட காரியங்களை இகழ்ந்து வருந்துவார்கள். எனவே பெற்றோர்கள், ஆசிரியர்கள், போதகர்கள், தலைவர்கள், போன்றோர் பிள்ளைகளுக்கு நல்ல தத்துவங்களை போதிக்க வேண்டும். அத்துடன் முன் மாதிரியாகவும் ஜீவிக்க வேண்டும்.

ஒவ்வொருவரும் தங்களுக்கு ஒரு வருங்காலம் வரும் என்று உணர வேண்டும். பெற்றோருக்கோ, பெரியவருக்கோ, பிறருக்கோ கீழ்ப்படிவது அவர்களை கனம்பண்ணுவது ஆசீர்வாதமாகும். (லேவி.19:32) கீழ்ப்படியாமையோ பிரச்சனைகளை உருவாக்கி வருங்காலத்தை பாதிக்கும். அதைப்போல அனுபவங்களின் வாயிலாக ஒருவனை உருவாக்குகிறார்.

தேவனுடைய அன்பையும் கரிசனையையும் யார் உணருகிறார்களோ அவர்களுடைய நிகழ்காலமும் வருங்காலமும் ஆசீர்வதிக்கப்படும்.

## 2. பிறரை அறிந்து கொள்ளுதல்: To Know others

உளவியல் அடிப்படையில் உலகிலுள்ள மக்கள் பாரம்பரியம், சூழ்நிலை, இவற்றின் அடிப்படையில் உருவாக்கப்படுகிறார்கள். இதினிமித்தம் ஒவ்வொருவருடைய தன்மையும் நடத்தையும் இடத்திற்கு தகுந்தாற்போல் காணப்படுகின்றன. ஆளத்துவமும் வேறுபட்டு காணப்படுகிறது.

மூளைப்பாதிப்புள்ளவனுக்கு தலையிலும் இதயப் பாதிப்புள்ளவனுக்கு நெஞ்சிலும் அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர் போல ஒரு ஊழியர் சபை, விசுவாசிகளின் பிரச்சனைகளை ஒரே விதமாக புரிந்து கொள்ள முடியாது. ஒவ்வொருவரையும் நன்றாக அறிந்து கொள்வதற்கு ஆண்டவரின் உதவியும் புத்திக்கூர்மையும் தேவை, இன்றைய உலகில் விசுவாசிகள் பலவிதமான பிரச்சனையில் காணப்படுகிறார்கள்.

(எ.கா)

1. பெற்றோரை இழந்த பிள்ளைகள்

2. தகப்பனால், மாற்றாந்தாயால் கொடுமைப்படுத்தப்பட்ட பிள்ளைகள்.
3. அநாதையாய் வளர்ந்தவர்கள்.
4. போக்கிரிப் பிள்ளைகளுடன் வளர்ந்தவர்கள்.
5. வறுமையால் பாதிக்கப்பட்டவர்கள்.
6. செல்வ செழிப்பால் வளர்ந்தவர்கள்.
7. பாவ சூழ்நிலையில் வளர்ந்தவர்கள்.
8. ஒழுக்கத்தில் வளர்ந்தவர்கள் போன்றோர்.

**பிறரை அறிந்துகொள்ளும் விதம்**

a) கேள்வி கேட்பதன் மூலமோ (Questionnaire)
b) அவர்களை கூர்ந்து கவனிப்பதன் மூலம் (Observation)
c) அவர்களோடு பழகுவதன் மூலம் (Relationship)
d) பிறருடைய சாட்சி மூலம் (Witness),
e) கல்வியின் மூலம் (Case studies - Education)
f) எல்லாவற்றிற்கும் மேலாக பரிசுத்தாவியானவரின் உதவியினால் (gifts, guidance),
g) வேத வசனத்தின் அடிப்படையில் ஒருவரை அறிந்துகொள்ள முடியும் (Word of knowledge, wisdom).

## 4. பிறருக்கு உதவி செய்தல்: To help others

ஆவிக்குரிய உலகில் ஒரு ஊழியக்காரர் பிறருடைய பிரச்சனையை தீர்ப்பவரும் அல்ல பரிகாரியும் அல்ல. கிறிஸ்துவே பரிகாரி தேவனே பிரச்சனைகளைத் தீர்க்கிறவர். வேதாகமத்தில் தன் சொந்த வாழ்க்கையையும் பிறருடைய வாழ்க்கையையும் ஒரு ஆவிக்குரிய நூல்களின் ஆராய்ச்சியின் அடிப்படையில் பிறருக்கு ஆலோசனை சொல்லாம். அதற்கு தெய்வீக ஞானமும் தெளிந்த புத்தியும் தேவை. தேவன் ஒருவரே ஒருவருக்கு ஆலோசனை கொடுத்து சரியான பாதையில் நடத்த முடியும். சங்.32:8; நீதி.3:5,6; சங்.143:8-10. ஒரு விவேகமுள்ள போதகர் ஜெபசிந்தையுடன் நல்ல ஆலோசனையைக் கொடுப்பார். தீர்மானத்தை அல்ல. திருமணம், கல்வி, வேலை, இடமாற்றம், வியாதி குடும்பக்கட்டுப்பாடு இன்னும் பல காரியங்களுக்காக ஆலோசனை கேட்க சபையார் நம்மிடத்தில் வரலாம்.

இப்படிப்பட்டக் காரியங்களுக்காக வருகிறவர்களுக்கு உதவி செய்ய ஜெப சிந்தையுடன் அவருடைய வார்த்தையை கூர்ந்து கவனிக்க வேண்டும். அவர் பிரச்சனைகளை அப்படியே ஆண்டவரிடத்தில் சொல்ல வேண்டும். ஆவியானவர் அவர்களுக்கு சரியான வழியைக் காட்டும்படி அவரை சார்ந்திருக்க வேண்டும். அவருக்கு சாத்தியமான ஆலோசனைகளைக் கூறலாம். தீர்மானத்தை நாம் எடுக்காதபடி அதை அவர்களுடைய பொறுப்பில் விட்டுவிட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் யாரையும் பலவந்தப்படுத்தக்கூடாது. பிறர் சொல்லுகின்ற சில ரகசியமான காரியங்கள் எதுவாக இருந்தாலும் அதை யாரிடமும் சொல்லக் கூடாது.

ஒரு ஊழியர் நம்பிக்கைக்கு பாத்திரவானாய் நடந்துகொள்ள வேண்டும். ஆள் பெயரையோ ஊர் பெயரையோ சொல்லாமல் சில வேளைகளில் உதாரணமாக பிரசங்கத்திலோ சாட்சியிலோ விவேகமாகச் சொல்ல வேண்டுமேயொழிய வேறு எக்காரணத்தைக் கொண்டும் சொல்லக்கூடாது.

டாக்டர் விக்டர் இ. ∴பிராக்கிள் என்ற உளவியல் அறிஞர் ஒரு மனிதன் எதற்காக வாழ்கிறான் என்பதைக்குறித்து பின்வருமாறு கூறுகிறார்.

“உயிர்வாழ்வது பாடுபடுவதற்காக
தப்பி உயிருடன் இருப்பது பாடுகளின் கருத்தை அறிய
வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இருக்குமெனில்
பாடுகளிலும் மரணத்திலும் ஒரு குறிக்கோள் உண்டு.”

*"To live is to, suffer, to survive is to find meaning in the suffering. If there is a purpose in life, at all there must be a purpose in suffering and in dying."*

- Dr. Victor. F. Frankl's

இன்று அநேகர் தங்கள் வாழ்க்கையின் குறிக்கோள் அறியாததினால் தற்கொலை செய்கின்றனர். சோர்வைடைகின்றனர். வாழ்வில் துயரத்துடன் இருக்கின்றனர். அவர்களுக்குள் கடந்த காலத்தைக் குறித்த வருத்தம். நிகழ்காலத்தைக்குறித்த பாரம். வருங்காலத்தைக் குறித்த பயம் வாட்டி வதைக்கும்.

*"The regret of yesterday*
*The burden of Today*
*The fear of Tomorrow."*

ஒரு மனிதன் தனது வாழ்க்கையைக் குறித்த காரியத்தில் தன்னுடைய வாழ்க்கையின் அர்த்தத்தை கேட்காதபடி உணர்வுள்ளவனாக தன்னுடைய வாழ்க்கையின் மூலம் வாழ்ந்து காண்பிக்க வேண்டும். கிறிஸ்து ஒருவருடைய வாழ்வில் ஜீவ நாடியாய் இருக்கிறார். துயரமான வேளையில் சமாதானத்தையும் பலவீனத்தில் பலத்தையும் கட்டளையிடுகிறார். பரிசுத்த ஆவியானவர் தேற்றரவாளராக இடைபடுகிறார்.

ஒரு கத்தோலிக்க அத்தியட்சர் (1712 தத்துவஞானி) தன்னுடைய உறவினர் ஒருவருக்கு கீழ்க்கண்டவாறு கடிதம் எழுதினார்.

> "குறைவாக பேசு, அதிகமாக கேள், சாமர்த்தியமான காரியங்களை பிறருடன் பேசுவதுடன் இதயங்களை புரிந்துகொண்டு அவருடைய தேவைகளுக்கு உன்னை உருவகப்படுத்திக்கொள். ஊனக்கு திறந்த உள்ளம் உண்டு என்பதை தங்களுடைய மனதை உனக்கு முன் வெளிப்படுத்துவதினால் பாதுகாப்பும் ஆறுதலும் உண்டு என்பதை அனுபவத்தின் மூலம் பிறர் அறியட்டும். மிதமிஞ்சின கண்டிப்பைத் தவிர்த்து தேவைப்படும்போது ஜாக்கிரதையுடனும் எச்சரிக்கையுடனும் சாந்தமாகவும் கடிந்துகொள். தேவைக்கு அதிகமாக எதையும் சொல்லாதே. ஆனால் நீ சொல்லுவது எதுவாயிருப்பினும் அது உன்னோடு இருக்கட்டும். உன்னை நம்பி ஏமாற்றப்படுவோம் என்ற பயம் பிறரில் உருவாக இடமளிக்காதே. உன்னிடத்தில் வருகிற எல்லாரையும் நுணுக்கமாக கவனி. எல்லாரையும் ஆதாயப்படுத்தும்படி எல்லா தேவப்பிள்ளைகளும் பிறருக்கு முன்பாக நீயும் மாற வேண்டம். பிறரை திருத்துவதற்காக உன்னையே நீ திருத்திக்கொள்."

உளவியலும் மனிதனின் வித்தியாசமான பருவங்களும்:

ஒரு மனிதனுடைய உடல் மனநிலை சூழ்நிலைக் கேற்ப கிரியை செய்கிறது. தாயின் வயிற்றில் கருவாகத் தோன்றியதிலிருந்து முதுமைப் பரும் வரை ஒருவருடைய உடலிலும் உள்ளத்திலும் பல மாற்றங்கள் ஏற்படுகின்றன. உலகில் பிறக்கும்முன் முதல் 9 மாதங்கள் தாயின் வயிற்றில் வாழ்கிறான். (சங். 71:6). "அவன் தீவினை அவன் சிரசின்மேல் திரும்பும், அவன் கொடுமை அவன் உச்சந்தலையின்மேல் இறங்கும்".

பிறந்த பின்னர் குடும்ப சூழ்நிலையில் வளருகிறான். தாய்மொழியை கற்க ஆரம்பிக்கிறான். நடக்க கற்றுக்கொள்ளுகிறான். பின்னர் பள்ளிக்கூடத்தில் சேருகிறான். பின்பு பிள்ளைகளுடன் படிக்கிறான். ஆவர்களோடு பழகுகிறான். வேளிஉலகத்துடன் பலவிதங்களில் தொடர்புகொள்ளுகிறான். இந்நிலையில் குமாரப் பருவத்தை அடைகிறான். அவனுடைய சரீரத்தில் அநேக மாறுதல்கள் ஏற்படுகின்றன.
உ.ம். மீசை, தாடி, சுரப்பிகளின் வளர்ச்சி.

பின்னர் அவன் சரியான பக்குவநிலையை அடைகிறான். கல்வியைக் கற்ற பின்னர் வேலையைப் பார்க்கிறான். பின்பு குடும்பத்தலைவனாக மாறி தகப்பனுக்குரிய சூழ்நிலையை அடைகிறான். இறுதியில் முதுமைப் பருவம் அடைகிறான். இது தான் வாழ்க்கை.

## உளவியல் பிரிவுகள்

## (Divisions of Psychology)

1. குழந்தை உளவியல்: (Child Psychology)

இப்பகுதி சிசு பருவத்திலும் குழந்தைப் பருவத்திலும் ஏற்படுகின்ற, உள்ளத்தின கிளர்ச்சியை எடுத்துரைக்கின்றது.

2. வாலிப பருவ உளவியல்: (Youth Psychology)

3. முதிர்ச்சிப் பருவ உளவியல்: (Adult Psychology)

4. வயோதிபப் பருவ உளவியல்: (Old Age Psychology)

5. உடற்கூறு உளவியல்: (Physiological Psychology)

நடத்தை முறை, உடல் இயல் முறை ஆகியவற்றின் அடிப்படையில் நடந்த பரிசோதனையின் விளைவாக இப்பிரிவு உண்டாயிற்று.

6. மிருக உளவியல்: (Animal Psychology)

உ.ம். எலி, முயல், பூனை, நாய், குரங்கு முதலிய விலங்குகள், புழு, மீன், பறவைகள் போன்றவற்றையும் சோதனைக் கூடங்களில் உபயோகித்து அதன் மூலம் ஆராய்ச்சி செய்தல்.

7. நடத்தை உளவியல்: (Behaviour Psychology)

மனிதனுடைய உடலில் நோய் ஏற்படுவதுபோல உள்ளத்திலும் நோய்களும் கோளாறுகளும் ஏற்படுவது இயற்கை. இவைகளைப் பற்றி அறிவதற்கான முறைகளையும், சோதனைகளையும் வெளியிடுவது நடத்தை உளவியல் ஆகும்.

உ.ம். கொலை, கொள்ளை, பகற்கனவு (கடவுள், பிசாசு - உள்ளுணர்வு இயற்கையானது), கனவு ஆகியவற்றிற்கான காரணங்களை ஆராய்ச்சி செய்தல்.

8. சமூக உளவியல்: (Social Psychology)

மனிதன் பிறந்ததிலிருந்து இறக்கும்வரை ஒரு சமூக சூழலில் குடும்பமாகவோ அல்லது கூட்டமாகவோ பட்டணத்திலோ அல்லது கிராமத்திலோ வாழ்கிறான். கூட்டத்ததிலும், குழுவிலும் ஒருவனுடைய இயல்புகள் எவ்வாறு அமைகின்றன என ஆராய்வதே சமூகவியலாகும்.

இவர்கள் கூட்டமாக இருக்கும்போது இவர்களுக்கு காணப்படும் தப்பெண்ணங்கள் சமய வெறிகள், ஜாதிவெறிகள், பண்புகள் பிரச்சாரம் செய்வதற்குரிய பொதுவிதிகள் பொது மக்களின் கருத்துக்களை எடுத்துரைப்பது போன்றவற்றை ஆராய்வது ஆகும்.

9. கல்வி உளவியல்: (Educational Psychology)

ஒரு ஆசிரியர் சிறந்த முறையில் போதிப்பது, மாணவர்கள் நல்லமுறையில் கற்பது, மாணவர்களின் அறிவில் ஆற்றலில் வேறுபாடுகளை அறிவது இத்துறையாகும்.

10. தொழிற்சாலை உளவியல் (Industrial Psychology)

தொழிற்சாலையில் ஒருவர் ஆர்வத்துடன் வேலை செய்ய சக வேலையாட்களும் வேலை செய்ய இதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதும் எடுத்துரைப்பதும் தொழிற்துறை உளவியல் ஆகும்.

உ.ம். போட்டி வைத்தல், பரிசு வழங்குதல், சம்பள உயர்வு, போனஸ் போன்றவை.

11. இராணுவ உளவியல்: (Military Psychology)

போரில் ஈடுபடும் வீரர்களில் ஆளுமை இயல்புகள், ஆர்வம் நுண்ணறிவு இவைகளை அறிவதற்கான சோதனைகளையும் போட்டி முறைகளையும் ஏற்படுத்துவதும் ராணுவ உளவியலாகும்.

12. பயன்முறை உளவியல்: (Applied Psychology)

இதில் உளவியல் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. முதற்பகுதியில் உள்ளத்தின் நடத்தையைப் பற்றிய அடிப்படை விதிகளை ஆராய்தாகும். இரண்டாவது பகுதியில் மேற்கூறிய பிரகாரம் கண்டுபிடிக்கப்பட்ட விதிகளை மக்களுக்கு நன்மையைத்தரும் வகையில் பயன்படுத்துவதாகும்.

## மரபு நிலையும் சூழ்நிலையும்
## (Heredity and Environment)

மரபு நிலை:

ஒரு குழந்தை தனது பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொள்ளும் சிலத்தன்மைகள் ஆகும். (எ.கா) உருவம், நிறம், உயரம், திறமை, பண்புகள்.

தாயின் வயிற்றில் கரு உருவாகும்போது பெற்றோரிடமிருந்து பெற்றுக்கொள்ளுவது.

1) குரோமோசோம்கள்: (Chromozomes)

ஆணிடத்திலும் பெண்ணிடத்திலும் உள்ள உயிரினங்களில் இக்குரோமோசோம் உள்ளன. ஆண்களிடம் (X-Y) குரோமோசோம்கள் உள்ளன. தகப்பனிடமிருந்தும் தாயிடமிருந்தும் ஒரு பிள்ளை (X) குரோமோசோம்களை பெற்றால் பெண் பிள்ளை பிறக்கும். ஒன்று (X) இன்னொன்று (Y) –ஆக இருந்தால் அது ஆண் பிள்ளையாகப் பிறக்கும். தாயிடமிருந்து ஒரு பிள்ளை (X) குரோமோசோம்களை மட்டுமே பெறமுடியும். தகப்பனோ (X) அல்லது (Y) குரோமோசோம்களை கொடுக்க முடியும். இந்த சேர்க்கையின் அடிப்படையில் தான் குழந்தைகள் ஆணாகவோ பெண்ணாகவோ பிறக்கும். சங்.71:6.

உயிரணுவின் நடுவிலே ஒரு கருப்பு நிறமான புள்ளிக் காணப்படும். இது உயிரணுவின் மிக முக்கியமான பாகமாகும். இதற்கு பெயர்தான் குரோமோசோம்கள்.

2) ஜீன்கள்: (Genes)

இவைகள் குரோமோசோமில் காணப்படும் இரசாயனப்பொருட்கள். இந்த ஜீன்கள் தான் பாலின வழிப்பண்புகளுக்கு காரணமாக இருக்கின்றன.

(எ.கா) நிறக்குருடு, அறிவுத்தன்மையில் மந்தம். இந்த ஜீன்கள் தான் மனிதனின் முக்கியமான மரபு பண்புகளை உருவாக்குகின்றன.

1. பிறக்கும் பிள்ளைகள் பெற்றோரின் சாயலில் இருக்காமலும் போகலாம். பிள்ளைகள் உருவத்தில் தகப்பனைப்போலவும் நிறத்தில் தாயைப்போலவும் சில சமயத்தில் தாத்தா பாட்டியைப் போலவும் இருக்கலாம். பெற்றோர்கள் சந்தேகத்திற்கு இடம் கொடுக்கக்கூடாது.

2. மரபு வழிகளில் வரும் வியாதியைக் குறித்து அஞ்ச வேண்டிய அவசியம் இல்லை. (எ.கா) நீரிழிவு, செவிட்டுத்தன்மை, ஆஸ்துமா, போன்றவை. மேற்கூறிய வியாதிகளை நவீன முறையில் கட்டுப்படுத்த மருந்து வசதிகள் உள்ளன.

3. மரபு நிலை நிமித்தமே ஒருவருடைய அறிவுத்திறமை மங்கிவிட்டது என நினைக்கக்கூடாது. ஒவ்வொருவரும் கடவுளின் கிருபையால், ஜெபத்தால், தேவத்தொடுதலால் முயற்சியால் முன்னேற முடியும்.

## சூழ்நிலை
## (Environment)

கர்ப்பப்பையில் பெண்ணின் வயிற்றில் கருவில் உருவாகும்போது தாயின் வயிற்றில், வீட்டில், ஆலயத்தில், பள்ளியில், சுற்றுப்புறத்தில் பெற்றுக்கொள்ளக் கூடியக் காரியங்களே சூழ்நிலை எனப்படும்.

ஒரு சிறு குழந்தை 2 – 5 வயதிற்குள் பெற்றோருக்குரிய பண்புகளை அடிப்படையாக உருவாக்கிக் கொள்கிறது. இதனால் சிறுபிள்ளைகளை சரியான பக்குவத்தில் வளர்க்க வேண்டும். ஆதியிலே உண்டாக்கப்பட்ட மனிதன் ஆண்டவரால் உண்டாக்கப்பட்டான் (ஆதி.1:26, 27). அவனுக்குள் தேவ ஆவி இருந்தது (ஆதி.2:7). அவனுடைய சூழ்நிலையும் எவ்விதக்குறைவுமின்றி

இருந்தது. தேவன் அவனை ஆசீர்வதித்தார். அவனை சந்தித்தார். அவனோடு அளவளாவினார். இருப்பினும் அவனுக்கு அனுமதிக்கப்பட்ட பரீட்சையில் சுயசித்தத்திற்கு கீழ்ப்படிந்ததால் வீழ்ந்து போனான். ஒரு மனிதனுடைய பாவத்தால் மரபுநிலையும் சூழ்நிலையும் பாதிக்கப்பட்டது.

மனிதனுக்குள் இருக்கும் ஜென்மப் பாவம் அவன் செய்யும் கர்ம பாவமும் கால காலமாக அவனை ஆட்கொண்டு வந்திருக்கிறது. ஆனாலும் அன்பே உருவான தேவன் இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்தெழுதல் மூலமாக புதிய மரபுநிலையை உருவாக்கி உள்ளார். 2கொரி.5:17; கலா.4:19; கொலோ.1:28; 3:1-2; ரோமர் 6:5. "புது சிருஷ்டி"; "கிறிஸ்து உங்களில் உருவாகுமட்டும்"; "இயேசுவுக்குள் தேறினவனாக"; "உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே".

சபிக்கப்பட்ட உலகில் மனிதன் வாழ்கிறான். ஆதி.3:17. இயேசுவை அறியாத மக்களின் மரபு நிலை அந்தகாரத்தின் கட்டுக்குள் இருந்தபோதிலும் பரிசுத்த ஆவியானவர் ஒரு தேவப்பிள்ளையிடத்தில் வாசம் செய்து ஆவிக்குரிய சூழ்நிலையை உருவாக்குகிறார்.

ஆகவே எந்த மனிதனும் தன்னுடைய மரபுநிலையையோ சூழ்நிலையையோ குறைகூறி கொண்டு தேவனைவிட்டு விலக முடியாது. எப்பேர்ப்பட்டட மரபுநிலை அல்ல சூழ்நிலை உடையவர்களுக்கும் தேவன் உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார். 1 நாளா.4:9, 10. யாபேஸ் சூழ்நிலையில் வெற்றி கொண்ட மனிதன். உ.ம். யோசேப்பு – ஆதி.37:7-9; 49:25. ஒரு விதை. நல்ல விதையாக இருக்கலாம். அந்த விதையிலே நல்ல கனியையோ தானியத்தையோ உருவாக்குகிற சாரம் இருக்கலாம். அவ்விதையை ஒரு பாறையில் நட்டால் அது பயனைத்தராது. நல்ல நிலத்தில் நடப்பட்டு சரியான வெப்பமும் காற்றும் தண்ணீரும் எருவும் பாதுகாப்பும் இருந்தால் அது நல்ல பயனைக்கொடுக்கும்.

ஒரு பிள்ளை தாயின் வயிற்றில் உருவாகும்போதே அந்தத்தாய் மகிழ்ச்சியாகவும் ஜெபிக்கிறவராகவும் இருக்க வேண்டும். அவருடைய உள்ளத்தில் அச்சத்திற்கோ, கோபத்திற்கோ இடம் கொடுக்கக் கூடாது. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டாலும் தன்னையும் பிள்ளையையும் கர்த்தருடைய கரத்தில் அர்ப்பணிக்க வேண்டும். பிள்ளை பிறந்த பின்னர் அதை ஆவிக்குரிய சூழ்நிலையில் வளர்க்க வேண்டும். பெற்றோர்கள் தெய்வ பக்தியுள்ளவர்களாக தேவனை பின்பற்றுகிறவர்களாக இருக்க வேண்டும். அநேகருடைய வாழ்க்கை வரலாறு வேதாகமத்தில் உதாரணமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. பிள்ளைகள் வளர்க்கும் முறை குறித்து நீதிமொழிகளில் அநேகக் கருத்துக்களை உடையதாய் இருக்கிறது.

## நுண்ணறிவு
## (Intelligence)

ஒரு காரியத்தை குறிக்கோளுடன் நடப்பித்தல் பகுத்தறிவுடன் யோசித்தல். அவனுடைய சூழ்நிலையில் சரியானப் பிரகாரம் திறம்படச் செய்யும் ஒருவரது முழு நிலையைக் குறிப்பதே நுண்ணறிவு.

மனிதன் நடத்தைக்கு அடிப்படையாக அமைந்திருக்கும் மன சக்தியில் நுண்ணறிவு திறன் ஒன்றாகும்.

ஒரு மனிதன் தன்னுடைய புத்திக் கூர்மையை உபயோகித்து ஒரு காரியத்தை செவ்வையாய் செய்வதே நுண்ணறிவு.

எ.கா. ஒருவன் தன்னுடைய புயபலத்தால் கதவை உடைத்து திறக்கிறான். மற்றொருவன் தனது புத்திக்கூர்மையால் திறவுகோல் மூலம் திறக்கிறான்.

நுண்ணறிவு என்பது ஒருவர் வர்த்தகக் காரியங்களிலும் செய்தித்தாள் வாசிப்பதிலும் தனது பிள்ளைகள் பிரச்சனைகளில் பகுத்தறிவை உபயோகிப்பதைக் குறிக்கும். "பிறர் இதைச் செய்யக் கூடுமானால் என்னால் ஏன் முடியாது?".

1. கொள்கையறிவு நுண்ணறிவு: (Abstract Intelligence)

வார்த்தைகள், எண்கள் சூத்திரங்கள், வரைபடங்கள் போன்றவைகளில் அறிவை உபயோகிப்பதைக்குறிக்கும், குறியீடுகளில் உள்ள பிரச்சனைகளை குறியீட்டின் உதவியுடன்

மேற்கூறிய திறமைகளுடன் செய்து முடிப்பர். வுழக்கறிஞர்கள், மருத்துவர்கள், அரசியல்வாதிகள், வேலை செய்பவர்கள், போன்றோருக்கு இதுத் தேவைப்படுகிறது.

2. சமூக அறிவு: (Social Intelligence)

அரசியல் தூதர், வியாபாரி, ஊழியக்காரர் போன்றவர்கள் சமூகரீதியில் நுண்ணறிவு உள்ளவராக இருக்க வேண்டும். இவர்கள் மக்களுடன் சரியான விதத்தில் பழகுதல் சுலபமாக நண்பர்களை அடைதல் போன்றவைகளில் மட்டுமல்ல மனித உறவுகளைப் புரிந்துகொள்ள சாமர்த்தியத்தை உபயோகிப்பர்.

3. பொறியியல் அறிவு: (Mechanical Intelligence)

எந்திரங்கள், எந்திரசம்பந்தமான காரியங்களில் இவ்வறிவு செயல்படுத்தப்படுகிறது. ஏ.கா. பொறியியல் நிபுணர், தொழிற்சாலை நிபுணர் போன்றவர்கள் இவ்வறிவை உடையவர்களாக இருக்க வேண்டும்.

## நுண்ணறிவு ஈவு
## (Intelligence Quotient)

சோதனையின் மூலம் அளவிடப்பட்ட ஒரு குழந்தையின் உளவயதை அப்பிள்ளையின் பிறந்த வயதால் வகுக்கும் போது வருவதே அக்குழந்தையின் ஈவு ஆகும்.

$$\frac{\text{உளவயது} \times 100}{\text{பிறந்த வயது}} \qquad \frac{10 \times 100}{8} = 125$$

எ.கா. ஒரு பையனின் வயது 8. அவனுக்கு 10 வயதிற்குரியவர்களின் சோதனை கொடுத்து அதில் அவன் வெற்றி பெற்றால் அவனின் உளவயது 125.

உலகில் உள்ளவர்கள் ஒவ்வொருவரையும் உற்றுநோக்குங்கால் அவர்களுடைய அறிவுத்திறமை வித்தியாசப்படுகிறது. பொதுவாக ஒரு குழந்தை தனது மரபுநிலை இவைகளின் அடிப்படையில் நுண்ணறிவு வித்தியாசப்படுகிறது. சமுதாயத்திலுள்ள ஏராளமான மக்களுக்கு நுண்ணறிவுச் சோதனைக் கொடுக்கப்பட்டு அதனடிப்படையில் மக்கள் தங்கள் நுண்ணறிவில் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகின்றனர்.

1. அறிவீனமானவர்கள் (Feeble minded)
2. சாதாரணமானவர்கள் (Average)
3. மேதைகள் (Genius)

சராசரி மனிதனடைய நுண்ணறிவு (90 – 110) வரையாகும். அறிவீனர்களுடைய நுண்ணறிவு 90-க்கும் குறைவாக இருக்கும்.

அறிவீனர்களை 3 பிரிவாகப் பிரிக்கலாம் அவை:

1. பேதைகள் - நுண்ணறிவு 50 -70 (Moron)

2. முதிர்ச்சி நிலையிலுள்ள பேதைகள் - 8 10 வயது திறன்.

8 – 10 வயது குழந்தை திறனை உடையவர்களாய் இருப்பார்கள். இவர்களுக்கு தையல் வேலை செய்தல் பெட்டியில் துணியை அடுக்குதல் மாத்திரம் செய்ய முடியும்.

### 1. நனிப்பேதைகள்
### (Imbicile)

இவர்கள் நுண்ணறிவு 20 – 50 வரை இருக்கும். உள்ளத்திறமையோ 3 – 7 வயதுள்ள குழந்தைகளின் நுண்ணறிவுப் போல் இருக்கும். இவர்கள் தாமாகவே எதையும் செய்ய முடியாததால் மேற்பார்வையாளர் தேவை.

பித்தன் (Idiot)

இவர்களின் நுண்ணறிவு 20-க்கும் குறைவாகவே இருக்கம். ஒரு வேலை செய்யவோ விபத்திலிருந்து தங்களை காப்பாற்றிக்கொள்ளவோ முடியாதவர்கள். நெருப்பில் கைவைப்பார்கள். ஆழமானத் தண்ணீரில் இறங்கிவிடுவார்கள். குளிக்கவும் உடுத்தவும் தெரியாது. சிலருக்கு சாப்பிடவும் தெரியாது.

அறிவீனம் உண்டாகக் காரணங்கள்:

1. மரபு நிலை பரம்பரை இதற்கு ஒரு காரணம் நெருங்கியவர்களை (உறவினர்களை) திருமணம் செய்யும்போது ஜீன்களில் பாதிப்பு ஏற்பட்டிருந்தால் இது ஏற்படலாம்.

2. ஒருவனுடைய மூளைக்கு சேதம் ஏற்படும்போது சரீரத்தில் இழுப்பு வியாதியுடன் அறிவீனமும் ஏற்படுகிறது.

3. பொல்லாத ஆவிகள் ஏவல்கள், பில்லிசூனியம், சாபங்கள் போன்றவைகளாலும் இந்நிலை ஏற்படலாம்.

4. ஒரு பிள்ளை கருப்பையில் இருக்கும்போதும் (குழந்தைப்) பருவத்திலும் தனது மனக்கிளர்ச்சியில் பாதிக்கப்படலாம். இதனால் நுண்ணறிவு வளர்ச்சி பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு உண்டு.

## 2. சாதாரணமானவர்கள்
## (Average)

இவர்களுடைய நுண்ணறிவு 90 முதல் 110 வரை இருக்கும். உலகிலுள்ள அநேகர் இவ்வகுப்பைச் சேர்ந்தவர்களே.

## 3. மேதை
## (Genius)

இவர்களுடைய நுண்ணறிவு உயர்வாகக் காணப்படுகிறது. 135-க்கும் மேல் நுணணறிவை உடையவர்கள் மேதை என்றும் 140-க்கு மேல் நுண்ணறிவு உள்ளவர்கள் மகாமேதை என்றும் அழைக்கப்படுகிறார்கள். இளம் மேதைகள் எல்லா குழுக்களிலும் உள்ளார்கள். மேதைக்குழந்தைகள் பொருள் வசதியுள்ள உயர்வானக் குடும்பங்களிலும் வேலை பார்த்து வாழ்க்கை நடத்தும் சாதாரண குடும்பம் இவைகளிலும் காணப்படுகின்றனர். ஒரு அறிவுள்ள தாய் 100 ஆசிரியைகளுக்குச் சமம்.

ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் தாயானவள் ஆவிக்குரியவளாக இருந்து தனது பாரத்தை எல்லாம் கர்த்தர் மேல் வைத்து, கடவுளிடம் ஜெபித்து மனநிலையில் இரம்மியமாக இருந்து வாழ்க்கை நடத்தினால் அல்லது பொருளாதார நெருக்கடியின் மத்தியலும் சோர்வடையாமல் தம்பதிகள் சுறுசுறுப்புள்ளவர்களாக கர்த்தருக்குள் திடமான நிலையிலிருந்தால், அவள் வயிற்றில் உருவாகும் குழந்தை ஆசீர்வதிக்கப்பட்டக் குழந்தையாக இருக்கும் என்பதற்கு சந்தேகமே இல்லை. உளக் கட்டுப்பாடு, உணவுக் கட்டுப்பாடு, உடல் கட்டுப்பாடு, ஒருவருக்கு தேவை.

ஒரு ஆணும் பெண்ணும் மிக இளவயதில் திருமணம் செய்வதை தவிர்க்க வேண்டும். ஆண்கள் 25 – 30 வயதிலும் பெண்கள் 23 – 26 வயதிலும் திருமணம் செய்தால் நல்லது. இவர்களது மனதும் உடலும் பக்குவம் அடைந்திருக்கும். சிறு வயதிலிருந்தே ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறி நேரத்தை சரியாக உபயோகிக்க பிள்ளைகளுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். அறிவைப் பெருக்க நல்ல நூல்களை படித்தல் பலதரப்பட்ட வேலைகள் கற்றுக்கொள்ளுதல் தேகப்பியாசம் (உடற்பயிற்சி) ஆகியவைகளில் ஆர்வத்தை உண்டாக்க வேண்டும்.

## ஆளத்துவம்
## (Personality)

ஒரு மனித நடத்தையின் மொத்தத் தன்மையே ஆளத்துவமாகும்.

ஆளத்துவம் என்பது மனிதனின் பண்புகள் சரீர அமைப்பு, விறுப்பு வெறுப்பு போன்றவைகளை வெளிப்படுத்துகின்றன.

சாக்ரட்டீஸ் கூறுவது: “நட்பு கொள்வதில் நிதானமாயிருங்கள் (ஜாக்கிரதை) நட்பு கொண்டபின் அதை நிலைநிறுத்த பாடுபடுங்கள்.”

“A true friend will never let you down”.

ஒப்பிட்டுப்பார்க்க: எரே.17:5,7; மீகா.7:5,6; எரே.9:4,5.

ஒரு மனிதனுடைய ஆளத்துவத்தை ஜங் என்ற உளவியல் அறிஞர் மூன்று வகையாக பிரிக்கிறார். ஆவை:

1. அகப்பார்வையுள்ளவர்கள் (உள்நோக்கப்பார்வை) (Introverts)
2. வெளிப்பார்வையுள்ளவர்கள் (வெளிப்பார்வையுள்ளவர்கள்) (Extroverts)
3. நடுநிலைமைக்காரர் (Intermediaters) - Ambiverts

### 1. உள்நோக்குப் பார்வையுடையோரின் பண்புகள்:

1. பேசுவதைக் காட்டிலும் எழுத்தில் திறமையுள்ளவர்கள்.
2. கவலைப்படுகிறவர்கள்.
3. பகற்கனவுக் காண்பவர்கள்.
4. நூல்கள் பத்திரிக்கையின் மேல் ஆர்வம் உள்ளவர்கள்.
5. நேர்மறை உணர்வுகளால் வசீகரிக்கப்படுவார்கள்.
6. யாரிடமும் அதிகமாக பழகமாட்டார்கள். (எதிர்பாலினரிடம்)
7. தனிமையில் வேலைசெய்ய விரும்புவர்.
8. உடலில் வரும் வியாதிகள், தனது சொந்த பொருள்கள் இவைகளின் மேலும் கவனம் உள்ளவர்கள்.
9. வளையும் தன்மையற்றவர்கள்.

### 2. வெளிநொக்குப் பார்வையுடையவர்கள்:

1. பேச்சில் திறமையுள்ளவர்கள்.
2. கவலைப்படமாட்டார்கள்.
3. எளிதில் கலக்கமடையமாட்டார்கள்.
4. காரிய சித்தியுள்ளவர்கள்.
5. விளையாட்டில் ஆர்வமுள்ளவர்கள்.
6. எதிர்மறையான உணர்வுகளால் ஆளப்படுவார்கள்.
7. எதிர்பாலினரிடம் எளிதில் நட்புக்கொள்வர்.
8. பிறருடன் சேர்ந்து வேலை செய்பவர்கள்.
9. தனது உடலில் வரும் வியாதி சொந்தப்பொருட்களை குறித்து கவலையற்றவர்கள்.
10. வளைந்து கொடுத்து ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையவர்கள்.

### 3. நடுநிலைமைக்காரர்கள்:

இவர்கள் மெற்கூறிய இருதரத்தாருடைய பண்புகளையும் (ஒன்று) கலந்து இருப்பவர்கள். இவர்களுடைய தன்மையானது சில நேரங்களில் வெளிநோக்குடையதாகவும், மற்ற நேரங்களில் உள்நோக்குடையதாகவும் இருக்கும்.

(எ.கா) பேச்சிலும், எழுத்திலும் ஒருவர் சிறப்பானவராக இருக்கலாம் அல்லது பிறரோடு நட்புள்ள ஒருவர் தனிமையாக வேலை செய்ய விரும்புவர்.

சமூகரீதியில் தனிப்பட்ட மக்கள் அவர்களுடைய விருப்பு, வெறுப்புத் தன்மையில் பிரிக்கப்பட்டுள்ளனர்.

இதைக்குறித்து Spranger என்பவர் கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

1. கொள்கைத்தன்மையுடையவர்கள்: ஆத்மீகஞானம் விஞ்ஞான சிந்தனை உள்ளவர்கள். (Theoretical)
2. வர்த்தகத் தன்மையுடையவர்கள்: (Economic, Business minded)
3. பாலுணர்வுள்ள; சரீரத்தை திருப்திப்படுத்தக்கூடிய; நம்பிக்கைக்கு பாத்திரமற்றவர்கள். (Esthetic)
4. பிற ஆட்கள் மேலும் சமூகக் காரியங்கள் மேலும் ஆர்வமுள்ளவர்கள். (Social)
5. அரசியல் சம்பந்தமானவர்கள். (Political)
6. சமய சம்பந்தமான ஆத்மீக ஞானியாக, பக்திமானாக மிஷினரி வாஞ்சையுள்ளவராக இருப்பார். (Religious)

Hippocrates (400B.C.); Galen (A.D.150) ஆகிய இரண்டு பேரும் ஆளத்துவத்தில் மனிதனை கீழ்க்கண்டவாறு பிரித்தனர்.

1. படபடப்புள்ளவர்கள், மகிழ்ச்சியுள்ளவர்கள், நிலையற்ற தன்மையுள்ளவர்கள். (Sanguine)
2. சீக்கிரத்தில் கோபப்படுகிறவன். (Cholaric)
3. அதம பாவனை உள்ளவர்கள். (Meloncholic) (Pessimistic)
4. பரவசமடையாதவர்கள், சுறுசுறுப்பற்றவர்கள். (Phoegmatic) (Unexcitable)

<u>ஒரு மனிதன் நல்வாழ்க்கை நடத்துவதில் சில குறிப்புகள்:</u>

1. உள்ளான மகிழ்ச்சியில் வாழ்தல் அல்லது சாதாரண நிலையைக் காட்டிலும் அதறகுக மேலாக வாழ்ந்து காட்டுதல்.
2. பசிக்கும்போது சாப்பிடுதல் தவிக்கும்போது தண்ணீர் அருந்துதல்.
3. உடலுக்கு உகந்த அளவு சக்தியை அளிக்கும், பலதரப்பட்ட உணவுகளை சாப்பிடுதல்.
4. சரீரத்திறகு வேதனை உண்டாக்கும் மிருகங்களிடமிருந்து பாதுகாத்தல். (நாய், பூனை)
5. சரீரத்தில் வியாதியை உண்டாக்கும் நச்சுப் பொருட்கள் போன்றவைகளிலிருந்து காத்துக்கொள்ளுதல்.
6. விபத்துக்கள், வெள்ளம், யுத்தம், பூகம்பம் இவைகளிலிருந்து ஆயுள் காப்பு மூலம் காத்துக்கொள்ளுதல்.
7. பயங்கர அதிர்ச்சி பயம், ஓயாவேலை இவைகளிலிருந்து காத்துக்கொள்ளுதல்.
8. தொல்லைபண்ணுகிற பொல்லாத வஸ்துகள், ஈவு இரக்கமற்ற மக்களிடமிருந்து தன்னை பாதுகாக்க, அமைதியாயிருப்பதற்கு ஒரு அறை அல்லது இடம் ஏற்படுத்துதல்.
9. இளவயதில் சரீரப்பிரகாரமான தேகப்பியாசம் விளையாட்டுகளில் மகிழ்ச்சியாய் இருத்தல்.
10. மனதைக் குறித்த செயல்களில் குடும்ப வாழ்க்கையில் மகிழ்ச்சியா இருத்தல். (Mental, esthetic, activities)
11. சமூகக் காரியங்களில் பங்கெடுப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தல்.
12. ஏற்றத்துணையை தெரிந்தெடுத்து அவளுடன் அன்புடன் வாழ்க்கை நடத்தும் வாய்ப்பு.
13. பிள்ளைகளிடத்தில் கரிசனையாயிருந்து மக்களிடமும் மிருகங்களிடமும் அன்புகாட்டுதல்.
14. உடன் சமுதாயத்தாரால் அங்கீகரிக்கப்படுதல் அல்லது இகழ்ச்சி அவமதிப்பு ஆகியவை இல்லாதிருத்தல்.
15. தன்னையே மனிதனாக மதித்து சுயமரியாதையுடன் இருத்தல்.
16. அவமானம், மனவியாகுலம் இவைகளிலிருந்து தற்காத்துக்கொள்ளுதல்.
17. நண்பர்களையும் அவர்களுடைய நட்பையும் அடைய சந்தர்ப்பத்தை உருவாக்குதல்.
18. நண்பராக இருந்து பிறருக்கு பாசத்தை காட்டும் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணுதல்.
19. கருத்துக்களை கைக்கொள்ள ஒரு காரியத்தை கடைபிடிக்க மனிதர்கள் மிருகங்கள் பொருட்கள் கருத்துக்கள் ஆகியவற்றின்மேல் அதிகாரத்தைப் பயன்படுத்த சந்தர்ப்பத்தை கொடுத்தல். ஒரு தலைவன் பிறர் தன்னை பின்பற்ற வைத்தல்.
20. ஒரு நல்ல எஜமானை சேவிப்பதற்குரிய ஒரு தருணம் கொடுத்தல்.
21. ஒழுங்குப்படுத்தப்பட்ட குழுக்களிடத்தில் அங்கத்துவம் கொண்டு முக்கியமான செய்திகள் நிகழ்ச்சிகளில் பங்கெடுத்தல்.
22. தனது சொந்த கடந்தகால குறிப்பின் அடிப்படையில் போட்டியிட தருணத்தை வருவித்தல். முடியுமானால் அதிலே மகிழ்ச்சியையும் வெற்றியையும் அடைதல்.

23. தனக்கு சமமானவரோடு போட்டியிட சந்தர்ப்பத்தை வருவித்தல். அத்துடன் போட்டிகளில் 50 சதவீதம் வெற்றியடைதல்.
24. வீரதீரக்காரியங்கள் போன்றவைகளில் எப்பொழுதாவது பங்கெடுத்தல்.
(எ.கா) ஆபத்திலிருந்து ஒருவரை காப்பாற்றுதல்.
தண்ணீரிலிருந்து ஒருவரை காப்பாற்றுதல்.
25. ஏதாவது ஒன்றில் வீராவேஷத்துடன் தாக்குதல். (எ.கா.) பாம்புப் போன்றவைகளை கொல்லுதல்.
26. சமுதாயத்தில் பாதுகாப்பு விதிகளை கடைபிடித்தல் (தேச கலாச்சாரம், சுங்க இலாக்கா, சட்டங்கள், அரசாங்கம்) இவைகளில் நல்வாழ்க்கைக்குரிய சன்மார்க்க விதிகளை கடைபிடித்தல்.
27. அறிவிக்கக்கூடிய உண்மையை கண்டுபிடித்து அதை அறிவிக்கக்கூடிய சுயாதீனத்துடன் செயல்படுதல்.
28. பிறருடைய மகிழ்ச்சியில் களிப்பாய் இருத்தல். (பிறனுக்கிருந்தால் பெருமிதம் தனக்கிருந்தால் தாழ்மை) X (தனக்கிருந்தால் பெருமை, பிறனுக்கிருந்தால் பெருமை)

"Give respect and get respect".
மதிப்புகொடு மதிப்பை பெரு.
"A friend of all, a fiend to none".
அனைவருக்கும் நண்பன் ஒருவனுக்கும் எதிரி இல்லை.

## தன்மைகள் (சுபாவங்கள்)
## (Attitudes)

தன்மைகள் ஒருவனுடைய அனுபவத்தின் வெளிப்பாடாகும். உள்ளத்தின் வாஞ்சைகள் கற்றுக்கொண்ட பழக்கவழக்கங்கள், தன்னை சுற்றிலுமுள்ள சூழ்நிலைகள் இவைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளதே தன்மைகள். சொல்லப்போனால் ஒருவனுடைய தனிப்பட்ட வாஞ்சைகள் குழுக்களின் ஊக்கம் இவைகளின் விளைவே தன்மைகளாகும்.
'இனம் இனத்தைச் சாரும்'. (Brids of the feather flock together).

உண்மையில் தன்மைகள் ஒரு நபரின் ஆளத்துவத்தில் பங்காக இருந்தபோதிலும் தான் தொடர்புகொள்ளுகிற குழுவினராலும் இது உருவாகின்றது.
(எ.கா.) ஒரு பிள்ளை கீழே விழுந்து காலிலே காயமடைய அந்தக் காயத்தை அப்படிப்பட்ட கரிசனையை எதிர்பார்க்கிறது. அதில் யாரும் கரிசனை காட்டாத நிலையில் அப்பிள்ளை தானாகவே எழுந்து நடக்கிறது. விழுந்ததை மறந்து விளையாடச் செல்கிறது. இந்தத் தன்மைகள் ஒரு நபரிடத்தில் அதிகமாக செல்வாக்கு நிறைந்ததாகக் காணப்படுகிறது.

"*People by changing their inner attitudes of mind can alter the outer aspects of their lives*".

- Dr. James William.

"மனிதர்கள் தங்கள் மனோபாவத்தை மாற்றிக் கொள்வதன் மூலம் தங்கள் வாழக்கையையே மாற்றிக் கொள்ளலாம்". - Dr. ஜேம்ஸ் வில்லியம்

இந்த தன்மைகள் ஒரு நபரிடத்தில் அதிகமாக செல்வாக்கு உடையதாக இருக்கிறது. ஒரு செயலுக்கு காரணமாகவும் விளைவாகவும் கிரியை செய்கிறது. அவைகள் தனிப்பட்டவைகளாகவும் ஒரு நபரின் அனுபவத்தின் உணர்வு தொனியில் உறவு கொண்டுள்ளது. ஒரு சூழ்நலையில் ஒருவன் தான் நினைப்பது பேசுவது இவைகளைக் காட்டுகிறது.

(எ.கா.) ஒரு மனிதன் தயையுடன் இருக்கும்போது அல்லது சுமூகமாக இருக்கும்போது பொறுமைசாலியாகவும், மகிழ்ச்சியுடன் நட்புள்ளவனாகவும் எதிர்பார்ப்புத்தன்மை உடையவனாகவும் இருக்கிறான். அதே வேளையில் இணைந்து செல்லாத நபர் குறைகள் இருப்பவராகவும்

பொறுமையற்றவராகவும், நட்பில்லாதவராகவும் ஒரு குழுவினா் விரும்பாத தன்மையில்லாதவராகி இருக்கின்றார்.

ஒரு ஆள் மேற்கூறிய இருநிலைகளிலும் காணப்படும் சாத்தியமும் உண்டு.

1. நட்புடையவனாக இருக்கிறான்.
2. இணங்காதவனாக குறைகண்டுபிடிக்கிறவனாக இருக்கிறான்.

ஒருவனுடைய மனக்கிளர்ச்சியின் எதிர்விளைவுகளினால் ஏற்படும் தன்மைகள் ஒரு குறிப்பிட்ட நிலையில் செயல்படலாம். (எ.கா.) ஒரு நபரின் அனுபவங்கள் பிரியமானதாக அல்லது பிரியமற்றதாகக் காணப்படுகிறது. நாம் தன்மைகளுடன் பிறக்கவில்லை. ஆனால் அனுபவத்தில் உருவாக்கிக்கொள்ளுகிறோம். பல வருடங்களாக விருப்பமான அனுபவங்கள் வாயிலாக சிலவித உணவுகள் நவரசபானங்கள் விளையாட்டுகள், வேலை, இன்னிசை, கலை போன்றவைகளில் ஆர்வம் ஏற்படுகின்றது. அப்படியே நம்முடைய வெறுப்புகளுக்கும் ஒரு குறிப்பிட்ட காரியத்தில் ஏற்பட்ட தோல்வி நம்முடைய அனுபவத்தில் சில கோணங்களில் ஏற்பட்டவை போன்றவை காரணங்களாயிருக்கின்றன. நம்மை சுற்றியிருக்கிறவைகள் இவைகளின் அடிப்படையிலேயே தன்மைத் தொடர்பு உள்ளது. இத்தன்மைகள் வளர்ந்து விரிவடைகிறது. சில சமயங்களில் தன்மைகள் மொழியின் மூலமாகவும் வெளிப்படுகிறது.

(எ.கா.) நன்றி (Thank you), தயவுசெய்து (Excuse me), இவ்வேலையை நன்றாக செய்திருக்கிறீர்கள் (You have done a good job), பாராட்டுகிறேன் (I appreciate you) உங்கள் உதவி தேவை (I need your help), நான் வருந்துகிறேன் (I am sorry).

வயதின் அடிப்படையில் காணப்படும் தன்மைகள்:

ஒரு குழந்தைப் பிறந்தவுடன் நாட்கள் செல்லச் செல்ல தன்மைகள் கீழ்க்கண்டவாறு காணப்படுகிறது.

1. எட்டு வாரங்களில் அல்லது 2 மாதங்கள்:

அதிகமாக அழுதல், சமநிலையற்ற மெய்ப்பாடு (மனக்கிளர்ச்சி).

2. 28 வாரங்களில் அல்லது 7 மாதங்கள்:

சுயதிருப்தி, தனிமையில் விளையாடுதல், பாசம்காட்டுதல், ஆட்களை கண்டு புன்முறுவல் செய்தல்.

3. 40 வாரங்களில் (10 மாதங்கள்)

காணும்போது சிரித்தல் அல்லது குறும்பு விளையாட்டில் பங்கெடுத்தல். அந்நியரைக் காணும்போது பழக பயப்படுதல், குடும்பத்தாருடன் முகமலர்ச்சியுடன் பாசத்துடன் பழகுதல்.

4. 15 மாதங்கள்: (1 ¼ Year)

கண்டிப்பாக எதிர்பார்த்தல், யூகித்தல், அசட்டை, சுயாதீனமாயிருத்தல், மனக்கிளர்ச்சியில் சரியாக காணப்படாதிருத்தல் எல்லோரையும் ஒதுக்குதல், மக்களிடம் சரியாக நடந்து கொள்ளாதிருத்தல்.

5. 21 மாதங்கள்: (1 ¾ Year)

சுயாதீனமற்ற நிலைமை, பிடிப்பில்லாத நிலை, ஆட்களை குறித்த புதிய உணர்வு, அந்நியர்களைக் குறித்த பயம், தனது பொறுப்புக்களைக் குறித்த சொந்த உணர்வு, பிறருடைய பொருட்களை குறித்த உணர்வு. ஒரு முதியவர் அனுமதிக்கிறார் அனுமதியாதிருக்கிறார் என்ற உணர்வு. தாயிடம் அதிகப்பற்று.

6. 24 மாதங்கள்: (2 Year)

மனக்கிளர்ச்சியின் மேம்பாடு, ஒதுங்கிய சுபாவம். தனது பொருளைக் குறித்த கரிசனை. பிறா் பொருளைக் குறித்த பொறாமையற்ற நிலை. புத்தாடைகள், காலனிகளை குறித்த பெருமிதம்.

7. 3 வருடம்: (36 மாதங்கள்)

நல்ல சமநிலை, மகிழ்ச்சி, திருப்தி தனிமையில் களிகூறுதல், நட்புடன் இருத்தல் (Friendship) உதவுதல் (Helping) இணைந்திருத்தல், ஓரளவு பாசமாயிருத்தல், சிறுபிள்ளைகளைப் பார்த்து பொறாமைப்படுதல், நட்புள்ள சூழ்நிலையில் களிக்கூறுதல், விளையாட்டில் அதிகக் களிப்பு, விடுகதைகள் மேல் விருப்பம், பெரியவர்கள் செய்யும் கேளிக்கை சிறுபிள்ளைகளின் பெரு மகிழ்ச்சி.

8. 4 வருடங்கள்: (48 மாதங்கள்)

சுயாதீனமான நிலை. கட்டுப்பாட்டுத்தன்மை, சண்டைபோடும் தன்மை, பிடிவாதகுணம், கடின மனப்பான்மை (சுயநலம்) பொறுமையற்ற நிலை முக்கியமாக சிறுபிள்ளைகளைக் காணும்போது பொறுமையற்ற நிலை.

9. 5 வருடங்கள்: (60 மாதங்கள்)

கண்டிப்புள்ள, புத்திசாலித்தனமான, கல்வி அறிவுள்ள மெய்நிலைத் தன்மைக் காணப்படும். மனநிலையில், சமநிலை, சிலசமயங்களில் எதிர்ப்புத்தன்மையும் காணப்படும்.

10. 6 வருடங்கள்: (72 மாதங்கள்)

மனக்கிளர்ச்சி அதிகம் பிற குழந்தைகளுடன் சொந்த உணர்வில் சமநிலையற்றத் தன்மை.

11. 7 வருடங்கள்: (84 மாதங்கள்)

வயதைக்குறித்த உணர்வு, பிறருடன் சுமுகமாக இருக்கும் நிலைமை. ஆனால் தனது உணர்வுகளில் சமநிலையற்றத் தன்மை.

12. 8 வருடங்கள்: (96 மாதங்கள்)

சுயத்துடன் பிறருடன் சமநிலையற்றத் தன்மை.

13. 9 வருடங்கள்: (108 மாதங்கள்)

அதிக சுயாதீனமடைதல், போதுமான சமநிலை. யோசிக்கின்ற பதிவாகின்ற ஏற்றுக்கொள்கின்ற மனநிலை.

இச்சமயத்தில் பொறுப்பு, சுயாதீனம், ஒத்துழைப்பு ஆகியவை காணப்படுகிறது. பெற்றோருடன் எதிர்த்தாலும் அவர்களைக் குறித்த பெருமைகொள்ளுதல், பேசுதல், அன்பு கூறுதல் காணப்படும். போட்டி மனப்பான்மையில் மகிழ்கின்ற ஒருகாலம். நண்பர்களை இளையவர்களை பாதுகாக்கின்ற உண்மையுள்ள ஒரு பருவம். பாராட்டுக்களை விரும்பும் நிலை.

## மனக்கிளர்ச்சிகளும் உணர்வுகளும்
## (Emotions and Feelings )

உணர்வு என்பது சாமர்த்திய அனுபவங்களில் சுமூகமாக உணர்தல், பரவசமாக மகிழ்ச்சியாக இருத்தல். பாதிக்கின்ற அனுபவங்களில், துக்கப்படுதல், தனது காரியம் சரியென உணர்தல், போன்றவைகளை வெளிப்படுத்துகிறது.

மனக்கிளர்ச்சி என்பது ஒன்று அல்லது பல விளைவுகளால் ஒரு மனிதனின் வாழ்வில் காணப்படக்கூடிய பலம் அல்லது பல விளைவுகளால் ஒரு மனிதனின் விளைவுகளை அல்லது தன்மையை கீழ்க்கண்ட காரியங்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

(எ.கா.) ஒரு தொழிற்சாலையில் ஒரு தொழிலாளி தண்டிக்கப்படும்போது அவனுடைய மனநிலையின் விளைவுகளை கீழ்க்கண்ட விதங்களில் வெளிப்படுத்தலாம். முகம் சிவப்பாக மாறுதல், உள்ளங்கையில் வியர்வை காணப்படுதல் முகத்தில் கோபத்தின் அறிகுறிகள் காணப்படுதல். கதவை வேகமாக சாத்துதல். பூனையை எட்டி உதைத்தல் உடன் வேலையாட்களுடன் தாறுமாறாக பேசுதல் சண்டைக்கும் ஆயத்தமாகுதல். ஒருவனுடைய மனக்கிளர்ச்சியின் விளைவாக பயம் ஏற்படுகிறது. இவ்விதமான பயத்தின் விளைவுகள் ஒரு யுத்த நேரத்தில் சிப்பாய்கள் மத்தியிலும் காணப்படுகிறதாம்.

தொடர்ந்தேர்ச்சியாக மனக்கிளச்சியின் சார்பாக அநேக காரியங்கள் மனிதனின் உடலில் ஏற்படுகின்றன.

தோலில் ஏற்படும் மாற்றம்: (Galvanic Skin Response )

மனக்கிளர்ச்சி உருவாகும்போது ஒருவனின் தோலில் மின்னதிர்ச்சிப் போன்ற உணர்வுகள் ஏற்படுகின்றன. இதை ஒரு மின் கருவியின் மூலம் அறியலாம். மின் கருவியை ஒருவனுடைய உள்ளங்கையில் பொருத்தப்படலாம்.

இரத்த அழுத்தமும் அதன் அளவில் மாறுதல்: (Blood Preassure and Volume )

மனக்கிளர்ச்சியின் வேளையில் இரத்த அழுத்தத்தில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. சரீரத்தின் மேல்பகுதியிலும் உட்பகுதியில் இரத்த அழுத்தத்தில் மாற்றங்கள் ஏற்படுகின்றன. (எ.கா.) கலக்கத்தில் முகம் சிவப்பாக மாறுதல்.

இதயத்துடிப்பு: (Heart rate)

மனக்கிளர்ச்சியின் பரவசத்தில் ஏற்படும் இதயத் துடிப்பின் நிலையின் நிமித்தம் இதயமானது மனக்கிளர்ச்சியின் சின்னமாக மாறிவிடுகிறது.

மூச்சு விடுதல்: (Respiration)

மூச்சு விடுதலில் தன்மையும் அதன் நேரமும் மனக்கிளர்ச்சியில் மாறுகின்றன. (எ.கா.) வேகமாக மூச்சுவிடுதல். ஒருவிதமான சத்தத்தை உருவாக்குதல்.

கண்விழியில் ஏற்றபடும் மாற்றம்: (Pupillary Response)

கோபம், வேதனை, மனக்கிளர்ச்சியினால் ஏற்படும் பரவசம் இவைகளின் போது கருவிழியில் மாற்றம் ஏற்படுகிறது. (எ.கா.) கண் கலங்குதல்.

உமிழ்நீர் சுரத்தல்: (Salivary Secretion)

மனக்கிளர்ச்சி நேரத்தில் வாயில் வறட்சி ஏற்படும். ஏனெனில் உமிழ்நீர் குறையலாம் அல்லது அதன் நிலையில் மாற்றம் ஏற்படலாம்.

தோலில் ஏற்படும் விளைவுகள்: (Pilomotor Response)

மனக்கிளர்ச்சியின்போது ரோமத்தில் புல்லரிப்பு ஏற்படுதல் (செங்குத்தாக நிற்றல்) இதனால் சிறு பருக்களும் அரிப்பும் உண்டாகும்.

வயிறு குடலில் ஏற்படும் மாற்றங்கள்: (Gastro Intestinal Motility)

மிகுதியான மனக்கிளர்ச்சியின் மூலம் வயிற்றிலும் குடலிலும் பாதிப்பு ஏற்படுகிறது. (எ.கா.) வயிற்றோட்டம், குடற்புண்.

தசைகள் இறுக்கமடைதல் (ஆடுதல்) தள்ளாடுதல்: (Muscle Tension and Tremor)

மனக்கிளர்ச்சியின் விளைவாக தசைகள் இறுக்கமடைகின்றன. உடலில் தள்ளாடுவதின் அறிகுறிகள் காணப்படலாம் (ஆட ஆரம்பிக்கின்றன) உடலில் பிறரை தாக்கவும் அறிகுறிகள் ஆரம்பிக்கின்றன. (எ.கா.) கோபமூட்டும் ஒருவனை பளார் என்று அறையும் ஆத்திரம்.

இரத்த நிலையில் (அளவில்) மாற்றம்: (Blood Composition)

மனக்கிளர்ச்சியின் நேரத்தில் முக்கியமான சுரப்பிகள் செயல்படுவதால் அவைகள் ஹார்மோன்களை இரத்த ஓட்டத்தில், செலுத்துகின்றன. இந்நிலையில் இரத்தத்தில் உள்ள சர்க்கரை அளவின் சமநிலையிலும் மாறுதல் ஏற்படுகின்றன.

ஒரு மனிதன் தன்னுடைய மனக்கிளர்ச்சியை பாதிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும். சுயமுயற்சியால் தன்னை கட்டுப்படுத்துவதும் கடினம். கிறிஸ்துவிலிருக்கும் ஒரு மனிதன், ஆவியினால் நிரப்பப்பட்டவன், வேத வசனத்தை பின்பற்றுபவன் ஆவியில் கட்டுப்படுத்துகிறவனாய் காணப்படுகிறான். (நீதி.16:32).

**மனக்கிளர்ச்சியின் விசேஷித்த நிலைகள்**

## (Special Emotional Stages)

1. பயம்:

பிள்ளைகளுக்கு பயம் எதனால் ஏற்படுகிறது என்பதை வயதினடிப்படையில் ஆராய்ச்சி செய்து அது அவர்கள் பெற்றோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 2 வயது குழந்தைகளுக்கு பிள்ளைளை பயமுறுத்துதல் வாயிலிருந்து விரலை அகற்றுதல் அவற்றின் மூலம் பயம் உண்டாகிறது. உயர்நிலைக் கல்வி மாணவர்களுக்கு கல்வி, வேலை, பொருளாதார கஷ்டம் அவமதிப்பு போன்றவைகளைப் பற்றி கவலைகளினால் பயம் ஏற்படுகிறது. உபா.14:22; நீதி.1:8; ஏசா.33:6; 41:10; எரே.33:40; எபி.2:15. ''தீமையை விட்டு விலகுவதே கர்த்தருக்குப் பயப்படும் பயம்''.

2. கோபம்:

விளையாடுவதை நிறுத்தும்போது ஒரு பொருளை எடுத்துக்கொள்ளும் போது இன்னொரு பிள்ளையால் தள்ளப்படும்போது இப்படிப்பட்ட மனமுறிவின் சூழ்நிலையில் பிள்ளைகளின் கோபம் அதிகரிக்கிறது. கல்லூரி மாணவர்கள் மத்தியிலும் இந்நிலை காணப்படுகிறது. சங்.4:4; நீதி.16:32; 23:29; எபே.5:26.

3. புன்முறுவலும் (செய்தல்) சிரித்தலும்: (Smiling and Laughing)

2 மாதக் குழந்தையிடம் புன்முறுவல் செய்து புன்முறுவலை எதிர்பார்க்க முடியாது. 3 மாதத்தில் பிள்ளையிடம் சிரிப்பு காணப்படும். விளையாட்டு நேரத்தில் கண் சிமிட்டும்போதும் சிரிப்புத் தோன்றலாம். பள்ளி நாட்களில் கார்ட்டூன் (கேலிசித்திரங்கள்) கேலி வார்த்தைகள் கதைகள் போன்றவைகளை பாராட்டக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. சிரிப்பின் காரணத்தைக் குறித்து பல தத்துவங்கள் உள்ளன. ''வேதனையோ அல்லது அழவோ உண்டாக்கக்கூடாத ஒரு குறைபாட்டினால் சிரிப்புண்டாகிறது''. அரிஸ்டாட்டில்

''அதிக முயற்சியினால் ஏற்பட்ட ஒரு செய்கை திடீரென்று ஒன்றுமில்லாமல் போகும்போது சிரிப்பு வருகிறது'' (இம்மானுவேல் காண்ட்)

''திடீர் மகிமையின் உணர்வினால் சிரிப்பு உண்டாகிறது'' (ஹோப்ஸ்) அப்.13:52; ரோமர் 14:17. It is a hope of "sudden glory". (Hobbes)

4. தனிப்பட்ட மகிழ்ச்சி:

விளையாடும்போது, வாசித்துக் காட்டும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது. பின்னர் வாசிக்கும்போது தனக்கு விருப்பமான காரியங்கள் சமுதாய செய்கைகள் விளையாட்டுகளில் இந்நிலை ஏற்படுகிறது. ஒரு பிள்ளையை அல்லது முதியவரை எப்பொழுதும் சந்தோஷமாக அல்லது துக்கமாக காண்பது அரிது.

உண்மையான மகிழ்ச்சிக்கு காரணங்களாக நல்ல ஆரோக்கியம், வேலையில் மகிழ்ச்சி, அன்பு, சுத்தமான மனசாட்சி இவைகள் அமைகின்றன. ஒரு மனிதன் கிறிஸ்துவில் இருக்கும்போது எப்பேர்ப்பட்ட சூழ்நிலையிலும் மகிழ்ச்சியிருக்கலாம். யோபு 5:7; பிர.2:1-2, 4-11; 1தெச.5:16; பிலி.4:6.

5. பாசம்: (Affection)

ஒரு குழந்தை தாயின் பிடியில் தாயின் மடியில் தாயின் மார்பில் பால் அருந்துகிற வேளையில் உண்டாகிற மகிழ்ச்சியினால் பாசம் ஆதாரமாக அமைகிறது. வளரும் பருவத்தில் பிள்ளைகள் பற்றுதலை தாங்கள் விரும்பும் பொம்மைகளுக்குக் காட்டும். ஒரு பிள்ளை தாயிடமிருந்து பெற்றுக்கொள்ளும் பற்றுருதியை சில ஆட்கள் பொருள்கள் மீது செலுத்தும் பாசத்துக்கு காரணமாயிருக்கிறது. வாலிபப்பிராயத்தில் ஆண், பெண் என்ற அடிப்படையில் பற்று ஏற்படுகிறது.

6. பொறாமை: (Jealousy)

இது மனக்கிளர்ச்சியில் பிந்தி ஏற்படக்கூடிய ஒரு நிலை. சுமூக சூழ்நிலையில் மாத்திரம் இது ஏற்படுகிறது. ஒரு குடும்பத்தில் புதிதாக ஒரு பிள்ளை பிறக்கும்போது மற்றப் பிள்ளைகள் மத்தியில் பொறாமை ஏற்படுகிறது. பிறந்த குழந்தையிடம் தாய்ப் பாசமாயிருக்கும்போது மற்றப் பிள்ளைகளும் வெறுப்புணர்ச்சி உண்டாகி சில வேலைகளில் சிறிய குழந்தை அடிக்கப்பட்டு இதனால் காயமும் ஏற்படுகிறது.

பொறாமையானது பிறந்த பிள்ளையை புறக்கணித்தல், சாப்பிட மறுத்தல், படுக்கையில் சிறுநீர் கழித்தல் போன்றவைகள் மூலமாக வெளிப்படுத்தப்படலாம்.

## மனக்கிளர்ச்சியின் கட்டுப்படுத்த பயிற்சி
## (Training for emotional control)

மனக்கிளர்ச்சியின் நிமித்தம் பாதிக்கப்பட்டவர்கள், கட்டுப்படுத்த முடியாத கோபம், பயங்கள், தொடர்ந்தேர்ச்சியாக பொறாமை அல்லது திரளான கவலைகளால் ஆளப்படுகின்றனர்.

இந்நிலையிலிருந்து உடனே விடுபெற உளவியல் நிபுணர்கள் உதவ முடியும் என வருகின்றனர். மனஸ்தரமற்ற நிலைக்கு, சரீர, மன, ஆரோக்கியத்திற்கு குறுக்கு வழி நிவாரணம் எங்கும் கிடையாது. சிறுபிராயத்திலிருந்து உருவான மனக்கிறர்ச்சி ஒரே இரவில், சில வாரங்களில் மாதங்களில் மாற முடியாது. எனவே சிறு பிராயத்திலிருந்தே மனக்கிளர்ச்சியை கட்டுப்படுத்த பழக வேண்டும்.

எக்காரியங்கள், சூழ்நிலைகள் இவைகளுக்கு பயந்தோமோ, அது பின்னரும் தொடருகிறது. அதேபோல் தான் கோபமும். எனவே மனதை கட்டுப்படுத்துவது என்பது மிக முக்கியம். சில செயல்முறையான ஆலோசனைகளை பின்பற்றினால் அது மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.

1. மனக்கிளர்ச்சிகளைக்குறித்து எவ்வளவு கற்றுக்கொள்ள கூடுமோ அவ்வளவு கற்றுக்கொள்ளுங்கள்: Learn as much as you can about emotions.

சரீர ஆரோக்கியத்தைக் குறித்து பள்ளியில் படிப்பதுபோல மன ஆரோக்கியத்தைக் குறித்தும் உயர்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு போதித்தால் நலமாயிருக்கும். அனுதின பிரச்சினைகளை கட்டுப்படுத்த தெரிந்திருக்க வேண்டும். மனக்கிளர்ச்சியின், காரணங்கள், எதிர் விளைவுகள் மனதில் ஏற்படும் விளைவுகள் இவைகளை ஒருவர் அறிந்திருந்தால், பிரச்சினை வரும்பொழுது தனது மனநிலையை கட்டுப்படுத்த இதைக்குறித்து ஒன்றுமே தெரியாதவரைவிட ஒருவரால் முடியும்.

2. அவசரமான சூழ்நிலைகளை தவிர்த்துவிடுங்கள்: Avoid emergency situations.

ஒருவர் ஒரு பிரச்சினையை எதிர்நோக்கும்பொழுது, சரியான பகுத்தறிவு நிலையில் சந்திக்க முடியாத நிலையின் விளைவே அவசரமாக ஏற்படும் மனக்கிளர்ச்சி விளைவுகளாகும். மனக்கிளர்ச்சியில் திடமானவர் வருங்காலத்தைக்குறித்து திட்டமிடுவார். முக்கியமான சூழ்நிலைகளை சந்திக்கவும், அச்சூழ்நிலை அவரை பாதிக்காத விதம் இருக்கவும், மனக்கிளர்ச்சியை பெரிதாக்கும் சூழ்நிலை மக்களை தவிர்க்கவும் தெரிந்திருப்பர்.

3. உடலின் செயல்களை கட்டுப்படுத்த கற்றுக்கொள்ளுங்கள்: Learn to control external expression of emotion.

மனக்கிளர்ச்சியின்போது சரீரத்தின் மூலம் ஏற்படும் விளைவுகளை, தனது மனக்கட்டுப்பாட்டினால் முகமலர்ச்சியுடன் காணப்படும் ஒருவர், பிறரையும் அந்நிலைக்குக் கொண்டு செல்ல முடியும்.

4. மனக்கிளர்ச்சிக்கு வேலை ஒரு சிறந்த மாற்று மருந்து: Work is an excellent antidote fore motion.

ஏதாவது ஒரு வேலையில் அலுவலாக இருக்கும் ஒருவர் மனக்கிளர்ச்சிக்கு இடம் கொடுக்க அவருக்கு நேரம் இருக்காது. உங்கள் மனநிலையை பாதிக்கக்கூடிய காரியம் அனுபவம், ஆள், இவர்களை தவிர்த்து வேலையில் ஈடுபடும்போது, மனக்கிளர்ச்சி ஒருவரை பாதிக்க முடியாது. பயப்படும்பொழுது பாடலாம், கோபம் வரும்போது ஓடலாம், ஜெபிக்கலாம் அல்லது ஸ்தோத்திரம் செய்யலாம்.

5. மகிழ்ச்சிகரமான உணர்வுகளை உண்டு பண்ணுதல் கடினமான சூழ்நிலையிலிருந்து ஒருவரை காப்பாற்றும்: A sense of humour will save many difficult situation.

இப்படிப்பட்டவர் மனக்கிளர்ச்சி அனுபவங்களில் இருந்து தன்னை காத்துக்கொள்ளமுடியும்.

## நிர்வாகியும், ஊழியரும்
## (Worker and Manager)

தொழிற்சாலை உளவியல் அடங்கியிருப்பவைகள்

1. ஆட்களை தெரிந்தெடுத்தல் (Selection of Personnel)
2. ஆட்களை பயிற்றுவித்தல் (Training of Personnel)
3. ஆட்களை காலக்கட்டமாக மதிப்பிடுதல் (Periodical evaluation of Personnel)
4. வேலைக்குறிப்புகள் (Job specifications)
5. வேலையை மதிப்பீடுதல் (Job evaluation)
6. ஆட்களை வழிநடத்துதலும் மேற்பார்வையும் (Direction and Supervision of Personnel)
7. சன்மார்க்கமும் (அறநெறி), நலனும் (Moral and Welfare)
8. தொழில் உறவுகள், பொது பரிந்துரையும் (Labour Relations and Collective bargaining)
9. சக வேலையாட்கள், பொதுமக்களுடன் தொடர்பு (Relations with collegues and superiors)
10. விற்பனையாளர்கள், பொதுமக்களுடன் தொடர்பு (Dealings with customers and the public)
11. பொருள் விநியோகஸ்தர்கள், பொருளாதாரர்கள் பாதுகாவலர்களுடன் உள்ள தொடர்பு (Dealings with suppliers, financial houses and security holders)

தொழில் என்பது 85% சதவிகிதம் மக்கள் (ஆண்கள்) 10% சதவிகிதம் பொருள்கள் 5% பணம் இவைகளை உட்கொண்டதாகும். ஒரு பொருளுக்கு கொடுக்கப்பட்ட விலை மதிப்பு 85% சதவிகிதம் தொழிலாளிகள் உழைப்பின் விளைவேயாகும். தோழிற்சாலைக்கு வராத பொருள்கள், மண்ணிலும், கடலிலும், காட்டிலும் இருக்கின்றன.

மரத்திலுள்ள பழங்கள் பதனிட்ட நிலையில் அல்லது சுத்திகரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக் கூடத்தில் இருப்பதற்கு மூளையும் மனித கரங்களும் பெரும்பகுதி வேலை செய்துள்ளன என்பதை மறக்கக்கூடாது. ஒரு பொருள் சாப்பிடும் அளவுக்கு நமது வீட்டு மேஜையில் இருக்கிறதெனில் 85 சதவிகிதம் மக்களின் மன, கை வேலையின் விளைவாகும். தொழில் நஷ்டம் ஏற்படுவதற்கு காரணம் 80% சதவிகிதம் நிர்வாகம், வேலையாள் பொறுப்பாகும். தோழிலில் போட்டி, முதலீட்டு குறைபாடு, ஊழல், கடன் சுமை, அதனால் வந்த இழப்பு சரியாக எழுதி வைக்காத குறிப்புகள், நிர்வாகிகள், வேலையாட்கள் இவர்களுக்கிடையேயுள்ள திறமையற்றத் தன்மை இதனால் வரும் பிரச்சினைகளாகும்.

''நான் அடிமையாக இருக்க விரும்பாதது போல, எஜமானனாகவும் இருக்க விரும்பவில்லை''.

"As I would not be a slave; so I would not be a master". - Abraham Lincoln.

ஒரு நிர்வாகி தனது நேரத்தை தொழிலாளிகளுடன் செலவழிக்க கூடியவராயிருக்கிறார். அவர்களை வழிநடத்துதல், மேற்பார்வையிடுதல், வசிகரித்தல், திட்டமிடுதல் போன்றவை இதில் அடங்கும். பொருள் உற்பத்தி பிரச்சினைகள் வினியோக பிரச்சினைகள், பொருளாதார பிரச்சினைகள் நிர்வாக பிரச்சினைகள், போன்றவை உளவியல் பிரச்சினைகளில் முடிவடைகின்றன.

**முதலாளி தொழிலாளி இவர்கள் உறவுகள்**

கீழ்க்காணும் ஆலோசனைகள் எந்த ஸ்தாபனத்திலும், தொழில் துறையிலும் முதலாளி, தலைவர், மேற்பார்வையாளர்கள், ஊழியர்கள் போன்றோருக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும்.

ஒரு பிரச்சினையை தீர்த்து வைப்பது எப்படி?

1. *உண்மைகளை அறிந்துகொள்ளுங்கள்:*

குறிப்புகளை புரட்டி பாருங்கள், என்ன சட்டதிட்டங்களை கையாளலாம் என கண்டு கொள்ளுங்கள். தனிப்பட்ட அந்நபர்களுடன் பேசுங்கள் கருத்துக்களையும், உணர்வுகளையும் பெறுங்கள். நடந்த காரிய விவரம் அனைத்தும் நீங்கள் சரியாக அறிந்து கொள்ளுங்கள். அது மிக முக்கியம்.

2. *எடையிட்டு, தீர்மானியுங்கள்:*

உண்மைகளை ஒன்று சேருங்கள். ஒன்றுக்கொன்று இணைந்து செல்கிறதா என்பதை உணருங்கள். நடைமுறை காரியங்கள், சட்டமுறைகளை பாருங்கள். சாத்தியமான செயல்கள்

யாவை என பாருங்கள். தனிப்பட்ட நபர், குழு, உற்பத்தி – உங்களுடைய தீர்மானத்தினால் ஏற்படும் பாதிப்பை உணருங்கள் திடீர் முடிவுக்கு குறித்து விடாதீர்கள்.

3. *செயல்படுங்கள்:*

நீங்களாகவே இதை கையாளப் போகிறீர்களா? இதை கையாள உங்களுக்கு உதவி தேவையா? இக்காரியத்தை உங்களுடைய மேலதிகாரிகளிடம் சொல்லி ஆலோசனை கேட்கலாமா? நீங்கள் செயல்படுகிற நேரத்தை பாருங்கள்.

4. *விளைவுகளை அறிந்து கொள்ளுங்கள்:*

எவ்வளவு சீக்கிரத்தில் இவைகளை பின்பற்றுவேன்? எப்பொழுதெல்லாம் ஆய்வு செய்வேன்? விளைவுகள், தன்மைகள், உறவுகள் இவைகளை குறித்து கவனியுங்கள் உங்கள் செயல் உற்பத்தியை பெருக்கியதா?

<u>நல்ல விளைவுகளுக்குள்ள அஸ்திபாரங்கள்</u>

1. ஒவ்வொரு ஊழியரும் எவ்விதமாக பணியில் முன்னேறுகின்றனர் என்பதை அறிந்துகொள்ளட்டும். ஒருவரிடத்தில் உங்கள் எதிர்பார்ப்பு என்னவென்பதை வரையறை செய்யுங்கள். முன்னேற்றத்திற்குரிய வழிகளை சுட்டிக் காட்டுங்கள். Give credit when due.

2. பாராட்ட வேண்டிய நேரத்தில் பாராட்டுங்கள். அதிகமான வேலை, போன்றவற்றை மனதில் வையுங்கள் சரியான நேரத்தில் சொல்ல வேண்டியதைச் சொல்லுங்கள்.

3. Tell people in advance about damages that will effect them.
நீங்கள் செய்யும் மாற்றங்கள் என்ன பாதிப்பை உண்டுபண்ணும் என்பதை முன்கூட்டியே அவர்களுக்கு சொல்லுங்கள். ஏன் இந்த மாற்றம் தேவை என்பதை கூடுமானால் கூறுங்கள். மாற்றத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ள வையுங்கள்.

4. Make best use of each person’s ability.
ஒவ்வொருவரின் திறமையையும் எவ்வளவுக்களவு உபயோகிக்கமுடியுமோ அவ்வாறு உபயோகியுங்கள் ஒருவரிடத்தில் தற்சமயம் உபயோகப்படாமல் இருக்கும் திறமையை கண்டு கொள்ளுங்கள். ஒரு மனிதனுடைய வழியில் குறுக்கிடாதேயுங்கள்.

5. People must be treated as Individuals.
மக்கள் தனிப்பட்ட ஒவ்வொரு நபராக நடத்தப்பட வேண்டும்.

## போதகர் கரிசனையும், ஆலோசனையும்

## அல்லது

## போதகர் சபையை விசாரிப்பதும், ஆலோசனை கூறுதலும்

போதகர் ஊழியம் என்பது மிக முக்கியமான ஊழியம் ஆகும். ஒரு தகப்பன் தனது குடும்பத்திற்குத் தலைவனாயிருக்கிறது போல, ஒரு சபையில் 100 விசுவாசக் குடும்பங்களிருந்தால் சுமார் 400 பேருக்கு ஒரு மேய்ப்பராகப் பணிபுரிகிறார். கர்த்தர் ஒரு போதகரை மேய்ப்பனாக ஒப்பிடுகின்றார். மேய்ப்பனுக்கு 6 அறிவு உண்டு, ஆட்டு மந்தைக்கோ 5 அறிவு மட்டுமே. மேய்ப்பன் ஒரு மனிதனாகவும், சபை மக்கள் ஆடுகளாகவும் வர்ணிக்கப்பட்டுள்ளனர். அதேவேளையில் மேய்ப்பனாயிருக்கிற போதகர் இயேசுவுக்குமுன் ஒரு ஆடாக இருக்கிறார் என்பதை மறந்துவிடக் கூடாது.

இன்று உலகத்தில் மனிதன் ஒரு பகுத்தறிவுள்ள மிருகமாகக் கருதப்படுகிறான். எனவே தேவன் (எசே.34:2) பெலவீனமானவைகளைப் பெலப்படுத்துவார், எலும்பு முறிந்தவைகளை காயம் கட்டுவார். துரத்துண்டவைகளைத் திருப்பிக் கொண்டுவருவார். காணாமற்போனவைகளைத் தேடுவார். (எசே.34:4).

கர்த்தர் ஒரு போதகருக்கு கவனிக்கின்ற, விசாரிக்கின்ற, ஆலோசனைக் கொடுக்கின்ற ஒரு ஊழியத்தைக் கொடுத்துள்ளார். (எசே.34:7, 8) எனவே, ஒரு ஊழியக்காரன் தனக்கு ஆண்டவர் மிகவும் உத்திரவாதமுள்ள ஊழியத்தைக் கொடுத்துள்ளார் என்பதை உணரவேண்டும். (எசே.34:12-17).

## போதகரும், சந்திப்பின் ஊழியமும்

ஒரு போதகர் சபையில் பிரசங்கிக்கிறவர் மாத்திரமல்ல, சபைக்கு வரக்கூடிய குடும்பங்களை சந்திக்கிறவராகவும் இருக்க வேண்டும். சபைக்கு மக்கள் வரும்பொழுது அவர்கள் எல்லோரிடமும் பேசுவதற்கு போதகருக்கு சமயம் இருக்காது, வாய்ப்பு கொஞ்சமே. அவர்களை சந்திக்கும்பொழுது அவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும், அவர்களுடைய பிரச்சனைகளுக்கு செவிகொடுக்கவும், ஆலோசனை கொடுக்கவும், அவர்களுடன் ஐக்கியம் கொள்ளவும், உதவி செய்யவும் தனிப்பட்ட முறையில் அவர்களுக்காக ஜெபிக்கவும் முடிகிறது. ஒருவர் இவ்வாறு கூறுகிறார்: “ஒரு வீடு சந்திக்கும் போதகர் சபையை சந்திக்கும் மக்களை உருவாக்குவார்.”

## <u>சந்திப்பதில் சில எச்சரிப்புகளும் ஆலோசனைகளும்</u>

1. அலுவலான நேரத்தில் முக்கியமாக சாப்பாட்டு நேரத்தில் சந்திக்கச் செல்லக் கூடாது.
2. இரவு நேரங்களில் 9 மணிக்கு மேல் காலதாமதமாகச் சந்திக்கச் செல்லக்கூடாது. கணவன் இல்லாத நேரத்தில் எதிர்பாலினரைத் தனிமையாகச் சந்திக்கச் செல்லக்கூடாது.
3. எதிர்பாலினர் காரியத்தில் அனுதாபத்துடன் பேசும்போது அது பாவத்தில் நடத்திவிடும். சூழ்நிலை ஏற்படுமெனில் கூடுமானவரையில் மனைவியை அழைத்துச் செல்லுதல் நல்லது. அநேக குடும்பங்களில் கணவர்கள் தங்கள் மனைவிகளுடன் நேரத்தை செலவழிக்கத் தவறுவதால் ஒரு போதகரோ, உடன் ஊழியரோ அல்லது சாட்சிபகருகிறவரோ, வேதனையிலுள்ள பெண்ணைக் குறித்து அனுதாபப்பட்டு பாவ வலையில் விழுவதற்கு வாய்ப்புகள் ஏராளம். ஒருவர் மனைவியை அழைத்துச் செல்லும்பொழுது, ஒரு பெண் இன்னொரு பெண்ணுடன் தனது பிரச்சனையை பயமில்லாமல் கூறுகையில் போதகர் மத்தியஸ்தராக ஆலோசனை கூறலாம்.
4. குடும்பங்களை சந்திப்பதற்கு நாட்களையும், நேரத்தையும் ஒழுங்குப்படுத்திச் சென்றால் நலமாக இருக்கும்.
5. வீடுகளை சந்திக்கும்பொழுது இடத்துவாரியாக குடும்பங்களைப் பிரித்து, குறிப்பிட்ட நாட்களில், குறிப்பிட்ட நேரங்களில் சந்திக்கச் செல்லலாம்.
6. முக்கிய அழைப்பு வரும்போது அதற்கு முதலிடம் கொடுக்க வேண்டும். (உ.ம்) வியாதி, விபத்து, மரணம், குடும்ப சண்டை.
7. ஒவ்வொரு குடும்பத்தைக் குறித்த விபரங்களையுடைய அட்டவணை நூலை வைத்துக் கொள்ள வேண்டும்.

அதில் இருக்க வேண்டியவை:

- ♦ குடும்பத் தலைவனின் பெயர் மற்றும் விலாசம், வயது.

- மனைவி பிள்ளைகளின் பெயர்கள் மற்றும் வயது.
- குடும்பத்தாருடைய பிறந்த குறிப்புகள் (தேதி, மாதம், வருடம்).
- அவர்களுடைய ஆவிக்குரிய நிலை குறித்த விபரம் (ஞானஸ்நானம், அபிஷேகம், அங்கத்துவம், சபையில் இவர்களின் பங்கு).
- ஒரு போதகர் தனது விசுவாசிகளை, சபையின் எண்ணிக்கையின் அடிப்படையில் மாதம் ஒருதடவை அல்லது 6 மாதத்திற்கு ஒரு தடவை, அல்லது வருடத்திற்கு ஒரு தடவையாகிலும் சந்திக்க திட்டமிட வேண்டும்.

சந்திக்கப்பட வேண்டியவர்கள்

### வியாதியாயிருப்பவர்கள்

சபையிலுள்ளவர்கள் வியாதிப்படுக்கையில் இருக்கும்போது போதகருக்கு தகவல் கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் (அவர்களைப் போய்) சந்தித்து, அவர்களுக்காக ஜெபிக்கவேண்டியது போதகரின் தலையாய கடமை. ஆவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளை வேதவசன ஆதாரத்துடன் சொல்லி, உள்ளத்தில் நம்பிக்கையூட்டி, ஆண்டவரிடம் அவர்களுக்காக ஜெபிக்கலாம் (சங்.42:3, 4; 107:20; ஏசா.53:5). எண்ணெய் பூசியோ, உடலில் கரத்தை மெதுவாக வைத்தோ, சிறிய குரலில் ஜெபிக்கலாம். சரீரத்தில் கையை வைத்து அழுத்தக்கூடாது. அது அவர்கள் உடலை பாதிப்பிற்குள்ளாக்கும் (பாதித்துவிடலாம்).

### பிரச்சனையுள்ளவர்கள்

சபையிலுள்ள யாராவது ஒருவர் ஒரு குழப்பமான சூழ்நிலையில் செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம். ஒரு விபத்தோ, திடீர் சுகவீனமோ, துக்கமோ, பொருளாதார நெருக்கடியோ, நரம்புத்தளர்ச்சியோ (போன்றவை) காணப்படலாம். இப்படிப்பட்டவர்கள் அவல நிலையிலிருப்பார்கள். சிலர் தங்களுடைய பிரச்சனைகளை யாரிடத்திலும் சொல்லமாட்டார்கள். சிலர் போதகரின் உதவியை நாடி வருவார்கள். இப்படிப்பட்டவர்களை ஆறுதல்படுத்தி, வேத வசனங்கள் மூலம் தைரியப்படுத்த வேண்டும். இதற்கு வேத அறிவு இன்றியமையாதது. (பிலி.4:6, 7)

### தனிமையிலிருப்பவர்கள்

வயதுசென்றவர்கள் ஊருக்குப் புதிதாய் வந்தவர்கள், (சிலசமயத்தில்) பிள்ளைகளால் கைவிடப்பட்டவர்கள், வேலையை இழந்தவர்கள், தங்களது தவறான வாழ்க்கையால், பெற்றோரால் துரத்தப்பட்டவர்கள், இல்லத்திலோ வேறு எங்கோ வேதனையோடு இருப்பவர்கள் (வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்கள்). ஊருக்குப் புதிதாய் வந்தவர்கள் யாரை நம்புவது யாரிடத்தில் பழகலாம் என்று சிந்தித்துக் கொண்டிருப்பவர்களை சந்திப்பதின் மூலம், அவர்களுடன் அன்புடன் பேசி ஜெபித்து, அவர்களை ஆலயத்திற்கு வரும்படி அழைப்புக் கொடுக்கலாம்.

### சோர்வுள்ளவர்கள்

பலவிதமான அனுபவங்கள் ஒருவரது வாழ்க்கையில் சோர்வை உண்டுபண்ணலாம். ஒருவேளை வியாபாரத்தில் தோல்வி ஏற்பட்டிருக்கலாம். இதற்குக் காரணம் நிர்வாகப் பிரச்சனை, அல்லது கடன் வாங்கிய விசுவாசிகள் பணத்தைத் திரும்பக் கொடுக்காததினால் வந்த பிரச்சனையாக இருக்கலாம். தொழிலில் எல்லாவற்றையும் இழந்தவர்களும், பல இரவுகளை தூக்கமின்றி கழிக்கலாம். சில சமயத்தில் ஒரு குடியானவனுக்கு தன் வயலில் ஏற்பட்ட சேதம் அல்லது தானிய விளைச்சலின்மை அல்லது ஒருவரை யாரும் திருமணம் செய்ய முன்வராதது போன்றவைகளினால் சோர்வு ஏற்படலாம். குடும்பத்தில் பெற்றோர் பிள்ளைகள் மத்தியில் சோர்வும் வேதனையும் காணப்படலாம். புருஷன் கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தினால் (பிரச்சனையாலும்) யாரோ ஒருவர் துக்கத்துடன் அல்லது மனைவி பெற்றோர் வீட்டில் வேதனையுடன் இருக்கலாம். சிலர் கல்லூரிக்குப் போகமுடியாமல் பணமில்லாததால் சோர்வுடன் இருக்கலாம். இவர்களையெல்லாம் ஆறுதல்படுத்துவது ஒரு போதகரின் வேலையாகும். (மத்.6:30-34)

### உறவினர்களை இழந்தவர்கள்

ஒரு போதகர் ஒரு நோயாளியை சந்தித்துவிட்டு, தனது (தங்கள்) வீட்டிற்குள் நுழைந்து, 5 நிமிடங்களில் அந்த நோயாளி இறந்து போனதாகத் தகவல் கிடைக்கலாம். போதகர் உடனடியாக அந்த வீட்டிற்குச் செல்ல வேண்டும். துயரத்தோடிருக்கிறவர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் இருப்பார்கள், ஒருசில ஆறுதல்தரும் வேதவசனங்களை உபயோகித்து ஜெபித்த பின்னர் செய்ய வேண்டிய காரியங்களுக்கான ஆலோசனைகளைச் சொல்லலாம்.

செய்யவேண்டியவை:

1. முக்கியமானவர்களுக்கு, உறவினர்களுக்குத் துக்க செய்தியை அறிவித்தல். (ஜீப் மூலம் ஒலிபெருக்கியால் அறிவித்தல், தொலைபேசி மூலம் தெரிவித்தல்).
2. சவப்பெட்டி செய்தல் அல்லது வாங்குதல்.
3. கல்லறைக் குழி ஆயத்தம் செய்தல்.
4. அடக்க நேரத்தை நிர்ணயித்தல்.
5. இறந்து போன சடலத்தை சில மணி நேரம் பாதுகாக்க ஏற்ற முறைகளைக் கையாளச் செய்தல்.
   முக்கியமாக சவப்பெட்டிக்குள் உப்பு போடுதல், ஐஸ் கட்டிகளை வைத்தல், காதுகள் மூக்குகளில் பஞ்சு வைத்தல், வாயை மூடுதல், கண்களை மூடுதல் வாசனைத் தைலம் தெளித்தல். மருத்துவமனையில் இறந்த சரீரமானால் ஊருக்கு கொண்டு செல்லுமுன் மருத்துவக் கடிதம் பெற வேண்டும். இன்றைய நாட்களில் 60 வயதுக்குட்பட்டவர் மரித்தால் மருத்துவக் கடிதம் காவல் துறையினரால் கேட்கப்படுகிறது.
6. பணக்கஷ்டமுள்ள குடும்பமாயிருந்தால் சபையிலிருந்து அல்லது விசுவாசிளிடமிருந்து பணம் பிரித்துக் கொடுத்து உதவலாம்.
7. பஞ்சாயத்து அல்லது முனிசிபல் அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டிய நேரத்திற்குள் அறிவிக்க வேண்டும்.

### சபை விசுவாசிகளை சந்தித்தல்

சபை விசுவாசிகளைத் தொடர்ந்தேர்ச்சியாக சந்திப்பது போதகரின் தலையாய கடமையாகும். சிறு சபையாக இருக்குமாயின் மாதத்திற்கு ஒரு முறையாவது, எல்லா விசுவாசிகளையும் சந்திக்க திட்டமிட வேண்டும். பெரிய சபையாக இருக்குமாயின் ஆறு மாதத்திற்கு ஒரு முறையாவது, அல்லது வருடத்திற்கு ஒரு முறையாவது அவர்களைச் சந்திக்க வேண்டும். விசுவாசிகளுடைய விலாசங்கள் போதகரிடம் இருக்க வேண்டும். விசுவாசிகளின் வீடுகளிருக்கும் இடங்களைத் தொகுதி வாரியாகப் பிரிக்க வேண்டும். அப்படிச் செய்தால் முறைப்படியாக அவர்களைச் சந்திப்பதற்கு வசதியாக இருக்கும். சபை ஆராதனையில் போதகர் சந்திக்கும் இடங்களைக் குறித்து முன்கூட்டியே அறிவிக்கலாம் அல்லது விளம்பரப் பலகையில் குறிப்பிடலாம். போதகர் தனது பையில் ஒரு டைரி (நாட்குறிப்பு நோட்டு) கட்டாயம் இருக்க வேண்டும். அனுதினமும் நடக்கும் முக்கியக் கரியங்கள், நடக்க வேண்டிய காரியங்கள் சந்திக்கப்பட வேண்டிய மக்கள் ஆகியவை இதில் இடம் பெறலாம்.

### சபைக்கு வராதவர்களை சந்தித்தல்

இப்பட்டியலில் பெயர் கிறிஸ்தவர்கள், ஒரு சபைக்கும் செல்லாதவர்கள், கிறிஸ்தவரல்லாதவர்கள், பின்மாறியவர்கள் (சண்டை போட்டவர்கள்) பிரச்சனையோடு சென்றவர்கள், பிணியாளிகள் போன்றவர்கள் இடம் பெறலாம். ஒரு போதகர் இன்னொரு சபைக்கு சென்றுகொண்டிருக்கும் விசுவாசிகளை சந்திக்க ஸ்தல சபைப் போதகரே தனது விசுவாசிகளை சந்திக்காமல் இருப்பாரேயானால் நாம் சந்திப்பதில் தவறில்லை.

### சிறைச்சாலையில் இருக்கிறவர்கள்

இவர்களை சந்திக்க முதலில் சிறை அதிகாரியிடம் அனுமதி பெறவேண்டும். அனுமதி பெற்ற பிறகே சென்று சந்திக்க வேண்டும். ஏற்கனவே சிறைச்சாலையில் ஊழியம் செய்தவர்களுடன் ஆரம்பத்தில் கூட சென்று பல காரியங்களைக் கற்றுக் கொள்ள இது உதவியாயிருக்கும். இவர்களுக்காக அதிகம் ஜெபிக்க வேண்டும். அவர்கள் கேட்கும் பொருள்களை சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதியில்லாமல் வாங்கிக் கொடுக்கக்கூடாது. (உ.ம்) பிளேடு, தீப்பெட்டி, போதை பொருட்கள் போன்றவை. லெட்டர் கொடுத்தாலும் போஸ்ட் பண்ணக்கூடாது. அவர்கள் சொல்லுகிற எல்லாவற்றையும் நம்பிவிடக்கூடாது. இவர்கள் மத்தியில் பிரசங்கிக்கும் போது தேவ அன்பின் அடிப்படையில் பேச வேண்டும். (வெளியே) விடுதலை பெற்று வெளியே வந்தவர்களை சமூக ஸ்தாபனங்களுக்கு சிபாரிசு செய்யலாம். நம் வீட்டிற்கு அப்படிப்பட்டவர்கள் அடிக்கடி வருவார்களென்றால் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

### கைவிடப்பட்டவர்கள் (தனிமையில்) இருப்பவர்கள்

(தனிமை என்பது மனிதனை வாட்டக்கூடிய கொடிய பிரச்சனையாகும். தானாக விரும்பி தனிமையிலிருப்பது வேறே) பிறரால் ஒடுக்கப்பட்டு, கைவிடப்பட்டு தனிமையில் இருக்கும்போது அது

ஒருவரை மிகவும் வாட்டக்கூடியதாகும். பொருட்களை, செல்வத்தை, மனைவி, பிள்ளைகளை இழந்து வயோதிப நிலையில் கவனிப்பாரற்று, தனிமையில் இருக்கும்போது கடந்த கால அனுபவங்கள் (நல்ல நிலைமையில் இருந்த நிலை) அவர்களை வாதிக்கும், இப்படிப்பட்டவர்களை (யாதாமொருவர்) சந்திக்கும்போது தங்கள் மனதிலுள்ளவைகளெல்லாம் சொல்ல விரும்புவார்கள். கண்ணீர் வடிப்பார்கள். ஆறுதலின் வார்த்தைகளை எதிர்பார்ப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் மத்தியில் செய்யும் ஆறுதலின் ஊழியம் மிகவும் உபயோகமுள்ளதாகும், உன்னதமானதாகும். நாம் சொல்லும் வார்த்தைகள் தேவ நடத்துதலின்படி பரிசுத்தாவியின் வல்லமையால் செய்கையுடன் சொல்லப்படுமெனில் அது மிகவும் பயனள்ளதாயிருக்கும்.

**மருத்துவமனையிலிருப்பவர்கள்**

போதகர்கள் தாங்கள் ஊழியம் செய்யும் ஸ்தாபனத்திலிருந்து, போதகருக்குரிய அடையாள அட்டைகளை வாங்கி வைத்திப்பது நல்லது. அவசர நேரங்களில் மருத்துவ நிலையங்கள் செல்வதற்கு இது மிகவும் பிரயோஜனமுள்ளதாயிருக்கும். பொதுவாக வியாதியஸ்தர்களை, சந்திக்கிற (குறிப்பிட்ட) நேரங்களில்தான் ஒருவர் சந்திக்க செல்லவேண்டும். இதில் போதகர்களுக்கு விதிவிலக்கு உண்டு. சிறு பிள்ளைகளை அழைத்துக் செல்லக்கூடாது. அவர்களால் நோயாளிகளுக்கு நன்மை ஏற்படாமல் தீமை ஏற்பட வாய்ப்பு உண்டு. குரும்புத்தனமான பிள்ளைகள் நோயாளியின் கட்டிலில் கிடக்கும் அட்டையை வேறு கட்டிலில் மாற்றிப்போட்டுவிட்டால் விபரீதங்கள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

♦ மருத்துவமனையின் அனுமதியின்றி எவ்வித உணவுப் பொருட்களையும் நோயாளிகளுக்கு வாங்கிச் செல்லக்கூடாது. ஏனெனில் நோயாளி விரும்பும் சில குறிப்பிட்ட உணவும் பதார்த்தங்கள் அவர் உடலுக்குத் தகுந்ததல்ல என்று மருத்துவர் ஒருவருக்கே தெரியும்.

♦ நோயாளிகளிடம் ஆறுதலான, நம்பிக்கையான வார்த்தைகளைப் பேச வேண்டும். பயமுறுத்தக்கூடாது. (சங்.41:3, 4 - 8) வியாதியஸ்தர்களிடம் குறைத்துப்பேசி, அமைதியாக ஜெபிக்க வேண்டும். பண உதவி தேவையெனில் சபை மூலம் அல்லது தியாகத்தின் அடிப்படையில் உதவி செய்யலாம்.

**ஆலோசனைக்கு நம்மிடத்தில் வரும் பலவிதமான நபர்கள்**

(ஆலோசனை ஊழியத்தில் உதவி பெற பலவிதமான நபர்கள் நம்மிடத்தில் வருவார்கள்)

1. பிரச்சனைக்கு வழி தெரியாமல் வருபவர்கள் (பேதைகள்).
2. பிரச்சனைகளுக்கு வழிதெரிந்தும் அதை உறுதிப்படுத்திக்கொள்ள வருபவர்கள்.
3. ஒரு சிலர் தங்களுடைய பிரச்சனைக்கு அவர்களே பதிலை வைத்துக்கொண்டு (அந்த பதிலுக்க) ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு நம்மிடத்தில் வந்து அவர்கள் மனதில் இருக்கும் பதிலையே எதிர்பார்ப்பார்கள். அவர்கள், எதிர்பார்ப்பிற்கு உகந்தவண்ணம் நாம் ஆலோசனை கூறி, அது நடந்துவிட்டால் நம்மைப் புகழுவார்கள். நடக்காவிட்டால் இகழுவார்கள்.
4. ஒருசிலர் சில வஞ்சகமான கேள்விகளுடன் நம்மை அவர்கள் வலையில் சிக்கவைப்பதற்காக வருவார்கள். (நீதி.26:23)
5. சிலர் கோள்சொல்வதற்காகவே வருவார்கள். தனிப்பட்ட பிரச்சனைகளை சமாளிக்க, (கடந்து செல்ல) தாங்கிச் செல்ல மக்களுக்கு உதவுதல் தகுந்த ஆலோசனை, மனஉருக்கத்தின் மூலம் பிறர், பிரச்சனைக்கு பதிலை கண்டுகொள்ளச் செய்தல் (அப்.20:26 தேவனுடைய ஆலோசனை).

நம்மிடத்தில் கேட்ட காரியங்களை வெளியே போய் பரப்பிவிடுவதற்காக வருவார்கள். (நீதி.11:14; 24:6).

இப்படிப்பட்டவர்களைக் குறித்து போதகர் எச்சரிக்கையோடு இருக்க வேண்டும். அதே நேரத்தில் நமது நல்ல ஆலோசனை தவறு செய்பவர்களையும் மாற்ற வல்லமையுடையது என்பதை மறந்துவிடக்கூடாது. (1 இராஜா.3:8-10).

“சுகம் உண்டாகும், ஜெயம் உண்டாகும், எண்ணங்கள் ஸ்திரப்படும்.” (ஆலோசனைகளால்)

ஆகவே ஒரு போதகர் தன்னிடத்தில் யார் வந்தாலும் சரி, தான் ஒரு தேவ மனிதன் என்பதைக் கருதி, தேவ வசனத்தின்படி சரியான ஆலோசனை கொடுக்கிறவராக இருக்க வேண்டும்.

## ஆலோசனை பெறவேண்டியவர்கள் (ஆலோசனை தேவையுள்ளவர்கள்)

**1. இரட்சிக்கப்படாதவர்கள்:**

இப்படிப்பட்டவர்கள் நம் சபை விசுவாசிகளின் குடும்பங்களிலும், நமது (சொந்தக்) குடும்பங்களிலும் வெளியிடங்களிலும் இருக்கலாம். இவர்கள் பாவமன்னிப்பின் நிச்சயம் என்னவென்பதை அறியாமல் மனதில் சந்தேகத்துடனும், குழப்பத்துடனும் இருக்கலாம். இவர்களை வெறுக்கவோ, அவதூறாகப் பேசவோ கூடாது. இவர்களைத் தனிப்பட்ட முறையில் சந்தித்து, அன்புடன் தெளிவாய்க் கவனித்து, ஜெப சிந்தையுடன் இரட்சிப்பைக் குறித்து, அன்புடன் தெளிவாய் கூறி, கிறிஸ்துவண்டை நடத்தவேண்டியது ஆலோசகரின் கடமையாகும்.

1. கடவுள் (இயேசு) ஒருவனிடத்தில் அன்பாயிருக்கிறார். யோவான் 3:16.
2. அந்த அன்பை உணர முடியாததற்குக் காரணம் பாவமாகிய இடைவெளியே. ரோமர் 3:23.
3. பாவத்திற்காக இயேசுவை பரமபிதா தியாகபலியாக ஒப்புக்கொடுத்தார். ரோமர் 6:23.
4. இயேசுவை தமது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுமுன் பாவ உணர்வடைந்து பாவத்தை அறிக்கையிட்டு, பரிசுத்த ஆவியானவர், நம்மை அறிந்தவர்கள், நாம் கூறும் சாட்சி ஆகியவைகள் ஆதாரங்களாக அமைகின்றன. ரோமர் 10:9.

**2. பின்மாற்றக்காரர்கள்:**

(யாக்.5:19, 20; எபி.10:26, 29).

தங்கள் வாழக்கையில் ஏற்பட்ட ஒரு தோல்வி, பாவச் சூழ்நிலை பிறருடைய தலையீடு, வேறு ஏதாவது சூழ்நிலைகளால் பின்மாறியவர்களாயிருக்கலாம்.

உபதேசத்தில் பின்மாறியவர்களுமாய் இப்பார்கள், இவர்களைத் தனிப்பட்டவிதத்தில் சந்தித்து, பாரத்துடன் ஜெபித்து, திரும்பவும் ஆவிக்குரிய நிலைக்குக் கொண்டுவரலாம். அவர்கள், எதினிமித்தம் பின்மாறிப்போனார்களென்பதை அறிந்து இப்படிப்பட்ட சூழ்நிலை சபைக்குள் வரவிடாதபடி போதகர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

அ. எபி.3:12-14:

1. அவிசுவாசம்
2. பாவத்தின் வஞ்சனை
3. நம்பிக்கையில் தளருதல்

ஆ. எபி.6:4-6:

1. "ஒருதடவை பிரகாசித்தவர்கள்"
2. "இப்பொழுது அதை மறுதலிக்கிறவர்கள்"
3. "இயேசுவை மறுபடியும் சிலுவையில் அறைபவர்கள்"

இ. எபி.10:26-29:

1. "மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்தல்"
2. "ஆண்டவரைக் காலின்கீழ் மிதித்தல"
3. "இயேசுவின் இரத்தத்தையும், ஆவியானவரையும் நிந்திக்கிறவர்கள்."

ஏசா.59:13:

"பொய் பேசி எங்கள் தேவனை விட்டுப் பின்வாங்கினோம்."

செப்.1:6:

"கர்த்தரை விட்டுப் பின்வாங்குகிறவர்களையும்....
சங்காரம்பண்ணுவேன்."

**3. இரட்சிப்பின் அனுபவத்தைக் குறித்து சந்தேகத்தோடிருக்கிறவர்கள்:**

இரட்சிக்கப்பட்டவர்கள் அறிந்தோ, அறியாமலோ தவறு செய்யும்போது அதை ஆண்டவரிடம் அறிக்கையிட்டு, முன் செல்லாதபடி தங்கள் இரட்சிப்பைக் குறித்தே சந்தேகப்படுவார்கள். இப்படிப்பட்டவர்களுக்கு ஆலோசனை சொல்ல தேவஞானமும், அனுபவமும் தேவை. தாங்கள் செய்த தவறுகளை உணர்பவர்களை கர்த்தரிடம் அறிக்கையிடச் செய்து, அதைத் திரும்பச் செய்யாமலிருக்கும்படிச் சொல்லலாம். அபிஷேகம் பெறாவதவராயின் அபிஷேகத்துக்குள்

நடத்தவேண்டும். வேதவசனத்தில் அதிகமாய் வளர, அதை முறைப்படி வாசிக்க, தியானிக்க, அனுபவத்தில் கொண்டுவர போதிக்க வெண்டும்.

**4. குடும்பப்பிரச்சனையுள்ளவர்கள்:**

குடும்ப வாழ்க்கையில் பலவிதமான காரியங்களை குறித்த கேள்விகள் எழும்பலாம்.

## குடும்பத்திட்டம்

இன்று உலகமெங்கும் மக்கள் தொகை பெருகிவிட்டது. உலகிலேயே சீனாவிலும், இந்தியாவிலும்தான் மக்கள் தொகை மிக அதிகம். சீக்கிரம் சீனாவாவைவிட இந்தியா முந்திவிடும் என நம்பப்படுகிறது. இதற்காக இந்திய அரசாங்கம் குடும்பநலத் திட்டங்களை வகுத்துள்ளது.

*உதாரணம்:*

- ''அளவான குடும்பம் வளமான வாழ்வு.''
- ''சிறு குடுபம் ஒரு சிங்காரத் தோட்டம்.''
- ''திட்டமிட்ட குடும்பம் திகட்டாத இன்பம.''
- ''நாம் இருவா் நமக்கு இருவா்.''
- ''நாம் இருவா் நமக்கு ஒருவா்.''
- ''நாமே குழந்தைகள் நமக்கேன் குழந்தைகள்.''
- ''முதல் பிள்ளைக்கு முந்திக்கொள்ளாதேயுங்கள்,
  இரண்டாவது பிள்ளைக்கு இடைவெளிவிடுங்கள்,
  மூன்றாவது பிள்ளைக்கு முற்றுப்புள்ளி வையுங்கள்.''

திருமணமாகாத போதகா் ஆலோசனைக்கு வருபவா்களிடம் கவனமாக நடந்து கொள்ள வேண்டும். கா்த்தரையறிந்த ஒரு நல்ல கிறிஸ்தவ டாக்டரிடம் ஆலோசனைக்கு அனுப்பலாம். காலம் இல்லாவிடில் நம்பிக்கைக்குப் பாத்திரமான வேறொரு குடும்பப்போதகா் அல்லது சபையில் உதவியாயிருக்கின்ற ஒரு குடும்பத்தினிடம் ஆலோசனைக்கு அனுப்பலாம். போதகா் திருமணமானவரானால் மனைவியின் மூலம் பெண்களுக்கு ஆலோசனை கொடுக்கலாம். குடும்பநலத் திட்டம் பற்றிய நல்ல நூல்களைப் படிக்கும்படி ஆலோசனை கொடுக்கலாம். கூடுமானவரை தனிமையில் பெண்களுக்கு ஆலோசனை கொடுப்பதைத் தவிா்க்க வேண்டும். ஆண்களாக இருந்தால் வேதவசனத்தின் அடிப்படையில் பெற்றோா், பெறியோா் பிறா் வாழ்க்கையில் கண்டவற்றை ஆலோசனையாகக் கூறலாம்.

**5. பிள்ளைகளைக் குறித்த காரியத்தில் ஆலோசனை கூறுதல்:**

கீழ்ப்படியாத பிள்ளைகள், பிள்ளைகள் படிக்க வேண்டிய பள்ளிக்கூடம், அவா்கள் தெரிந்தெடுக்கும் பாடங்கள் ஆகியவற்றைக்குறித்து ஆலோசனை கேட்க உங்களிடத்தில் வருவாா்கள். ஒரு போதகா் ''பிள்ளைகள் வளா்ப்பு'' குறித்து சபைகளில் பிரசங்கிக்க வேண்டும். பெற்றோருக்கென முகாம் நடத்தி, அநேக காரியங்களை அவா்களுக்குப் போதிக்க வேண்டும். நம்மிடத்தில் ஆலோசனைக்கு வருகிறவா்களுக்கு போதிக்க தனது ஆவிக்குரிய ஆலோசனையினால் அவா்கள் குடும்பத்தை நல்லமுறையில் கட்ட வாய்ப்புள்ளது. வேதவசனத்தின் அடிப்படையில் ஆலோசனை சொல்லாமேயொழிய தீா்மானமாக (ஆலோசனை) சொல்லக்கூடாது.

**6. ஒரு குடும்பத்திற்கு எத்தனை பிள்ளைகள்? அவா்களை எப்படி வளா்ப்பது என்பதைக் குறித்த ஆலோசனை:**

ஒரு குடும்பத்திற்கு எத்தனை பிள்ளைகள் தேவை என்பதைக் குறித்து திருமணத் தம்பதிகள் ஆலோசனை கேட்டால், இன்றைய சூழ்நிலையில் ஒரு சாதாரண குடும்பத்திற்கு ஒன்று அல்லது இரண்டு பிள்ளைகள் போதும் என ஆலோசனை சொல்லாம். தீா்மானமாகச் சொல்லக்கூடாது. பிள்ளைகள் பெறுவது ஒரு ஆசீா்வாதம். பிறந்த பிள்ளைகளைக் கட்டிக்காப்பது மிகப்பெரிய உத்திரவாதம். இதை ஒருபோதும் மறந்துவிடக்கூடாது. பெற்றோா்கள் பிள்ளைகளை எப்படிக் காப்பற்ற வேண்டும், வளா்க்க வேண்டும், போதிக்க வேண்டும் என்பதையெல்லாம் குழந்தைகளுள்ள பெற்றோா்களுக்கு விசேஷித்த ஆலோசனை வகுப்புமூலம் போதிக்கலாம்.

- வயிற்றிலிருக்கும்பொழுதே அப்பிள்ளைக்காக கையை வயிற்றில் வைத்து ஜெபிக்க வேண்டும். ஆவிக்குரிய பாடல்களை பாடவேண்டும். உளவியல் பிரகாரம் வயிற்றிலிருக்கும் பிள்ளைக்கு இதனால் ஆவிக்குரிய உணர்வுகள் உருவாகுமாம்.

பிறந்த பிள்ளைகளுக்கு வீட்டிலிருக்கும்போதே குடும்ப ஜெபம், வேதாகமக் கதைகள் போதித்தல், ஞாயிறு பள்ளிக்கும் ஆலயத்திற்கும் ஆவிக்குரிய கூட்டங்கள் ஆகியவைகளுக்கு பிள்ளைகளை அழைத்துச் செல்லுதல், நல்ல மாணவருடன் ஐக்கியம் கொண்டு, தீயதை விட்டுவிடக் கற்றுக்கொள்ளுதல் போன்றவைகளைச் சொல்லித்தரவேண்டும். டி.வி. நிகழ்ச்சிகளை பல மணி நேரம் பார்த்தால் கண்ணுக்கு கெடுதி, பார்வையை பாதிக்கும், படிக்கும் வாஞ்சை குறயையும், பாவ வாழ்க்கையில் இளமையிலேயே நடத்தும். விபச்சாரம் வேசித்தனம், திருடுதல், சண்டை போடுதல், பழிவாங்குதல் போன்ற காட்சிகள் ஆவிக்குரிய வாழ்க்கையை பாதிக்கும். குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்கி எவைகளைப் பார்க்க வேண்டும் என நிர்ணயுங்கள். நீங்களும் அமர்ந்து சரியான நிகழ்ச்சிக்கு பிள்ளைகளை வழி நடத்துங்கள்.

இன்றைய சூழ்நிலையில் ஒரு நல்ல பள்ளியில் கல்வி கற்பதை அறிவுரையாக கூறலாம். ஏனெனில் சில பள்ளிகளில் ஆசிரியர்கள் சரியாகப் போதிப்பதில்லை. சில இடங்களில் பிள்ளைகளைக் கண்டுகொள்வதே கிடையாது. இதனால் சிகரெட் பாவித்தல், போதைப்பழக்கம் போன்றவை பரவலாகக் காணப்படுகின்றன. கீழ்ப்படியாத பிள்ளைகளுக்காக ஜெபித்தல், அவர்களைத் தனியாக வைத்து அறிவுரை சொல்லுதல், தவறை திரும்பத் திரும்பச் சொல்லாதிருத்தல் போன்றவற்றைப் பெற்றோருக்குச் சொல்லிக்கொடுத்தல் வேண்டும். இந்த மாதிரி ஆலோசனைக்கு வரும்போதும் அவ்வப்போது ஆவியானவரின் வழிநடத்துதலின்படி பிசங்கம் செய்யலாம், ஆலோசனையும் கூறலாம்.

*பிள்ளை வளர்ப்பதைக் குறித்த வேதவசனங்கள்:*
உபா.6:1-10; யாத்.20:12; நீதி.1:8, 9; 13:24; 20:11, 20; 22:6; 23:13, 14.

**7. விசுவாசிகள் மத்தியில் வரும் பிரச்சனைக்கு ஆலோசனை கூறுதல்:**
அ) குடும்பப் பிரச்சனைகளைத் தீர்த்து வைத்தல்:
குடும்பத்தில் ஏற்படும் பிரச்சனையின் காரணமாக சபைக்கு வருபவர்கள், விசுவாசிகள் வீட்டில் மனமுறிவோ, பிரிவினையோ, ஏற்பட்டிருந்தால் அப்படிப்பட்டவர்களிடம் தனித்தனியாகப் பிரச்சனைகளைக் கேட்டறிந்து, அவர்களை ஒன்றாகக்கூட்டி, நேருக்கு நேராக சொல்லும்படி செய்து, இறுதியில் தங்கள் ஆலோசனையைச் சொல்ல வேண்டும்.

இருவரையும் நேருக்கு நேராக சொல்ல வைப்பதால், பிரச்சனையுள்ளவர்கள் பொய்சொல்வதைக் கூட்டிக்குறைத்துக் கூறுவதை அபாண்டமான பழிபோடுவதைத் தவிர்க்க வாய்ப்புகள் உள்ளன. ஒருவரைத் தனியாகக் கூப்பிட்டுக் கேட்கும்போது பிறரிடம் காணப்பட்ட குறைகளை மாத்திரம் கூறுவார்கள். தங்கள் தவறுகளை ஒரு சிலர் சொல்லுவார்கள். பலர் மறைத்துவிடுவார்கள். வந்தவரிடம் யாரைக் குறித்துக் குற்றம்சாட்டினாரோ அவர் முன்னிலையில் அத்தவறுகளைச் சொல்ல ஆயத்தமா? வருவாரா? என்று கேட்கவேண்டும். ''ஜெபித்தால் போதும் எனது ஆறுதலுக்காக உங்களிடம் வந்தேன்'' எனக்கூறுவார்களாயின் அந்த நேரமே அவருக்காக ஜெபித்துவிட்டு அந்த பாரத்தைக் கர்த்தர்மேல் வைத்துவிட வேண்டும்.

போதகர் கேட்ட பிரச்சனையைத் தனக்குள்ளாக வைத்து, மனதில் நொம்பலப்பட்டு, தவறு செய்தவர்களைக் காணும்போது எரிச்சலடையாமல் தானொரு மத்தியஸ்தர் என்பதை மாத்திரம் மனதில் வைக்கவேண்டும். தேவனே நீதிபதி. எனவே ஒரு போதகர் இயேசுவை மறக்காமல் பின்பற்றவேண்டும். இல்லையெனில் ஊழியரிடம் கசப்பு உருவாக வாய்ப்பு உண்டு.

## கடன் பிரச்சனைக்குரிய ஆலோசனை

கூடுமானவரையில் விசுவாசிகளுக்கு கடன் வாங்கக்கூடாது எனப் போதனை தரவேண்டும். கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள் அவருடைய கற்பனையைப் பின்பற்றுகிறவர்கள் ஆசீர்வாதமாக இருப்பார்களென வேதம் சொல்லுகிறது. (உபா.28:8-12; சங்.1:12; 8:1, 2) கர்த்தருடைய பிள்ளைகளை தேவன் கைவிட்டதே கிடையாது. அவர்களுடைய தேவைகளைக் காலாகாலங்களில் தேவன் அற்புதமாய் சந்தித்துள்ளார். (சங்.34:10; 37:25; 71:6, 18) விசுவாசிகள் பொருளாதார

விஷயத்தில் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். வருவாய் முழுவதையும் செலவழிக்காமல் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். (ஆதி.41:33-36; நீதி.6:6-8; 30:25) குறைந்த சம்பளமாக இருந்தாலும் மிகவும் முக்கியமான காரியங்களுக்கு மட்டும் பணத்தை செலவு செய்யவும், வீண் செலவுகளைத் தவிர்க்கவும் போதிக்க வேண்டும். கடனாக எதையும் (பணத்தை) வாங்கவேண்டியதிருந்தால், அதைக் கொடுக்கத் தகுதியிருந்தால் மாத்திரமே வாங்க வேண்டும். இல்லையென்றால் வாங்கவே கூடாது.

<u>வேதம் போதிப்பது என்னவெனில்:</u>

1. "நீயோ கடன் கொடுப்பாய்." (உபா.28:12)
2. "அன்பு கூறுகிற கடனேயல்லாமல்." (ரோமர் 13:8)
3. "சுவிசேஷத்தை அறிவிக்கக் கடனாளி." (ரோமர் 1:14)

நாம் பிறருக்குக் கடனாக எதையும் கொடுத்திருந்தால் அதை எழுதி வைக்க வேண்டும். குடும்பத்தாருக்குத் தெரிவிக்கவேண்டும். கடன் வாங்கினவர் தனக்கு கடன் கொடுத்தவர் கேட்கும்வரைக்கும் பொறுத்திருக்கக்கூடாது. கேட்டால் கொடுப்போம் என்றும் இருக்கக்கூடாது. உடனே திருப்பி கொடுக்கப் பிரயாசப்பட வேண்டும். வருகிற பணத்திற்கு வரவு செலவு கணக்கு வைக்க வேண்டும். அத்தியாவசியமான பொருட்களின் அட்டவணையைத் தயார்செய்து முக்கியமானதை மட்டும் வாங்கவேண்டும், மாத முடிவில் வேறுசில பொருட்களை வாங்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அதையும் அட்டவணையில் அடுத்த மாதம் சேர்க்கலாம்.

அ) முக்கிய தேவைகள்:

1. தசமபாகம்: இதையே முதல் காரியமாக செய்ய வேண்டும்.
2. வீட்டுவாடகை மாதம் முதல் வாரம்
3. மின்சாரம் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை.
4. உணவு, அரிசி, பருப்பு, எண்ணெய், பால், காய்கறி போன்றவைகள் (சோப்பு, பல்பொடி)
5. பிள்ளைகளின் படிப்பு: பள்ளிக்கட்டணம், பேனா, பென்சில், நோட்டுப் புக், பஸ் கட்டணம்.

ஆ) சாதாரண தேவைகள்: (மிக முக்கியமானவைகள் அல்ல)

1. உடைகள் (விழாக்கள், பிறந்த நாளுக்காக தைப்பவை)
2. விசேஷித்த உணவு: கோழி, ஆட்டிறைச்சி
3. குக்கர், மாவு அறைக்கும் மிஷின் போன்றவை, துவைக்கும் இயந்திரம்.
4. (விளையாட்டு) பொருட்கள்.

இ) தேவையற்றவை:

ஆடம்பர செலவு, வெளிநாடு செல்லல் (சுற்றுலா), பிறந்தநாள் விழா.

## பாகப்பிரிவினை

இந்தியக் குடும்பங்களில் பெரும்பாலானோர் இந்தப் பிரச்சனையால் பாதிக்கப்படுகின்றனர். மூதாதையர் அல்லது பெற்றோர் தங்கள் சொத்துக்களை சரியாகப் பகிர்ந்து கொடுக்காததினால் அல்லது எழுதி வைக்காததினால் பிள்ளைகளிடையே சச்சரவுகள் ஏற்பட்டு நீதிமன்றம் அல்லது காவல் துறையினரிடம் சென்று இறுதியில் சொத்தையே இழக்கக்கூடிய நிலைக்கு ஆளாகின்றனர்.

குடும்பங்களிடயே தீரா பகை உருவெடுத்துக் காணப்படுகிறது. இப்பிரச்சனையைத் தவிற்பதற்கு பெற்றோர்கள் ஆரம்த்திலிருந்தே திட்டமிட்டு தேவ சித்தத்தின் அடிப்படையில் செயல்பட வேண்டும். (உதாரணம்) ஒரு பெற்றோர் வீட்டைக் கட்டினால் அவர்களுக்கு 2 பிள்ளைகள் இருந்தால் இருவருக்கும் பகிர்ந்து கொடுக்கும் வண்ணம் வீட்டைக் கட்டவேண்டும் அல்லது தனித்தனியாக இரு வீடுகளைக் கட்டவேண்டும். ஒரே வீடாக இருந்தால் பிள்ளைகள் பெரியவர்களாகும்போது அவர்களில் யாராவது ஒருவர் வீட்டை விலைக்கு வாங்கலாம். வீட்டின் மதிப்பு ஒரு இலட்சம் என்றால் அண்ணன் தனது தம்பிக்கு ஐம்பது ஆயிரம் கொடுத்துவிட்டு வீட்டைத் தான் எடுத்துக் கொள்ளலாம். இக்காரியத்தை எழுத்து மூலம் சட்ட ரீதியாக செய்ய வேண்டும். இவர்களுக்கு வசதி இல்லையெனில் அவ்வீட்டை உறவினர்களுக்கானது, வேறொருவருக்காவது விற்று, இருவரும் சமமாகப் பகிர்ந்துகொள்ள வழிவகுக்க வேண்டும். வீடில்லாத பெற்றோர் பிள்ளைகளுக்கு என அவர்கள் பெயரில் சிறுசேமிப்புத் திட்டத்தைத் தொடங்க

வேண்டும். பெற்றோர்களிடத்தில் ஒரு கனிசமான தொகை இருக்குமெனில் அதை வங்கியில் சேமித்து வைத்து, அதிலிருந்து வரும் வட்டித்தொகையை தங்கள் வாழ்க்கைத் தேவைக்கு உபயோகிக்கலாம்.

தனிநபர்கள், அதிகமாக வட்டி கொடுக்கிறோம் என நடத்தும் நிறுவனத்தில் பணத்தை எக்காரணம் கொண்டும் சேமித்து வைக்கக்கூடாது. திடீரென அந்நபர் ஊரைவிட்டே பணத்துடன் ஓடிவிடலாம். எந்தப் பிள்ளை ஒழுங்காகப் பெற்றோர்களைக் கவனிக்கிறதோ அதற்கு பணத்தை ஒரு பாகம் கூடக்கிடைக்குமென்றால் பிள்ளைகள் போட்டிப்போட்டுக் கொண்டு பெற்றோரை கவனிப்பார்கள். பிள்ளைகளும் தங்களுக்குக் கிடைக்கும் அன்பளிப்புப் பணத்தை சேமித்து வைக்கும்படி உற்சாகப்படுத்த வேண்டும். விசுவாசிகளிடையே பாகப்பிரிவினை குறித்த பிரச்சனை இருக்கும்போது அவர்கள் போதகரிடம் வந்தால், இருதரப்பினரிடமும் தீர விசாரித்து, வேதவசனத்தின் அடிப்படையில் ஆலோசனை கொடுக்கவேண்டும்.

## வீட்டு வாடகை

இன்றைய நாட்களில் சொந்தவீட்டை வாடகைக்குக் கொடுப்பவர்கள் பெரும் அவதிக்குள்ளாகின்றனர். மக்கள் பெருக்கம், அக்கிரமத்தின் அதிகரிப்பு சட்டத்தை நிறைவேற்ற முடியாத சூழ்நிலை போன்றவை காரணங்களாக இருக்கின்றன. இதற்கு செய்தித் தாளில் அனுதினமும் வரும் செய்திகள் ஆதாரமாக இருக்கின்றன. விசுவாசிகள் பணநெருக்கடியின் நிமித்தமாக அல்லது உபயோகத்தில் இல்லாத ஒரு பகுதியை (வீட்டில்) வாடகைக்கு வந்தவர்களுக்கு எழுதிக் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். அப்படி எழுதிக்கொடுத்தால், தெய்வபக்தியுள்ள அல்லது மனசாட்சி, சட்டத்தை மதிக்கின்ற ஒரு அனுபவமுள்ள வக்கீல் மூலம் 11 மாதத்திற்கு மட்டும் (என) வீட்டை வாடகைக்கு விடுவதாக எழுதி, அதை (ரிஜிஸ்டர்) பதிவு அலுவலகத்தில் ரிஜிஸ்டர் பண்ண வேண்டும். 11 மாத முடிவில் குடியிருந்தவர்களிடம் எழுத்து மூலமாக (அவர்களைக் காலிபண்ண வேளையில்) எழுதி வாங்கிக் கொள்ள வேண்டும்.

வீட்டுப் பொருட்களைக் குறித்த அட்டவணை இருந்தால் (உம்) மேஜை, நாற்காலி, கட்டில், டியூப் லைட்டுகள் போன்றவை. அதை வைத்து எல்லாம் இருக்கிறதா எனப்பார்த்துக்கொள்ள வேண்டும். வாடகைக்குக் கொடுக்கும் வீட்டில் மின் வசதி இருக்குமெனில், அந்த குடியிருப்பில் சப் மீட்டர் மாத்திரமே வைத்து சிரமம் பாராமல் கட்டணத்தை வசூலித்து அதை செலுத்தி ரசீதுகளைப் பத்திரமாக வைக்கவேண்டும். சில வாடகைக்காரர்கள் வீட்டைக் காலிபண்ணாதபடி அவர்களுடைய வீட்டையே அபகரிக்க முயற்சி செய்வதிலிருந்து, நீதிமன்றத்திற்குச் சென்று படாதபாடுபடுவதிலிருந்து தங்களைக் காத்துக்கொள்ள முடியும்.

குடியிருப்பவர்கள் மாதந்தோறும் 5–ஆம் தேதிக்குள் பணம் கொடுத்தால் அதற்கு ரசீது கொடுக்காமல் பணமாக வாங்கி வீட்டுக்காரர் தான் வைத்திருக்கும் குறிப்பேட்டில் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட செயல் விசுவாசிகளைக் குடியிருப்பவர்கள் அறிந்தோ, அறியாமலோ ஏமாற்றாதிருக்க, துரோகம் செய்யாமலிருக்க உதவும்.

வாடகைக்குவிடும் வீட்டில் கட்டில், நாற்காலி, காற்றாடி, மேஜை போன்ற பொருட்கள் இருக்குமெனில் அதற்கு ஒரு பட்டியல் தயாரித்து குடியிருப்பவர்களிடம் கையெழுத்து கொடுத்தால் அதற்கு ரசீது கொடுக்கக் கூடாது. சொந்த குறிப்பு நோட்டில் மாத்திரம் குறித்துக் கொள்ளல் வேண்டும். காலிபண்ணும்போது பணத்தை திருப்பிக் கொடுக்க வேண்டும். எக்காரணம் கொண்டும் ஏமாற்றக்கூடாது.

## குழப்பமடைந்த விசுவாசிகள்

சில சமயங்களில் தனிப்பட்ட வாழ்க்கையில் குடும்பத்தில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தினால் மனமடிந்து வேதனையோடு இருப்பவர்களைக் காணமுடிகிறது. ஒருவர் தனது வியாபாரத்தில், தனது தோட்டத்தில் விவசாயத்தில் ஏற்பட்ட பாதிப்பினால் மனமடிந்து காணப்படலாம். போதகர் அவர்களைச் சந்தித்து ஆறுதல் கூறி ஜெபிக்க வேண்டும் அல்லது அவர்கள் ஆலோசனைக்கு நம்மிடம் வந்தால் அவர்களுக்காக ஜெபித்து, வசனத்தின் மூலம் அவர்களை உற்சாகப்படுத்தி, நம்பிக்கையை இழக்காமல் மறுபடியும் வியாபாரத்தில் முயற்சிசெய்ய அவர்களை ஊக்குவிக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையில் சபையின் மூலம் உதவி செய்ய முடியுமானால் செய்ய முயற்சிக்கலாம். சபையின் மூலம் ஒருவரோ சிலரோ பரீட்சையில் தோல்வியடைந்தால் பெற்றோரின் வெறுப்புக்கு ஆளாகலாம். இப்படிப்பட்டவர்களை சந்தித்து தனிப்பட்ட முறையில் ஆலோசனை கொடுத்து நன்றாய்

படிப்பதற்கும் அல்லது வாலிப வயதில் வாழ்க்கைப் பிரச்சனையில் மாட்டிக் கொள்ளாமல் இருக்க உதவி செய்யலாம்.

## திருமண ஆலோசனை

சபயையின் வாலிப ஆண்கள், பெண்களிடையே காதல் பிரச்சனை வராதபடி போதகர் ஆலோசனை கொடுக்க வேண்டும். சபையிலுள்ள ஒருவர் வேறு சபையில் உள்ள ஒருவரை அல்லது பக்கத்து வீட்டு ஆளை, கிறிஸ்தவரல்லாதவரை விரும்பி விவாகம் செய்ய எண்ணிக்கொண்டிருக்கலாம். இன்றைய நாட்களில் வாலிபர்களிடையே காதல் பிரச்சனை அதிகமாக உருவெடுத்துள்ளது. அதற்கு டி.வி, சினிமா, காதல் புத்தகங்கள், நண்பர்கள் சூழ்நிலை காரணங்களாக அமைந்துள்ளன. ஒருவருடைய விருப்பத்தில் (காதல்) பல பிரச்சனைகள் (சிக்கல்கள்) உள்ளன.

1. ஒரு கிறிஸ்தவர் கிறிஸ்தவரல்லாதவரை விரும்புதல் அல்லது (காதலித்தல்) சமயப் பிரச்சனை.
2. வித்தியாசமான இனத்தைச் சொ்ந்தவரை விரும்புதல் (ஜாதிப் பிரச்சனை).
3. இரட்சிக்கப்படாத நபரை விரும்புதல் - (நம்பிக்கைப் பிரச்சனை).
4. அதிக படிப்புள்ளவரை குறைந்த படிப்புள்ளவர் விரும்புதல் (நுண்ணறிவு பிரச்சனை).
5. கிராமத்து நபர் பட்டணத்து நபரை விரும்புதல் (சூழ்நிலை பிரச்சனை).
6. பெந்தெகோஸ்தே நபர், வேறு பெயர் கிறிஸ்தவ (சபையினரை) நபரை விரும்புதல் (உபதேச பிரச்சனை).
7. இந்தியர் ஒருவர் வெளிநாட்டினரை (வெள்ளைக்காரரை) விரும்புதல் (கலாச்சார பிரச்சனை).

திருமணம் என்பது பாவமல்ல. திருமணம் தெய்வீகமானது ஆதாமும் ஏவாளும் பாவம் செய்வதற்கு முன்னர் அவர்களை இணைத்த ஆண்டவர், அவர்கள் கனியை புசித்த பின்னரும் அவர்களைப் பிரித்தோ, பின் சந்ததியார் திருமணம் செய்யாதிருக்கவோ தடைவிதிக்கவில்லை. காயீன் கர்த்தருக்கு விரோதமாகப் பாவம் செய்தபின் அவன் கர்த்தரைவிட்டு விலகி, திருமணம் செய்து சுயமாக வாழ்க்கை நடத்தினதைக் காண்கிறோம்.

1. வேதத்தில் காணப்படும் திருமணங்கள் (பலவிதம்):

விசுவாசத்தின் அடிப்படையில் தன் இனத்திலுள்ள ஒருவரை உறவினரைத் தெரிந்தெடுத்தல் (ஆதி.24:3, 4) ஈசாக்கு.

மாமா மகளை திருமணம் செய்தல். உம். யாக்கோபு. உறவின் அடிப்படையில் விவாகம் செய்தான். (மாமா மகளை திருமணம் செய்தான்) (ஆதி.29:18-24; 26:35; 27:46; 26:1).

2. விருப்பத்தினடிப்படையில் (கர்த்தருக்கு உட்பட்டவன், தனக்கு விருப்பமானவர்) விவாகம் செய்தல். புதிய ஏற்பாட்டில் கணவனை இழந்த பெண்மணி அல்லது மனைவியை இழந்த ஒருவர் கர்த்தருக்குட்பட்ட, தனக்கு விருப்பமான நபரை திருணம் செய்யலாம் என வேதம் போதிக்கிறது. (1கொரி.7:39) இம்முறையைதான் பெரும்பாலான மக்கள் பின்பற்றுகின்றனர்.

3. தேவனின் பரிபூரண சித்தத்தின்படி தேர்ந்தெடுத்தல் (ரூத் 1:16, 17) (“உம்முடைய தேவன் என்னுடைய தேவன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்”). ரூத் தனது மாமியாகிய நகோமியிடம் உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்று தன்னை தேவனின் பரிபூரண சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தாள். நகோமி ஒரு யூதப் பெண்மணி, ரூத் ஒரு மோவாபியப் பெண்மணி. (ரூத் 2:11) ரூத் கர்த்தருக்கு தெய்வீக திருமணத்திற்கு கீழ்ப்படிந்ததால் இன்றைக்கும் அவள் ஒரு சாட்சியாக இருக்கின்றாள்.

(ஏசா.55:6) காதல் திருமணங்கள் பெரும்பாலும் பிரச்சனையில் முடிவடைகின்றன. சினிமாவில் வாட்டசாட்டமான ஆளத்துவமுள்ளவர்களை நடிக்கவைப்பார்கள். காதலன், காதலியை பார்ப்பதற்கு எடுப்பாக தோற்றமளிப்பார்கள். இதைப் பார்ப்பவர்கள் அழகின் அடிப்படையிலேயே திருமணம் செய்ய விரும்புகின்றனர். அல்லது விவாகம் செய்து, ஜாதிப்பிரச்சனை, குடும்பத்தினர் பிரச்சனை, கலாச்சாரம், புரிந்துகொள்ள முடியாமை போன்றவைகளால் பாதிக்கப்படுகின்றனர். (நீதி.31:10, 30).

இந்திய கலாச்சாரத்தின்படி திருமணமானது பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டு பல நூற்றாண்டுகாலமாக நடைமுறையிலிருந்து வருகிறது. முன்னேற்றமடைந்த சில தேசங்களில் கம்ப்யூட்டர் மூலம் திருமணம் ஒழுங்கு செய்கின்றனர். உ.ம். டாக்டருக்கு டாக்டர், ஆசிரியருக்கு ஆசிரியை. நமது சபைகளில் வேதத்தின் அடிப்படையில் இரட்சிப்பு, அபிஷேகம், அழைப்பு, படிப்பு, பண்பாடு, தொழில் இவற்றினடிப்படையில் ஒரு பெண்ணையோ, ஆணையோ ஒரேவிதமாக எல்லாரையும் நேசிக்கிற அனுபவமுள்ள ஒருவரை திருமணம் செய்யும்படி போதகர் ஆலோசனை கூறலாம்.

## மனத்தாங்கல் உள்ள சண்டைபோடும் அங்கத்தினர்

ஒரு குடும்பத்தில் பெற்றோர், மாமியார், மறுமகள் இவர்களிடையே வாக்குவாதங்கள், பிரிவினைகள், பேதங்கள் ஏற்பட வாய்ப்பு வருகிறது. விசுவாசிகளிடையே பிரச்சனைகளும் ஏற்படலாம். இப்படிப்பட்ட காரியங்களைத் தவிர்க்க போதகர், பொதுவான பிரசங்கத்தின் மூலம், நல்ல ஆலோசனை மூலம் (கூறி) சமாதானத்தை உண்டுபண்ணலாம்.

**வேதாகமத்தின் அடிப்படையில், உளவியல் அடிப்படையிலும் ஆலோசகரின் தகுதிகள்:**

1. மக்கள் தங்களுக்கு நன்கு தெரிந்தவர்களிடமே ஆலோசனைக்குச் செல்வார்கள்.
2. தாங்கள் விரும்புகிற, கனம்பண்ணுகிற ஒருவரிடமே ஆலோசனைக்குச் செல்வார்கள்.
3. ஆலோசனை ஊழியத்தில் ஆர்வமுள்ளவர்களிடத்தில் மாத்திரமே செல்வார்கள். இதற்கு பொறுமை தேவை.
4. திறமையுள்ளவர்களிடத்தில் மாத்திரமே ஆலோசனைக்குச் செல்வார்கள். (1. சாலமோனின் ஞானம், 2. வேசிகளின் பிரச்சனை தீர்வு – 1 இராஜா 3:16–28).
5. ஆலோசனை விதிகளை பின்பற்றுகிறவர்களிடத்தில் ஆலோசனைக்குச் செல்வார்கள். (உ.ம். நம்பிக்கைக்கும் பாத்திரவான்கள்).
6. தேவனை உண்மையாய் அறிந்தவர்களிடத்தில் ஆலோசனைக்குச் செல்வார்கள். (நீதி.1:7; 3:5–8).
7. சாட்சியின் ஜீவியம் செய்பவர்களிடத்தில் ஆலோசனைக்குச் செல்வார்கள். (அப்.6:3).

<u>ஆலோசனையின் விதிகள்:</u>

1. ஒரு ஆலோசகர் கவனத்ததுடன் உற்றுக் கேட்கிறவராய் இருக்க வேண்டும். இதற்குப் பொறுமை அவசியம்.
2. இளகிய மனதுள்ளவர்களாகவும் பாதிக்கப்படாதவர்களாகவும் இருக்க வேண்டும்.
3. ஒரு பிரச்சனையைக் கேட்டவுடன் வேதவசனத்தின் அடிப்படையில் ஆலோசனை கொடுத்துவிட்டு, உடனடியாக அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். சிறந்த ஆலோசகர் இயேசுவே. (ஏசா.9:6) பிரச்சனையிலுள்ளவர்களை ஒரு நல்ல கிறிஸ்தவ சபையில் ஐக்கியம் கொள்ளச் சொல்லலாம். ஆவிக்குரிய நூல்கள், ஒலி நாடாக்கள், வீடியோ கேசட்டுகள் போன்றவற்றைக் கொடுக்கலாம்.
4. நீங்கள் ஒரு மருத்துவர் அல்ல என்பதை மனதில் கொள்ள வேண்டும். மருத்துவப் பிரச்சனை இருக்குமாயின் ஒரு அனுபவமுள்ள மருத்துவரிடம் செல்ல ஆலோசனை கூறலாம். உங்களிடம் வருபவர் ஒரு மனநோயாளியாக இருந்தால் ஒரு சிறந்த கிறிஸ்தவ உளவியல் நிபுணர் அல்லது புகழ்பெற்ற மனநோய் மருத்துவரிடம் அனுப்பலாம்.
5. ஒரு போதகர் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலில்லாமல் எந்த ஆலோசனையும் சொல்லக் கூடாது. (யோ.14:16; சங்.33:8) அதைப்போன்று பிறர் சொல்லும் பிரச்சனைகளை நமது மனதில் வைத்துப் பாதிப்படையாமல் அதை ஆண்டவரிடம் சொல்ல வேண்டும்.
6. ஒருவர் சொல்லுகிற எல்லாவற்றையும் அப்படியே நம்பிவிடக் கூடாது. (யோசுவா 9:3–16).
7. பிறரைக் குறித்து எப்பொழுதும் உங்களிடம் குறை சொல்பவர்களைக் குறித்து எப்பொழுதும் எச்சரிக்கையாயிருங்கள். நம்மைக்குறித்து இந்த நபர் மற்றவர்களிடம் சொல்லமாட்டார்கள் என்பது நமக்கு எப்படித் தெரியும்.
8. ஜெபிக்கின்ற ஆலோசகர் எந்தக் காரியத்திற்கும் தேவனை சார்ந்திருக்கின்ற ஊழியர், பரிசுத்த வாழ்க்கை நடத்துகிறவர், ஆத்தும பாரமுள்ளவர், வேதவசனத்தை தினமும் வாசிக்கன்றவர் நிச்சயமாக நல்ல ஆலோசகராக இருக்க முடியும்.
9. இருவருடைய பிரச்சனை விவகாரங்களில் ஒருவருக்கும் பட்சபாதம் காட்டக்கூடாது. உண்மையை சொல்வதனால் ஒருவர் நம்மைப் பகைக்கலாம், எதிர்க்கலாம். இதனால் அதைரியத்திற்கோ, சோர்வுக்கோ இடம் கொடுக்கக் கூடாது. (நீதி.16:32, 22; 17:28; யாத்.3:2).

## ஆலோசனை ஊழியத்தில் ஞாபகத்தில் வைக்க வேண்டியவை:

1. ஆலோசனைக்கு வருகிறவர்கள் பிரச்சனை தலைக்கு மேல் ஏறி, காலம் கடந்து வருவார்கள்.
2. நம்மிடத்தில் வருகிறவர்கள் பல எண்ணங்களோடு வருவார்கள். (உ.ம்) ஒரு அதிசயம் நடக்க, தாங்கள் எதிர்பார்த்தது நடைபெற.
3. ஏற்கனவே ஒரு பதிலை மனதில் வைத்துக்கொண்டு, அக்கருத்துக்கு உறுதி கிடைக்குமா என்று எதிர்பார்ப்பார்கள். இல்லையெனில் நம்மைக் குறை சொல்லுவார்கள்.
4. பிறர் நம்மிடம் வந்து பிரச்சனைகளைச் சொல்லும் பொழுது தங்களைக் குறை சொல்லாத அளவுக்குக் காட்டிக்கொள்வார்கள்.
5. நாம் நம்பிக்கைக்குப் பாத்திரவான்களாய் இருந்தால் மாத்திரமே நம்மிடம் வருவார்கள்.
6. தங்கள் தவறுகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாத நிலைமையில் வருவார்கள்.
7. பலர் நம்பிக்கையோடும், விசுவாசத்துடனும் நம்மிடத்தில் வருவார்கள்.
8. பரம பிதா ஒரு ஊழியரின் ஆலோசகர் (சங்33:8). இயேசு கிறிஸ்து ஆலோசனை கர்த்தர் (ஏசா.9:6). பரிசுத்த ஆவியானவர் ஒரு சிறந்த ஆலோசகர் (யோ.14:16). வேதாகம புத்தகம் ஒரு ஆவிக்குரிய மனிதனின் அறிவுக் களஞ்சியம், பரலோகத்திற்குரிய ஆலோசனைகளையும், பூமிக்குரிய ஆலோசனைகளையும் போதிக்கின்றது.
9. ஜெபிக்கின்ற ஆலோசகர் எந்தக் காரியத்திற்கும் தேவனை சார்ந்திருக்கின்ற ஊழியர், பரிசுத்த வாழ்க்கை நடத்துகிறவர், ஆத்தும பாரமுள்ளவர், வேதவசனத்தை தினமும் வாசிக்கின்றவர் நிச்சயமாக நல்ல ஆலோசகராக இருக்க முடியும்.

## திருமணம் தொடர்ச்சி

<u>கேள்விகள்:</u>

- சொந்த இனத்தில் திருமணம் செய்யலாமா?

செய்யலாம் வேதவசனத்தில் ஆதாரம் உண்டு. ஈசாக்கின் திருமணம், யாக்கோபின் திருமணம்.

- நெருங்கியவர்களை திருமணம் செய்யலாமா?

பொதுவாக இந்தியாவில் தாயின் வழியில் மாமா மகள் அல்லது மகன் தகப்பனின் வழியில் அவரது தங்கையின் மகள், மகனை விவாகம் செய்கின்றனர். உளவியல் பிரகாரம் நெருங்கிய இனமானவர்களை உதாரணமாக ஒரு மகள் (பெண்) தனது மாமாவை (தாயின் சகோதரர்) திருமணம் செய்யும் பொழுது பூனைக் கண், அறிவு மங்கிய நிலை, சரீர கோளாருகள் ஏற்படலாம்.(Cerebral, Palsy)

- பிற குடும்பத்தை சேர்ந்தவர்களை திருமணம் செய்யலாமா?

செய்யலாம், ஆதாரம் ரூத்தின் திருமணம், யோசேப்பு எகிப்தில் ஆசாரியனின் மகளை விவாகம் செய்தான், மோசே எத்தியோப்பிய பெண்ணை திருமணம் செய்திருந்தான்.

கணவனை இழந்த கைம்பெண், ‘‘கர்த்தருக்குட்பட்ட, தனக்கு விருப்பமான’’ ஒருவரை திருமணம் செய்யலாம் என கூறுகிறது.

- சொந்த இனத்தில், குடும்பத்தில் திருமணம் செய்தால் அனுகூலங்கள் யாவை?

<u>அனுகூலங்கள்:</u>

உறவினராக இருந்தால் முற்பிதாக்களில் சொத்து குடும்பத்திலேயே இருக்கும் என்ற நம்பிக்கை.

உறவினர், சொந்த இரத்தம் என்ற இனப்பற்று ஏற்பட்டு, சண்டைகள் மோதல்கள் குறையும் என்ற நம்பிக்கை. அனுபவத்தில் பார்த்தால் அப்படி இல்லை.

அனனுகூலங்கள்:

மிகவும் நெருங்கிய இனத்தில் திருமணம் செய்பவரின் பிள்ளைகள் அறிவில் குறைந்து காணப்படலாம். மூளைப்பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. மிகவும் நெருங்கியவர்களை விவாகம் செய்தல் மருத்துவ ரீதியில் நல்லதல்ல. நெருங்கிய உறவினரை திருமணம் செய்யக்கூடாது என வெதாகமம் இயம்புகிறது.

முற்பகை குடும்பத்தில் உள்வர்களில் இருந்திருக்குமானால், அது தொடரலாம் அல்லது அந்த பகையை மாமனாரோ, மாமியாரோ மற்ற கணவனோ பிறரை சொல்லிக்காட்டி அதனிமித்தம் சச்சரவுகள், பிரிவினை ஏற்பட வாய்ப்பு உண்டு.

உதாரணம்:

ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் சொந்த இனத்தில் குடும்பத்தில் பெண் எடுத்து, பெண்ணின் வீட்டாருக்கு தங்களது மகனை விவாகம் செய்து கொடுத்தனர். திருமணமாகி வாழ்க்கை நடத்த கணவர் ஊருக்கு சென்றவள் திடீரென வாழாவெட்டியாக பெற்றோரிடம் திரும்பி வந்தாள். ஏனெனில் கணவன் ஒரு குடிகாரன், அவன் தன்னடைய மனைவியை அடித்து துரத்திவிட்டான். இந்நிலையில் அப்பெண்ணின் அண்ணன், தனது கணவனது குடும்பத்தில் இருந்து பெண்ணை திருமணம் செய்திருந்ததால் இந்தப் பெண்ணை வாழாவெட்டியாக வந்த பெண்ணின் குடும்பத்தார் கொடுமைப்படுத்தினார்கள் இதுதான் வாழ்க்கை.

இரட்சிப்பு, அபிஷேகம், பரிசுத்த வாழ்க்கை, ஆத்துமபாரம், உலகில் உள்ள அனைவரும் ஒரே கடவுளால் உண்டாக்கப்பட்டவர்கள் என்ற உணர்வு உள்ள குடும்பங்களில் பிரச்சனைகள் குறைவு.

## **BIBLIOGRAPHY:**


1. Anthony (Dr.) Class notes, *The Psychology of Religion*
   Bangalore: AIT, 2000.

2. Dalton, Class notes, *Pastoral Psychology*
   Singapore: Trinity Theological College, 1976.

3. Jayapalan.L, *Bhakthiyulla Kudumbam – Tamil* (A Devout Family) Madurai: Everest Press, 2002.

4. John Thannikal (Dr.) Class notes, *General Psychology* Bangalore: SABC, 1967.

5. Lester D. Crow and Alice Crow, *Readings in General Psychology* New York: Barus and Noble Incorporated, 1957.

6. Oden Thomas C. *Classical Pastoral Care* Vol. IV Secunderabad: O.M, 2005.

7. Prasantham, *Indian Case Studies in Therapeutic Counselling* Bangalore: ATC, 1994.